# வாழ்க்கைச் சுவடுகள்

(என் வாழ்வின் பதிவுகள்)



'கலாபூஷணம்' தம்பு துரைராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்கேதீஸ்வரம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் கலாசார மண்டபத்தில்
இப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.**




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கலாபூஷணம்' தம்பு துரைராசா

# வாழ்க்கைச் சுவடுகள்

(என் வாழ்வின் பதிவுகள்)

❖

2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்காத நினைவுகள்

திருவாசகம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபை செயலாளர்

**"கலாபூஷணம்" தம்பு துரைராசா**


**பதிப்புரிமை**

த. துரைராசா, 31 A, ஜானகி வீதி, கொழும்பு -04.

தொ. பே : 011 4852232

T. Thurarajah, 31A, Janaki Road, Colombo 04.

Tel : 011 4852232



**பதிப்பு 2016**

**அச்சுப் பதிப்பு**

யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

48B, புளுமெண்டல் வீதி, கொழும்பு-13.

தொ.பே : 011 2330195.


உ

எந்தவொரு காரியத்தை யார் செய்தாலும் அதற்கு எதிர்ப்பு இருப்பது இயல்பே. அந்த எதிர்பார்ப்பைக் கண்டு, நாம் மனம் கோணக்கூடாது. முன்வைத்த காலைப் பின் வைக்காது அந்த நல்ல காரியம் நிறைவேற உழைக்க வேண்டும். கண்ணியம், நேர்மை, துணிச்சல், முயற்சி இதுவே எனது வழிகாட்டி. திருவருளும், குருவருளும் கூடவே துணை நிற்கிறது.

பதிப்பாசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்து மதத்தவர்களாகிய நாங்கள் எங்கள் கலாசாரத்தில் தெய்வங்களை பல வடிவில் வழிபாட்டாலும் அவரவரது குலதெய்வமே உலக வாழ்க்கையில் அவரவரது செயல்பாட்டிற்கு முன்னிற்கும்.

பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்று அன்றி! நாம் வாழும் காலத்தில் நற்காரியம் ஏதேனும் ஒன்றில் ஈடுபட்டால் எம்மனத்திற்கு நிறைவைத் தரும்.



# சமர்ப்பணம்

பத்துமாதம் சுமந்தெடுத்த பாலகனாம் என்னை
பாசமிகு தந்தையின் கையில் பக்குவமாய்க் கொடுத்துவிட்டு
பரகதியடைந்த பாசத்தாய்,
ஆச்சிமுத்து தம்புவுக்கும்,
தந்தையின் நிழலதனில் வாழ்ந்த என்னை,
தங்கள் குழந்தையாக இத்தரணியில் வாழவைத்துத் தம்
வாழ்வுதனைத் துறந்து வானகம் சென்ற மாமிமார்
முத்தாச்சி கார்த்திகேயன்,
இளையாச்சி வீரவாகு அவர்களுக்கும்,

தொண்ணூறு வயது கடந்தும் தளரா உடல் உறுதியுடன்
தார்மீக வாழ்வில் இனிதே இல்லறம் நடாத்தி,
தூரநோக்கு வாழ்வுதனை எனக்கு அளித்துச் சென்ற
அன்புத் தந்தை
வல்லிபுரம் தம்பு அவர்களுக்கும்
உள்ளப் பூக்களால் மனம் நெகிழ்ந்த சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



*திருச்சிற்றம்பலம்*

**திருவாசகச் சிறப்பு**

தொல்லை யிரும் பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தமாக்கியதே – எல்லை
மருவா நெறி யளிக்கும் வாதவூரெங்கோன்
திருவாசகமென்னுந் தேன்.

நமச்சிவாய வா ஆழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசன்அடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி

ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப்பன் யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பதுவாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிப் கசிந்துஉள் உருகும்
நலன்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கடல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதேஅளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன் இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இல்லாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம் பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனேஓ என்று என்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம்பயின்றாடும் நாதனே
தில்லையில் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sivaburanam

*Thiruchchitrambalam*

Namachchivaya Vazga Nadhan Thaal Vazga
Imaippozudhum En Nenychil Ningadhan Thaal Vazga
Kogazi Aanda Kurumanidhan Thaal Vazga
Agamam Agininru Annippan Thaal Vazga
Egan Anegan Iraivan Adivazga

Vegam Keduththanda Vendhan Adivelga
Pirapparukkum Pinyagandhan Peygazalgal Velga
Purandharkkuch Cheyon Than Pungazalgal Velga
Karanguvivar Ulmagizum Kongazalgal Velga
Chiramguvivar Onguvikkum Chiron Kazal Velga

Ichan Adibotri Endhai Adibotri
Thechan Adibotri Chivan Chevadi Potri
NeyaThthe Ninra Nimalan Adi Potri
Mayap Pirappu Arukkum Mannan Adi Potri
Chirar Perundhurai Nam Thevan Adi Potri

Aradha Inbam Arulum Malai Potri
Chivan Avan Enchindhaiyul Ninra Adhanal
Avan Arulale Avan Thaal Vanangich
Chindhai Magizach Chiva Puranam Thannai
Mundhai Vinaimuzudhum Oya Uraippan Yan.

Kan Nudhalan Thangarunaik Kankatta Vandhu Eydhi
Ennudharku Etta Ezil Argazal Irainychi
Vin Niraindhum Man Niraindhum Mikkay, Vilangu Oliyay,
En Irandhu Ellai Iladhane Nin Perumchir
Polla Vinaiyen Pugazumaru Onru Ariyen

Pullagip Pudayp Puzuvay Maramagip
Pal Virugamagip Paravaiyayp Pambagik
Kallay Manidharayp Peyayk Kanangalay
Val Achurar Agi Munivarayth Thevaraych
Chellaa Ninra Ith Thavara Changamaththul



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ellap Pirappum Pirandhu Ilaiththen, Emberuman
Meyye Un Pon Adigal Kandu Inru Vidu Utrren
Uyya En Ullaththul Ongaramay Nintra
Meyya Vimala Vidaippaga Vedhangal
Aiya Enavongi Azndhu Aganra Nunniyane

Veiyyay, Thaniyay, Iyamananam Vimala
Poy Ayina Ellam Poy Agala Vandharuli
Meiygnanamagi Milir Kinra Meych Chudare
Enghanam Illadhen Inbap Perumane
Angnanam Thannai Agalvikkum Nal Arive

Akkam Alavu Irudhi Illaiy, Anaiththu Ulagum
Akkuvaiy Kappaiy Azppaiy Arul Tharuvaiy
Pokkuvaiy Ennaip Puguvippay Nin Thozumbin
Narraththin Neriyaiy, Cheyaiy, Naniyane
Matrram Manam Kaziya Ninra Maraiyone

Karandha Paal Kannalodu Neygalandhar Polach
Chirandhadiyar Chindhanaiyul Thenuri Ninnru
Pirandha Pirappu Arukkum Engal Perumaan
Nirangal Or Aindhu Udaiyay, Vinnorgal Eththa
Maraindhirundhaiy, Emberumaan Valvinaiyen Thannai

Maraindhida Mudiya Maya Irulai
Arambavam Ennum Arum Kayitraal Katti
Puramdhol Porththu Engum Puzu Azukku Mudi,
Malam Chorum Onbadhu Vayil Kudilai
Malangap Pulan Aindhum Vanychanaiyaich Cheiyya,

Vilangu Manaththal, Vimala Unakku
Kalandha Anbagik Kachindhu Ul Urugum
Nalam Than Iladha Chiriyerku Nalgi
Nilam Thanmael Vandhu Aruli Neelkadalgal Katti,
Nayit Kadaiyayk Kidandha Adiyerkuth

Thayit Chirandha Thaya Ana Thaththuvane
Macharra Chodhi Malarndha Malarchchudare
Thechane Then Aramudhe Shivaburane
Pasamaam Patru Aruththup Parikkum Ariyane
Nesha Arulburindhu Nenychil Vanycham Kedap



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Peradhu Ninnra Perungarunaip Payrare
Aara Amudhe Alavilap Pemmane
Oradhar Ullaththu Olikkum Oliyane
Neerai Urukki En Aruyiray Ninrane
Inbamum Thunbamum Illane Ullane

Anbarukku Anbane Yavaiyumay Allaiyumman
Shodhiyane Thunnirule Thonrap Perumaiyane
AdhiyAne Andham Naduvagi Allane
Irththu Ennai Atkonda Endhai Perumane
Kurthameiy Gnanaththal Kondu Unarvar Thamgaruththil

Nokkariya Nokke Nunukkariya Nun Unarve
Pokkum Varavum Punarvum Illap Punniyane
Kakkum Em Kavalane Kanbariya Pear Oliye
Arrinba Vellame Aththa Mikkaiy Nindra
Thorrach Chudar Oliyay Sholladha Nun Unarvay

Matramaam Vaiyagaththin Vevvere Vandhu Arivam
Thetrane Thetrath Thelive En Chindhanai Ul
Utrana Unnar Amudhe Udaiyane
Vetru Vigara Vidakku Udambin Ulgidappa
Aatren Em Aiya Arane O Enrú Enru

Porrip Pugazndhirundhu Poygettu Mey Anar
Meettu Ingu Vandhu Vinaippiravi Charame
Kallap Pulakkurambaik Kattu Azikka Vallane
Nal Irulil Nattam Payinru Adum Nadhane
Thillai Ul Kuththane Thenpandi Nattane

Allal Piravi Aruppane O Enru
Shollarku Ariyanaich Shollith Thiruvadikkiz
Sholliya Pattin Porul Unarndhu Sholluvar
Shelvar Shivapuraththin Ullar Shivan Adikkizp
Pallorum Eththap Panindhu.

*Thiruchchitrambalam*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வாழ்வின் நிஜங்கள் - பதிவுகள்

ஈழத்திருநாட்டின் வடமாகாணத்தின் தலைநகர் யாழ்ப்பாணம் 10 மைல் தூரத்தில் வடமேற்குப் பக்கமாக அமைந்துள்ள இடம் பிரசித்தி பெற்ற பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயம். அறிதுயில் ஆனந்த சயன மூர்த்தி இலக்குமி நாராயணர் சர்வலோக சீவராசிகளையும் காக்கும் காத்தல் கடவுளாக விளங்குகின்றார்.

யாழ் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற இரண்டு இலக்குமி நாராயணர் கோவில்கள் இருக்கின்றன. வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோவில், மற்றையது பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில்.

கண்ணீர் மல்கிக் கசிந்துருகி வாழ்த்தி வணங்குவோரின் குறை தீர்க்கும். கற்பகத் தருவாக இக்கோவில்கள் விளங்குகின்றன.

இலங்கையில் வேறு திருமால் கோவில்களில் நடைபெறாத புதுமையான நிகழ்வு பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேர் உற்சவத்தில் நடைபெறுகின்றது. அதாவது தேரில் தயிர் முட்டிகட்டித் தொங்கி உடைத்தல். இது தயிர் திருடி உண்ணும் மாயக்கண்ணனின் திருவிளையாடலை காண்பிக்கின்றது.

## திரு. திருமதி துரைராசா

பிறந்த இடம் : பொன்னாலை (தாய் மண்) தந்தை பிறந்த இடம் பாண்டியன் தாழ்வு (சுண்டுக்குழி) பொன்னாலை சுழிபுரம் கதிரவேற்பிள்ளை (வர்த்தகர், சோடா பானம் தயாரித்தல்) தனது மண்ணில் பெயர் சொல்லும் அளவுக்கு நிலபுலம் வாழ்க்கை வசதி படைத்தவராக வாழ்ந்தவர். இவரின் சகோதரிக்கும் கிருஷ்ணபிள்ளை என்பவருக்கும் மகனாகப் பிறந்தவர்தான் வித்துவான் க. கி (K. K.), நடராசா, இவரின் தம்பி இரத்தினசபாபதி இவர்களின் நெருங்கிய உறவினர் சின்னத்தம்பி பொன்னு தம்பதியர் இவர்களுக்கு இரு பிள்ளைகள். நாராயணபிள்ளை, ஆச்சிமுத்தி, நாராயணபிள்ளை முத்தாச்சி என்பவரை மணந்தார். ஆச்சிமுத்து தம்பு என்பவரை மணந்தார். ஆச்சிமுத்து – தம்பு தம்பதியினரின் ஏகபுத்திரன் துரைராசா ஆகிய நான் ஆவேன். எனது தந்தை வல்லிபுரம் – தம்பு. இவர் சுண்டுக்குழி பாண்டியன் தாழ்வு எனும் இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பாண்டியன் தாழ்வில் வாழ்ந்த திரு. முத்தையா முத்துக்குமார், மயில்வாகனம் சுந்தரம் இவர்களின் நெருங்கிய உறவினர்தான் வல்லிபுரம். இவர்கள் அக்காலத்தில் அவ்வூரில் பிரசித்திபெற்ற பண்பாளர்களாக இருந்தவர்கள். வல்லிபுரம் என்பவருக்கு இரு புதல்வர்கள் நான்கு புதல்விகள்.

1. சுப்பையா – தையலம்மை
   (நான்கு பிள்ளைகள்) 1. சிவகுரு, 2. பொன்னம்மா 3. சதாசிவம் 4. பூரணம்
2. தம்பு – ஆச்சி முத்து
   (ஒரு மகன்) துரைராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சின்னத்தங்கம் – சின்னத்தம்பி
(நான்கு பிள்ளைகள்) 1. சபாரத்தினம், 2. கனகசபை, 3. மீனாட்சி (பாய்க்கம்) 4. சந்திரசேகரி
4. பொன்னு – தம்பிப்பிள்ளை
(ஒரு பெண்பிள்ளை) தில்லைவனம்
5. முத்தாச்சி பிள்ளைகள் இல்லை.
6. இளையாச்சி பிள்ளைகள் இல்லை.

பொன்னாலையைச் சேர்ந்த ஆச்சிமுத்துவுக்கும் சுண்டுக்குழி பாண்டியன் தாழ்வைச் சேர்ந்த தம்புவுக்கும் மகனாக 1924 ஆம் ஆண்டு புரட்டாதி பதினாறாம் திகதி பிறந்தேன். எனது அம்மா எனது நான்கு வயதில் என்னை விட்டுப் பிரிந்து விட்டா. தந்தையின் ஊரிலேயே பிறந்து வளர்ந்தபடியால், தந்தையின் இரு சகோதரிகள் முத்தாச்சி, இளையாச்சி இருவரும் எங்களுடனேயே இருந்தனர். (அக்கால கூட்டுக்குடும்பம்) அவர்கள் அரவணைப்பிலேயே வாழ்ந்தேன். தாரமும் குருவும் தலைவிதி. அது என் வாழ்வினையும் நிர்ணயித்தது. குருவாக நான் வழிபடும் யோகசுவாமிகளிடம் ஒரு வயதிலே அனுக்கிரகம் பெற்றுவிட்டேன். எனக்கு ஒரு வயதாக இருக்கும்போது (அப்பாவின் சகோதரி இளையாச்சி மாமி சொன்னது) எனக்குக் கடுமையான காய்ச்சல் இருந்ததால், என்னைத் தூக்கிக் கொண்டு யோகசுவாமியிடம் போனதாகவும், அவர் அவனுக்கு ஒரு வருத்தமும் இல்லை. முன்னால் இருந்த பிள்ளையாரிடம் கொண்டு போய்விட்டு, வீட்டுக்கு கொண்டு போ என சாமியார் சொன்னதாகப் பின் எனக்குக் கூறினார். அவர் வாக்குப்படி தொண்ணூற்றிரண்டு வயது வரை என்னைச் சுகதேகியாக வாழ வைக்கும் குரு யோகர் சுவாமிகளே. பற்றுக பற்றற்றான் பற்றினை எனப் பரமகுருவின் அருளில் என்வாழ்வும் தூய்மையடைந்தது.

நான்காவது வயதில் அம்மாவைப் பிரிந்த நான் அப்பாவின் கண்காணிப்பிலேயே வளர்ந்தேன். அப்பாவும் பூநகரியிலுள்ள நிலபுலங்களைப் பார்த்து வந்தார். அப்பாவின் இரு சகோதரிகளான மூத்தாச்சியும், இளையாச்சியும் பாசமாய் பக்குவமாய் சமைத்துத் தருவார்கள். அப்பா உழைத்துத் தருவார். அம்மாவின் பிரிவை மூவரும் மறக்க வைத்தனர். எனது பள்ளி வாழ்வு, கொழும்புத்துறை இந்து பாடசாலையில் ஆரம்பமானது. பின் உயர்தர வகுப்பை ஸ்ரான்லி அரசினர் பாடசாலையில் கற்றேன். J. S. C. என அழைக்கப்பட்ட எட்டாம் வகுப்பில் படித்து சித்திபெற்று பின் S.S.C (இன்றைய பத்தாம்வகுப்பு O/L) பரீட்சைக்குத் தோற்றினேன். 1943 ஆம் ஆண்டு அதாவது, யுத்தகாலம். அக்காலம் பஞ்சம் இலங்கையில் இருந்தபடியால் (போரினால்) பஞ்சகாலம் என்பர். அக்காலத்தில் மதுவரித் திணைக்கள கடற்கரைக் காவலாளராக எடுபட்டேன். எனது, முதல் நியமனம் முல்லைத்தீவில் கிடைத்தது. புகையிரதத்தில் மாங்குளம் சென்று, அங்கிருந்து தட்டி பஸ் ஒன்றில் ஏற முற்பட்டேன். அன்றைய கால கட்டத்தில் போக்குவரத்து வசதிகள் குறைவு. தட்டி பஸ் நிறைய ஜனங்கள் எங்கு ஏறுவதென்றே தெரியவில்லை நடத்துநர் பஸ்ஸுக்கு மேலே ஏறும்படி கூறினார். நானும் சிலருமாக மேலே ஏறினோம். சுற்றிவர சாமான்கள் போடுவதற்காக கம்பி அடித்திருந்தார்கள். அதனைப் பிடித்துக் கொண்டிருந்தேன். என்றாலும் எனக்குப் பயமாக இருந்தது. இன்னும் என்னால் அந்த நாளை மறக்கமுடியவில்லை. அங்கு சென்றதும் விடிந்துவிட்டது. எனக்கென தரப்பட்ட விடுதியை அடைந்தேன். அங்கு ஒரு சாக்குக் கட்டிலும், தலையணையும் போடப்பட்டிருந்தது. கட்டிலைச் சுற்றி நுளம்பு வலை போடப்பட்டிருந்தது. சம்பளம் ஒரு மாதத்திற்கு 96 ரூபா. அது அக்காலத்தில் பெரிய தொகை. இன்றைய இளஞ்சமுதாயம் இதனை நம்புமா? என்பது கேள்விக்குறிதான். அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையிலிருந்து என்னை இடைநிறுத்தி, மதுவரி காவல் உத்தியோகத்தராக பருத்தித்துறை மதுவரி நிலையத்திற்கு அனுப்பினார்கள். அங்கு ஆறுமாதம் வேலை செய்தேன். 1944 இல் அச்சுவேலி மதுவரி திணைக்களத்திற்கு மாற்றினார்கள். அங்கு தொடர்ந்து கடமையாற்றினேன்.

அன்றைய காலகட்டத்தில் திருமணப்பேச்சு என்பது இன்றைய இளம் தலைமுறையினருக்குப் புரியாத புதிராகவே இருக்கும். அதனால் இதனைப் பதிவு செய்ய விரும்புகின்றேன். அன்று மாப்பிள்ளையையோ, பெண்பிள்ளையையோ, ஏன் பெற்றோரையே சம்மதம் கேட்கமாட்டார்கள். ஊரிலுள்ள பெரியவர்கள் மாப்பிள்ளையை வலுக்கட்டாயமாக அழைத்து வந்து, பெண் வீட்டில் சோறு கொடுத்துப் பின் பதிவுத் திருமணம் செய்வார்கள். சிலர் நேரடியாக மாப்பிள்ளையை அழைத்துக்கொண்டுபோய் பதிவுக் கந்தோரில் நோட்டீஸ் போட்டு விடுவார்கள். யார் பெண் என்று கூட விபரம் கூறமாட்டார்கள். அப்படியான ஒரு சம்பவம் என் வாழ்விலும் நடந்தது. அச்சுவேலியில் நான் வேலை செய்து கொண்டிருந்த காலத்தில், எனது ஊரவர் இருவர் காரில் என்னைக் காரணம் எதுவும் சொல்லாமல் ஏற்றிக் கொண்டு சென்றனர். வீட்டிற்கு வரும்படிதான் முதலில் கூறினார். ஆனால், கார் யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றது. எனக்கு எதுவும் புரியவில்லை. யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள கலியாணப் பதிவுக்காரியாலயத்தில் கார் நின்றது. அப்போதுதான் "உனக்கு கலியாணம் இங்கு நோட்டீஸ் போட வா" என்றனர். நான் "முடியாது" என மறுத்து காரில் இருந்து இறங்கவேயில்லை. அக்கால சமூகப் பண்பாட்டில் பெரியோர் எதனைக்கூறினாலும் கேட்கவேண்டும் என்ற நியதி இருந்தது. ஆனால் நானோ முற்றாக மறுத்துவிட்டேன். கொஞ்சம் கடுமையாகவும் கேட்டுப்பார்த்தனர். எதற்கும் நான் அசையவில்லை. என்னை வீட்டில் கொண்டு வந்துவிட்டுவிட்டனர்.

1943 இல் என நினைக்கின்றேன். முல்லைத்தீவு நீதிமன்றத்தைப் பார்க்கச் சென்றேன். காற்றாடி (Fan) அங்கு இல்லை. நீதிபதிக்கு மேலாகவும் சட்டத்தரணிகளுக்கு மேலாகவும் 4 அடி நீளமுள்ளதாக தடிகளில் சுருக்கப்பட்ட சீலைகள் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது. (20 அடி தூரத்தில் நீதிபதிக்கு முன்னால்) அந்த இரண்டு சீலைத் தடிகளையும் இணைத்துக் கயிறு ஒன்றினால் தொடுத்து, அந்தக்கயிற்றை ஒருவர் காற்று வருவதற்காக மெல்லமாக இழுத்துக் கொண்டிருந்ததை முதன்முதலாகக் கண்டதை மற்றவர்களும் அறியவேண்டும். (இப்படியான ஒரு காலம் இருந்தது) என்பதற்காக இதனை பதிவு செய்கின்றேன்.



இதேபோன்று பஸ்ஸில்தான் மேற்குறிப்பிட்ட இடங்களுக்குப் பிரயாணம் செய்தேன்.


இந்தக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் றிச்சோ வண்டி பாவனையில் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குப் பத்து வயதாக இருக்கும்போது 1934 இல் எனது அம்மாவின் சகோதரன் நாராயணபிள்ளைக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவவின் 40 ஆம் நாள் வைபவத்திற்கு நான் எனது குடும்பத்துடன் சென்றிருந்தேன். அங்கு எனது மாமன் முறையான தம்பிப்பிள்ளை என்பவர் "இந்தாடா உனக்குத்தானடா பிடி" என மாமன் மகளான இரத்தினேஸ்வரியை என்னிடம் கொடுத்தார். நானும் வாங்கி வைத்திருந்தேன். அவர்களும் பின்பு எனது தந்தையூரிலேயே வசித்து வந்தனர். அன்று இறைவன் போட்ட அந்த முடிச்சை எண்ணிப் பார்த்தேன். எனக்கெனப் பிறந்த என் முறைப் பெண்ணைத் திருமணம் செய்யத் தீர்மானித்தேன். அவவிடம் இதனைக்கூறினேன். இருவருடைய சம்மதத்துடனும் பெற்றோர் ஆசியுடனும் 1948 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. பதினான்கு வயதே முடியும் தறுவாயில் இருந்த மச்சாளை மணமுடித்து இன்பமாகப் பொன்னாலையில் வாழத் தொடங்கினேன். எனது பதவியும் அங்கு கிடைத்தது. பதினான்கு வயதானாலும் பக்குவமான, பாசமான மனைவியாக இருந்தார். எங்கள் இல்லற வாழ்வின் பயனாக எட்டுக் குழந்தைகள் பிறந்தன. பதினைந்து வயதில் ஒரு பிள்ளைக்கு தாயாகி குடும்பம் நடத்தும் பொறுப்பை எடுத்த மனைவி பற்றி இன்றைய இளம்பெண்பிள்ளைகள் அறிந்திருப்பது அவசியமானது. பெண் என்றால் பொறுமை, கடமை, பாசம். இவைதான் என் மனைவி. எழு பிறப்பும் தீயவை தீண்டாப் பழி பிறங்காப் பண்புடை மக்களைப் பெற்றெடுத்தார். அறிவுடன், அன்புடன் அறுசுவை படைத்து அனைவரையும் ஆளாக்கி விட்டார்.

மூத்த மகள் 1949 இல் பிறந்தார். 1970 இல் பல்கலைக்கழகம் புகுந்து பட்டதாரியாகிப் பின் ஆசிரியைத் தொழில் புரிந்தார். வேலணை மேற்கு கனகரட்ணம் அவர்களின் மகன் தனபாலசிங்கத்தைக் கரம்பிடித்து பெண்குழந்தை ஒன்றுக்குத் தாயாகி, மூவரும் அவுஸ்திரேலியாவில் வசித்து வருகிறார்கள். இவரது பெயர் வசந்தமாலா. யாவருக்கும் மூத்தவர் என்பதில் ஆசை அக்காவாக விளங்குகிறார். இவர்களின் பெண் குழந்தையின் பெயர் ஜனனி படித்துக் கொண்டிருக்கிறார்.

இரண்டாவது மகன் விஜயதன். இவர் 1951 இல் பிறந்தவர். பள்ளிப் படிப்பை முடித்ததும் கம்பனி ஒன்றில் பதவி வகித்தார். மானிப்பாயைச் சேர்ந்த திரு. சிவசம்புவின் மகள் பபியைக் காதலித்துப் பெற்றோர் சம்மதம் பெற்றுத் திருமணம் முடித்தார். இப்பொழுது இலண்டனில் வசிக்கிறார். இவருக்கு ஒரு மகன் இவர் பெயர் யதோஸ். படித்து முடித்து விட்டு வேலை செய்கிறார். மூவரும் சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர். இவரும் எனது சமூக சேவைக்குப் பெரும் பங்காற்றினார். பணம் சேகரித்துத் தந்தார். 2006 இல் நாங்கள் இலண்டன் சென்றிருந்தபோது, எங்கள் குடும்ப நலன் வேண்டி, இலண்டன் முருகன் கோயிலில் அபிஷேகம் செய்தார். அவ்வாலயத்தில் உடன் பிறந்தோர், உற்றார் எல்லோரையும் அழைத்து, பிரதம குருவிடம் ஆசிபெறச் செய்து, பெற்றோராகிய எங்களையும் மகிழ்வுறச் செய்தார். மகன், தந்தைக்காற்றும் உதவி இவையே. 2005 இல் சுனாமியால் பாதிக்கப்பட்ட, மட்டக்களப்பு மக்களுக்கு படுக்கை விரிப்பு, பாடசாலை உபகரணங்கள் யாவும் சேர்த்து பதினொரு பெட்டியில் அனுப்பி வைத்தார். அதனை அக்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த செல்வி க. தங்கேஸ்வரியிடம் ஒப்படைத்தேன். தன்னையும் காத்து, தன் குடும்பத்தையும் காத்து, சமூகத்தையும் காக்கவேண்டும் என்பது என் அறிவுரை. மருமகள் பபி நாங்கள் U.K. இல் நிற்கும் போது, சாப்பாடு, தேனீர், நேரம் பிந்தாமல் தருவா.

மூன்றாவது மகன் ஸ்ரீதரன் 1952 ஆம் ஆண்டு பிறந்தார். அமைதியான சுபாவம் உடையவர். தவறு செய்யமுற்படாதவர். அதனால் அவர் எனது கோபத்திற்கு ஆளாகவில்லை. சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிபேக் கல்லூரியிலும், மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் உயர்தரம் வரை படித்தார். பல்கலைக்கழகம் புகுவதற்குப் புள்ளி சற்று குறைந்துவிட்டது. மன வேதனைப்பட்டார். அக்காலத்தில் பெரும் பண வசதி இருக்கவில்லை. கடன்பட்டு அவரை இலண்டனுக்கு அனுப்பி வைத்தேன். உழைத்து வட்டியுடன் கடனை அவரே அடைத்துவிட்டார். இவர் கோண்டாவில் பாலசுந்தரம் அவர்களின் மகள் மேனகாவை மணமுடித்தார். நானும், எனது மகள் சாந்தியும் பெண்ணைப்பார்த்து முடிவு கூறியதும் அவர் சம்மதித்து விட்டார். இலண்டனில் திருமணம் இனிதே நடைபெற்றது. இவர்களுக்கு ஒரு மகன் பிரசாந் இலண்டனில் மருத்துவம் படித்துக்கொண்டிருக்கிறார்.

நான்காவது மகன் 1954 இல் பிறந்தவர். இவர் பெயர் ஞானதரன். மாத்தளை சென்தோமஸ் கல்லூரியில் படித்தார். திரு. சரவணபவன் அவர்களின் மகள் (எனது இளைய மருமகன் குமரனின் சிறியதாய்) எங்கள் குடும்பத்துடன் நெருங்கிப் பழகினார். வித்தியாசம் பாராமல் கலகலப்பாகப் பழகுவா. கடும் வசனங்கள் கூறமாட்டா. புறங்கூறல் இல்லை. அவவின் குணம் எங்களுக்குப் பிடித்திருந்தது. அதனால் அவவை மகன் ஞானிக்குத் திருமணம் செய்யத்தீர்மானித்தோம். அதுவரை அவர்களின் காதல் விஷயம் எங்களுக்குத் தெரியாது. பின்புதான் அறிந்தோம். எங்களிடம் போதிய பணம் இருக்கவில்லை. கடன்பட்டுத் திருமணம் செய்து வைத்தோம். பின் ஞானி கனடா சென்று விட்டார். பபாவும் பிள்ளைகளும் கனடா விசா வரும் வரை களுபோவிலவில் உள்ள வாடகை வீட்டில் எங்களுடன் வசித்து வந்தார்கள். பின் அவர்களும் கனடா சென்றுவிட்டனர்.

ஐந்தாவது பெண்பிள்ளை ஜெயமாலா. இவர் 1956 இல் பிறந்தார். மாத்தளை இந்துக்கல்லூரி, சாவகச்சேரி றிபேக் கல்லூரி என்பவற்றில் படித்தார். யாழ்/ கொட்டடி செல்லப்பாவின் மகன் விஜயபதியை மணம் முடித்துப் பிரான்சில் வாழ்கிறார்கள். இவர் பல வருடங்களாக ஒரே நிறுவனத்தில் வேலை செய்தவர். இவரும் எனது சமூகப் பணியில் பெரும் உதவி புரிந்தவர். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் சந்திரோ, ரமணா என இரு ஆண் பிள்ளைகளும், ஆரணி என்ற மகளும் உள்ளனர். ஆரணி காதல் திருமணம் செய்து கொண்டார். நாங்கள் இருவரும் பிரான்ஸ் சென்று அவர்களை வாழ்த்தி வந்தோம். முதலாவது பேரப்பிள்ளையின் கல்யாணம் என்பதால் எங்களுக்கு மிகவும் சந்தோஷம். திருமண விழாக்கண்டு சந்தோஷமடைந்தோம். இரு ஆண் பிள்ளைகளும் படித்து முடித்து கணக்காளர்களாக பதவி வகிக்கின்றனர்.

1962 இல் சாந்திமாலா என்ற எனது அன்பு மகள் பிறந்தார். அப்போது மாதம்பை மதுவரி நிலையத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். யாழ் வேம்படி உயர்தர பெண்கள் கல்லூரியில் உயர்தரம் வரை படித்தார். இவர் யாழ். றோயல் பாமசி (மருந்தகம்) திரு. திருமதி. துரைரத்தினத்தின் மகன் பிரகாஸ் இருவரும் விரும்பி, எங்கள் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டார்கள். அக்காலகட்டத்தில் இந்தியாவில் B.Scபடித்துக்கொண்டிருந்தார். இவர்கள் இப்பொழுது இலண்டனில் வசிக்கிறார்கள். ஜெகன், பிரவீன் என்ற இரு ஆண்பிள்ளைகளுடன் இன்பமாக வாழ்கின்றனர். பிள்ளைகள் பட்டம் பெற்று வங்கியில் வேலை செய்கிறார்கள். இவர்கள் நாங்கள் நிரந்தரமாக கொழும்பில் இருப்பதற்காக, கொழும்பு பம்பலப்பிட்டியில் ஒரு மாடி வீடு கட்டித்தந்துள்ளனர். பெற்றோரில் அதிக கவனம் செலுத்தும் பண்பு இவவிடம் உள்ளது என்றுதான் சொல்லவேண்டும். எங்கள் இருவரையும் புகழ்ந்து கொண்டே இருப்பாள். கிழமைக்கு 4 முறையாவது சுகம்கேட்டுத் தொலைபேசியில் கேட்டுக் கதைப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாவது பிள்ளையாக கவிதா 1972 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் யாழ். வேம்படி உயர்தரப் பெண்கள் பாடசாலையில் கல்வி கற்றார். கொழும்பில் வேலை செய்து கொண்டிருந்த காலகட்டத்தில் சரசாலை வீரமாகாளி அம்பாள் ஆலய ஸ்தாபகரின் பேரனும் நிர்வாகத்தினரின் மகனுமான திருஞானசம்பந்தன் (பொறியியலாளர்) அவர்களைத் திருமணம் செய்தார். இவர் தகப்பன் நகுலேஸ்வரன், சுண்டுக்குளி போய், தான் எங்களைப்பற்றி விசாரித்ததாகவும், துரைராசாவின் பிள்ளைகளை உங்கள் மகன் திருமணம் செய்யக் கிடைத்திருக்கா, எனவும் எங்களைப் பற்றி நல்லதாகச் சொன்னதாகக் கடிதம் போட்டார். இவர்களுக்கு சரண்யன், அஞ்சலி என இரு பிள்ளைகள். இவர்கள் உயர்வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுடன் இலண்டனில் சில மாதகாலம் இருந்தோம். எனது மருமகன் சம்பந்தன்தான் வேலைக்குக் காலை ஆறு மணிக்குப் புறப்படுமுன் எனக்கு தேநீர் போட்டுத்தந்துதான் போவார். கசினோ கடிகாரம் ஒன்றும் வாங்கித்தந்தார்.

எட்டாவது மகள் வினிதா. 1974 இல் பிறந்தார். யாழ்/ வேம்படி மகளிர் கல்லூரியில் படித்துப் பின், சைவ மங்கையர் (கொழும்பு) கழகத்தில் படித்து சட்டக்கல்லூரியில் சட்டம் படித்துச் சட்டத்தரணியானார். திரு. இராமலிங்கம் ஆவரங்கால் கொழும்புத்துறையில் மணம் முடித்து வாழ்ந்து வந்தவர். அவரின் மகன் செந்தில்குமரன் அவரும் சட்டத்தரணியாகப் பட்டம் பெற்றவர். இவர்கள் இருவரும் விரும்பியபோதும், எங்கள் சம்மதத்துடன் திருமணம் முடித்தார்கள். பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் எங்கள் கடைக்குட்டி வினிதாவின் திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இவர்களுக்கு மூன்று ஆண்பிள்ளைகள் கிரித்தீஸ்வர், அமிதேசா, ஆதீசா இவர்கள் கொள்ளுப்பிட்டி சென். தோமஸ் ஆரம்பப்பாடசாலையில் கல்வி கற்று வருகின்றார்கள். வினிதா, குமரன் குடும்பத்துடன்தான் நாங்கள் இருவரும் வாழ்ந்து வருகின்றோம். எமது சமூகப்பணிகளாகட்டும், தனிப்பட்ட பிரச்சினைகளாகட்டும் உறவினர், நண்பர்கள் அனுசரிப்பாகட்டும் யாவற்றையும் முன்னின்று செய்யும் பிள்ளைகளாக எங்களுடன் இருந்து வருகின்றனர். எட்டுப்பிள்ளைகள் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் இருந்தபோதும், எமது முழுப்பொறுப்பினையும் குமரன் மனைவியுடன் கவனித்து வருகிறார்.

இவர் ஒரு சைவ போஷனி. அதனால், மகளும் சைவ உணவையே சாப்பிடுவார். அவர்களுடன் நாங்களும் சைவர்களாக மாறிவிட்டோம். மாமா உங்களுக்கு விரும்பிய உணவை நீங்கள் சாப்பிடுங்கள் என்று கூறுவார். எங்களை கொட்டேல் (Hotel) க்கு கூட்டிக்கொண்டு போய் அங்கு எங்களுக்காக அசைவ உணவு எடுத்துத்தர முயற்சிப்பார். நாங்கள் வேண்டாம் என்று மறுத்துவிடுவோம். சந்திராவுக்கு வாங்கிக் கொடுப்பார். (எங்களுடன் உதவிக்கு இருப்பவர்) ஒரு மாதத்தில் இரண்டு மூன்று முறை வெளியே கூட்டிக்கொண்டு போய் சாப்பாடு வாங்கித் தருவார்.

பாடசாலை விடுமுறை நாட்களில் தூர இடங்களுக்கு அழைத்துச் செல்வார். நுவரெலியா ஆஞ்சநேயர் கோயில் (றம்பொடை), களுத்துறை, இரத்மலானை, காலி, கதிர்காமம், திருகோணமலை, முல்லைத்தீவு, மாத்தளை, கண்டி, அவிசாவளை இப்படியாக ஒவ்வொரு விடுமுறைக்கும் ஒவ்வொரு இடத்துக்கு அழைத்துச் செல்வர். யானைகள் இருக்குமிடம் தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை கூட்டிக் கொண்டுபோய் காட்டினார்கள். மட்டக்களப்பு போன்ற தூர இடங்களுக்கு கூட்டிக்கொண்டு போனால் விடுதியில் (Hotel) தனி அறை எடுத்துத் தந்து, எங்களைத் தங்க வைத்து, இடங்கள் எல்லாம் கூட்டிக்கொண்டுபோய்க் காட்டுவர். மயிலாம்பாவெளி காமாட்சி அம்மன் கோயில் (ஆனந்தசாகரா) போன்ற பல இடங்கள் சென்றோம். மன்னார் திருக்கேதீஸ்வரம் சபாரத்தினம் சுவாமிகள் கலாசார மண்டபம், பாலாவி குளிப்பு, கோயில் தரிசனம், அரிப்பு என்ற இடம் அல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணி பழைய கோட்டை முதலிய இடங்கள் எல்லாம் சென்று பார்த்தோம்.

2015 இல் திருக்கேதீஸ்வர மண்டபத்தில் ஆன்மீகப் பெருவிழா நடைபெற்றது. அங்கு உரையாற்றியவர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் அவர்களும்மற்றவர்களும்சபாரத்தினசுவாமிகள்சபையால்கௌரவிக்கப்பட்டனர்.பெண்பிள்ளைகள் ஐவரும் கலை நடனம் யாவும் பயின்றனர். இயலுமானவரை எனது குழந்தைகளைப் படிப்பித்தேன். ஆங்கிலம், கணிதம் என்பவற்றுக்கு ஆசிரியர்களை நியமித்தேன். எனது வருமானத்திற்குத் தகுந்த முறையில் எமது பிள்ளைகளைப் படிப்பித்துத் திருமணம் செய்து கொடுத்து, பேரப்பிள்ளைகளையும் கண்டுவிட்டோம். 4 ஆவது வாரிசாகப் பூட்டன் பிறந்த செய்தியையும் அறிந்தோம். வயது போனவர்கள் என்று எமது பிள்ளைகள் இன்றுவரை நினைத்ததில்லை. எங்களையும் நினைக்க வைக்கவில்லை. உள்ளூர் மட்டுமல்ல வெளியூரிலும் எல்லா இடங்களுக்கும் கூட்டிச் செல்வர்.

## என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வுகள்.

1991 இல் நம் நாடு யுத்த பூமியாக இருந்தது. யாழ். இயக்க அனுமதிப் பத்திரம் எடுத்தால்தான் யாழ் நகரை விட்டு வெளியேற முடியும். அந்தக் காலத்தில் இருந்த இயக்கத்தினரிடம் அனுமதி பெற்று, பூநகரியூடாகப் பெரும் கஷ்டத்தின் மத்தியில் இளைய இரு மகள்மாரையும் (கவிதா, வினிதா) கொழும்பிற்கு அனுப்பி வைத்தேன். அவர்களை அங்கு திருமதி இராணி சீனிவாசன் என்பவர் தங்கள் வீட்டில் தங்க வைத்து அவர்களுக்குப் பாதுகாப்பும் கொடுத்தார்.

## சித்த வைத்தியம் (சித்திர வதை)

பின் காலச் சூழ்நிலை கருதி, அம்மாவும் அவர்களுடன் சென்று தங்கியிருந்தார். அக்காலக்கட்டத்தில் நானும், ஞானியும் யாழ்ப்பாணத்தில்தான் இருந்தோம். ஒருநாள் எனது இடது கை தூக்கமுடியாமல் போய்விட்டது. நோ வலி தாங்க முடியாது தவித்தேன். அப்பொழுது திரு. விமலநாதன் என்பவர் மட்டுவில் என்ற இடத்தில் வசிக்கும் சித்த வைத்தியர் ஒருவரிடம் என்னைக் கூட்டிச் சென்றார். மோட்டார் சைக்கிளில் சென்றோம். ஞானியும் என்னுடன் கூட வந்தார். அங்கு சென்றதும் வைத்தியர் என்னை முதலில் நடக்கும் படி கூறினார். அதன்பின் இடது கையைத் தூக்கச் சொன்னார். செய்தேன். என்னால் முடியவில்லை. என்னை ஒரு வாங்கிலில் இருக்கும்படி கூறிக் கையிற்கு எண்ணெய் பூசினார். குப்புறப்படுக்கச் சொன்னார். படுத்தேன். இரு இளம் வயதினர் ஒரு கொட்டனுடன் வந்தனர். அவர்கள் இருவரும் இரண்டு பக்கமும் நின்று பொல்லைப் பிடித்தபடி கொண்டு கீழே இருந்து மேல்வரை உருட்டிக் கொண்டு வந்தனர். தாங்க முடியவில்லை. திரும்பவும் செய்தார்கள். மூச்சுவிட முடியவில்லை. கதைக்க முடியவில்லை. விடும்படி கையால் சைகை காட்டினேன். விடவில்லை. என்னுடன் வந்த விமலநாதனும் மகனும் என்னை எழும்ப விடாமல் பிடித்துக் கொண்டனர். பிடிதளர்ந்தவுடன் எழும்பி விட்டேன்.

அடுத்த நாளும் வரும்படி வைத்தியர் கூறிவிட்டிருந்தார். போகவில்லை. எரிபுக்கை என்று சொல்லி மருந்து தந்து, அதனை வீட்டிற்குப் போய் கையில் கட்டும்படி கூறினார். அன்று நான்பட்ட வேதனை மறக்க முடியாதது. அவர் சொன்னபடி தோள்மூட்டில் வைத்துக் கட்டினேன். ஒரு மணித்தியாலம் போனபின் எரியத் தொடங்கிவிட்டது. எரிவோ கூடிக்கொண்டே போகின்றது. தாங்கமுடியவில்லை. அந்தக்கட்டை அவிழ்த்துவிட்டேன். அப்பவும் எரிவு தாங்கமுடியவில்லை. இரவு முழுவதும் அவதிப்பட்டேன். காலையில் கட்டிய இடம் கறுப்பாகக் கொப்பளங்கள் போடப்பட்டிருந்தது. உடன் கடற்கரை வீதியிலுள்ள (Sisters) ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். நடந்ததைக்கூறினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குச் சரியான கோபம் வந்துவிட்டது. இப்படியும் ஒரு வைத்தியமா? என அதிர்ச்சி அடைந்தனர். பின் பூசுவதற்கு மருந்தும், உட்கொள்ள குளிசைகளும் தந்தனுப்பினர். சித்த மருத்துவத்தில் பித்தம் தெளிந்தேன். என் வாழ்க்கை அது பெரிய பாடத்தைக் கற்றுத் தந்தது. அதனால்தான் அதனைப் பதிவு செய்கின்றேன்.

கவிதா, வினிதா இருவரும் அவசரமாகக் கொழும்புக்குப் போனதால் பாடசாலை விடுகை அத்தாட்சிப் பத்திரம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் என்பன வினிதாவின் பாடசாலை அனுமதிக்கு அவசரமாகத் தேவைப்பட்டது. கொழும்பு சைவ மங்கையர் கழகத்தில் அனுமதி பெறுவதற்கு அவசரம் கொண்டு போக வேண்டி இருந்தது. யாழ் முத்திரைச் சந்தையடியில் பஸ்ஸில் புறப்பட்டேன். இயக்கச்சி கடற்பகுதிக்குச் சமீபமாக இறங்கி வள்ளத்தில் ஏறியதுதான் தெரியும். நடந்து வாகனத்திலேறி எப்படி வந்தேன் என்று தெரியாமல் ஓமந்தை வந்து சேர்ந்தேன். வவுனியா போவதற்கு நூற்றுக்கணக்கானவர்களுக்குப் பின்னால் வரிசையில் நின்றேன். இயக்கத்தில் இருக்கும் ஒருவர் அந்த வரிசையில் நின்றவர்களைப் பார்த்துப் போவதும் வருவதுமாக இருந்தார். அவருக்குக் கேட்கக்கூடியதாக ''தம்பி'' என்றேன் கிட்ட வந்தார். எனது இரண்டு பெண் பிள்ளைகளை கொழும்பு பாடசாலையில் சேர்ப்பதற்கு இந்தப்பிறப்புப் பத்திரம், பாடசாலை விடுகைப் பத்திரம் கொண்டுபோக வேண்டும் என்று கூறி அதனைக் காட்டினேன். அவர் அதனைப் பார்க்கவில்லை. இவரிலும் குறைந்த தரமுள்ளவராக இருக்கவேண்டும். அவரிடம் என்னைக் கூட்டிக்கொண்டுவரும்படி சொல்லிவிட்டு முன்னால் போய்விட்டார். அவர் என் கை ஒன்றைப் பிடித்துக்கொண்டு போனார். பயந்து கொண்டே போனேன். கடைசிக்காலத்தில் என்ன நடக்கப் போகுதோ? தனித்து வந்து விட்டேனே, எனப் பயந்தேன். உயிர் என்னிடத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. என்னைக் கொண்டு போனவர் பெரியவரிடத்தில் ஒப்படைத்தார். வரிசையில் முன்னுக்கு நிற்க அனுமதி கிடைத்தது. அவருக்கு நன்றி சொல்லிவிட்டு வரிசையில் நின்றேன். அங்கிருந்து வவுனியாவுக்கு போவதற்காக வேறு ஒரு இடத்தில் கொண்டுபோய் விட்டார்கள். இரவுநேரம் மழைவெள்ளம் சேறும் சகதியுமாக இருந்தது. காலை வைத்தேன். கால் புதைந்துவிட்டது. செருப்பும் கழன்றுவிட்டது. தேடினேன். ஒரு செருப்புக் கிடைத்தது. ஒரு செருப்பு வேறானது. எனது செருப்பின் சோடி இல்லை. எனினும் கிடைத்ததைப் போட்டுக் கொண்டு வானில் புறப்பட்டேன். வவுனியா வந்து சேர்ந்து மதுவரித் திணைக்களத்திற்குப் போனேன். என் நிலை கண்டு என்னுடன் வேலை செய்த ஜெயரட்ணம் என்பவர் ஒரு சோடி செருப்பு வாங்கித் தந்தார். பின் கொழும்பு வந்து சேர்ந்து மனைவி, பிள்ளைகளுடன் ராணி என்பரின் வீட்டில் வசித்த வந்தோம்.

## எனது பள்ளிப் பருவத்தின் பதிவுகள் சில

1932 இல் (என் நினைவுக்கு எட்டிய வரையில்) கொழும்புத்துறை சைவப்பாடசாலையில் மூன்றாம் வகுப்பில் படிக்கும்போது என நினைக்கின்றேன். யாழ்ப்பாண கோட்டையைப் பார்ப்பதற்காக 3, 4, 5 ஆம் வகுப்பு மாணவர்களை குழந்தைவேலு ஆசிரியர் கூட்டிக்கொண்டு போனார். உள்ளும் புறமும் சுற்றிப் பார்த்தபொழுது அங்கு இரும்புக்குண்டுகள் குவிக்கப்பட்டிருந்தன. சக மாணவர்கள் சிலர் அதனைத் தூக்கி எறிந்தனர். நானும் இன்னும் சிலரும் அதனைத்தொடவே இல்லை. பாடசாலை வந்தவுடன் ஆசிரியர் மாணவர்களை வரிசையாக நிற்கும்படி கூறினார். குண்டைத் தொட்டவர்களுக்குத் தண்டனை கொடுக்கத் தயாரானார். நாம் குண்டைத் தொடவில்லை என்று கூறியும் அவர் நம்பவில்லை. எல்லோருக்கும் கையில் இவ்விரண்டு அடி கொடுத்தார். நாங்கள் செய்யாத குற்றத்திற்கு பிரம்படி பெற்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எருதுகள் வண்டி



ஒற்றைத்திருக்கல் வண்டி



குதிரை வண்டி



றிச்சோ வண்டி





றாம் கார்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் கடலில் விமானத்தை முதல் பார்த்தது



இதேமாதிரியான சீபிளேன் Seaplane யாழ்ப்பாணம் கடலில் முதலில் வந்து இறங்கியதைப் பாடசாலை மாணவக் குழுவுடன் பார்த்தேன்.

நான்காம் வகுப்புப் படிக்கும்போது (1933) யாழ் கடலில் ஆகாய விமானம் முதல் முதலாக வந்து இறங்கவிருப்பதாக எம்மைக் கூட்டிக்கொண்டு சென்றனர். சிலமணிநேரம் காத்திருந்தோம். இரைச்சலுடன் விமானம் வந்தது. அதன் கீழ் பக்கத்தில் வள்ளம் போல இரண்டு கீழே பொருத்தப்பட்டிருந்தது. நீரிலும் போகக்கூடியது. கடலில் இறங்கிவிட்டு எழுந்தது. 10, 15 அடி தூரம் கடல் நீர் வீசியதைக் கண்டோம். முதன்முதல் அன்றுதான் விமானத்தைக் கண்டோம். ஆசிரியரால் தண்டனை பெற்றேன்.

(1938) நான் எட்டாம் வகுப்பு படிக்கும்போது சரித்திரம் ஒரு பாடமாக இருந்தது. ஆசிரியர் கனிபல் என்பவருடைய சரித்திரப் புத்தகத்தில் உள்ள கிட்டத்தட்ட 9 பக்கங்கள் அவற்றை நாம் பாடமாக்கி, அடுத்த நாள் ஒப்புவிக்க வேண்டும் என்றார். நான் சுருக்கமாக 3, 4 பக்கங்களில் பாடமாக்கிச் சொல்வதாகக் கூறினேன். ஆசிரியர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. எனது கையில் ஒரு முறை தடியால் அடித்தார் இரத்தம் கசிந்தது. மாணவர்கள் எல்லோரும் எழும்பி நின்றார்கள். இருக்கும்படி சொல்லியும் ஒருவரும் இருக்கவில்லை. பின் தலைமை ஆசிரியர் வந்து, சமாதானப்படுத்தி இருக்கச் செய்துவிட்டு போனார் ஆசிரியர் பெயரை குறிப்பிடவிரும்பவில்லை.

## றிக்சோ வண்டி

1932 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணத்தில் சிலகாலம் வரை றிக்ஷோ வண்டி இருந்தது. 9 வயதாய் இருக்கும்போது யாழ் சுண்டுக்குளி சந்தியில் சில றிக்ஷோ நிற்பதைக் கண்ணுற்றேன். அதில் சிலர் சமீபமாகவுள்ள இடங்களுக்குச் செல்வர், அதுதான் அன்றைய கால வாகனமாக இருந்தது. பாடசாலை, ஆஸ்பத்திரி போன்றவற்றிற்கு இதில் செல்வர். சிலர் A 40 காரும் வைத்திருந்தனர்.

## வாழ்வின் சில நினைவுகள்

கடந்த பாதையைக் கூறுவதன்மூலம் எமது மனமும் நிறைவுபெறுகிறது. இவ்வாறான வாழ்க்கையும் இருந்தது என எமது குழந்தைகள் அறியவேண்டும் என்பதும் எனது விருப்பமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1955–56 களில் கொழும்பிற்கு மாற்றலாகி வந்தேன். இந்தக் காலங்களில் கொழும்பில் "றாம்கார்" நிலத்தில் தாண்டவாளம் அமைக்கப்பட்டு, கோட்டையிலிருந்து டாம் வீதி வழியாகப் பாலத்துறைக்குப் போகும். இரண்டு பக்கமும் ஏறி இறங்கலாம். நானும் பிரயாணம் செய்திருக்கின்றேன். கிட்டிய தூரத்திற்கு ரிக்கற் காசு 10 சதம் பின் அதை நிறுத்திவிட்டார்கள். அடுத்து ரொலிபஸ் பச்சைநிறம். இரண்டு தட்டு தண்டவாளம் இல்லை. ஓடும் இடத்திற்கு மேலாக மின்வயர் பொருத்தி பஸ்ஸோடு இணைக்கப்பட்டிருக்கும். கிட்டிய தூரத்திற்கு 10 சதம்தான் ரிக்கற் அதுவும் நிற்பாட்டப்பட்டது. மொறிஸ் மைனர்கார் ரக்சி இருந்தது. மீட்டர் போடப்பட்டிருக்கும். அதன்படி பணம் கொடுக்கவேண்டும். (தற்போதைய ஓட்டோ ரக்சி மாதிரி) அது நான்கு சில்லு. இது 3 சில்லு அதுதான் வித்தியாசம் 1955 – 56 களில் கொழும்பு சுற்றிக் காட்டப் பிள்ளைகள் வசந்தா, விஜி, சிறி மூவரையும் கூட்டி வந்திருந்தேன். அவர்களுக்கு இவற்றையெல்லாம் காட்டினேன். அதாவது சுதந்திரசதுக்கம், துறைமுகம், கோயில்கள், தெஹிவளை மிருகக்காட்சிச்சாலை, காலிமுகத்திடல் பல இடங்களைக் காண்பித்தேன். சுதந்திரச் சதுக்கத்திலுள்ள சிங்கத்தின் (சிலை) மேல் ஏற்றி வைத்து பிள்ளைகளைப் படம் எடுத்தேன்.

1958 – 61 இல் மட்டக்களப்பு மதுவரி நிலையத்திற்கு மாற்றப்பட்டேன். 1958 கடும்மழை. வெள்ளம் பெருக்கெடுத்தது. போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. மட்டக்களப்பு செல்லமுடியாத நிலை. பிரயாணம் செய்யமுடியாத நிலை சில நாட்கள் கழித்தே அங்கு சென்றேன். இந்தக்காலத்தில்தான் ஸ்ரீ அழிப்பு நடைபெற்றது. யாழ்ப்பாணக் கச்சேரி (அரசாங்கக் கந்தோருக்கு) முன்னாள் சத்தியாக்கிரகம் நடைபெற்றதும் இக்காலகட்டத்தில்தான். மறக்கமுடியாத நினைவுகள்.

## போதைப்பொருள் (அபின்) கைப்பற்றி, சிலாபம் நீதிமன்றில் பதிவு, தண்டனை விதிக்கப்பட்டது

1962 – 64 மாதம்பை மதுவரி நிலையத்திற்கு மாற்றமாகிச் சென்றேன். இந்த வருடங்களில் நம்பிக்கையான ஒருவர் மூலம் அபின் வியாபாரம் செய்யும் ஒருவர், மாதம்பை பழைய நகரம் வழியாக இன்னுமொருவரோடு போகிறார். அவர் அபின் எனும் போதைப்பொருள் வாங்கி வருபவர் என தனக்கு ஒருவர் சொல்லியுள்ளார். எனவே அந்த ஊர் கிராம அலுவலரையும் கூட்டிக்கொண்டு, சிலாபம் வீதியில் மறைந்து நின்றோம். மதுவரி கோப்பிறல் பதவி வகித்தபடியால், மதுவரிச்சட்டம் 34ஆம் பிரிவின் கீழ் அதிகாரம் எனக்குண்டு. இதன்படி பொது இடங்களில் ஒருவரை பரிசோதித்து, அவரை பிணையிலும் விட அதிகாரம் எனக்குண்டு. இதனால் கிராம அலுவலருடன், நின்று அதன் வழி வந்தவரை நிற்பாட்டி பரிசோதித்து, கொட்டைப்பாக்கிலும் கொஞ்சம் பெரிதான அபின் உருண்டையைக் கைப்பற்றி, சிலாபம் நீதிமன்றில் பதிவு செய்து, அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் நீதிமன்றம் அவருக்கு தண்டப்பணம் செலுத்தும்படி தண்டனை விதித்தது. இதற்காக மதுவரித்திணைக்களத்தால் நல்விருது (Commendation) தரப்பட்டு, பணமும் தரப்பட்டது. (1962 – 1964) மாதம்பை மதுவரி நிலையத்தில் இதன் விபரம் உள்ளது.

1965 பாணந்துறை மதுவரி நிலையம்.
1966–69 சாவகச்சேரி மதுவரி நிலையம்.
1970–72 மாத்தளை மதுவரி நிலையம்.
1973 – 06 ஆறு மாதம் சங்கானை மதுவரி நிலையம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமாதம் மதுவரி சாராய குதம் – யாழ்ப்பாணம், அதன் பின் முல்லைத்தீவு மதுவரி நிலையம் 16.09.1981 ல் ஓய்வு பெற்றேன்.

பதவியில் இருந்து ஓய்வு பெற்றதும் வீட்டில் சும்மா இருக்கவில்லை. கலாநிதி ஸ்ரீ சித்தானந்த சரஸ்வதியிடம் யோகாசனம் பயின்றேன். அதனைத் தொடர்ந்து இன்றுவரை கடைப்பிடித்து வருகின்றேன். இன்றும் நான் சுறுசுறுப்பாக சுகதேகியாக சமூகப் பணிகளில் ஈடுபடுவதற்கு இப்பயிற்சியே காரணம். இதனுடன் எட்டு நடைப்பயிற்சியும் தினமும் செய்வேன். நடைப்பயிற்சி, யோகப்பயிற்சி. இவையே எனது உடலுறுத்திக்கு காரணம் எனலாம்.

ஓய்வுக்குப் பின், எனது காலத்தை வர்த்தகத்தில் செலவிட்டேன். காலியிலிருந்து வர்த்தகம் செய்வதில் செலவிட்டேன். காலியில் இருந்து கருங்காலி மரத்தில் செய்யப்பட்ட யானைகள் வேறு கலைப்பொருட்களை யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுப்பிவைப்பேன். (ஆஸ்பத்திரி வீதி) வேறு கடைகளுக்கும் அனுப்பி வைப்பேன். யாழ்ப்பாணத்திலிருந்து (தச்சன் தோப்பில்) இடியப்ப உரல் எடுத்து கொழும்புக்கு அனுப்புவேன். முதன்முதலாக கொழும்புக்கு இடியப்ப உரல் அனுப்பினேன். சரியான வரவேற்பு இருந்தது. போட்டிபோட்டு வாங்குவார்கள். இதனால் எனது பொருளாதாரக் கஷ்டத்தை ஓரளவு சமாளிக்கக்கூடியதாக இருந்தது. (மனைவியின் தாய் தகப்பன்) என் முறைமாமன் மாமி, எனது அப்பா எல்லோரது கடமைகளும், பொறுப்பும் எனது குடும்பத்தின் பொறுப்பும் கூடிய நிலையில் கடன்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. கடன்பட்டு வட்டியும் கட்டி வந்தோம். நகைகளை அடைவு வைத்தோம். பின் பிள்ளைகள் வெளிநாடு சென்று உழைக்கத் தொடங்கியபின், எல்லாக் கடன்களையும் தீர்த்துவிட்டார்கள். பிள்ளைகள் உழைத்து எமது பிரச்சினைகளையெல்லாம் தீர்த்துவிட்டனர். மகள் சாந்தி பிரகாஸ் காணி வாங்கி எங்களுக்கென ஒரு மாடி வீடும் கட்டித்தந்துள்ளார். எமது நண்பன் விமலநாதன் பற்றியும் இவ்விடம் குறிப்பிட விரும்புகின்றேன். அவருக்கு எங்கள் வீட்டில் இருப்பதற்கு இடம் கொடுத்தோம். அவரிடம் கடனான 25000 ரூபா வாங்கினோம். ஐந்து வருடத்தில் வட்டியுடன் திருப்பிக்கொடுத்தோம். அவர் அவ்வளவு நம்பிக்கையானவர் உதவி செய்பவர்.

## நற்சிந்தனை

உடம்பாகிய தேரினை இழுக்க நம்முடைய புலன் உறுப்புகளை அடக்க வேண்டும். புலனடக்கம் என்பது அவ்வளவு எழிதான செயல் அல்ல. இந்த மனம் கடிவாளம் இல்லாத குதிரை மாதிரி. காட்டாற்று வெள்ளம்போல் எங்கு செல்கிறோம். எப்படிச் செல்கிறோம், ஏன் செல்கிறோம் இப்படி எதுவுமே தெரியாமல் தன் போக்கில் செல்லும் இதனை இப்படியே விட்டால் இறைவனை நாம் எப்படி காண முடியும்? புலனடக்கட்திற்கு முதலில் நல்ல பழக்கம் வழக்கம் வேண்டும். அது ஏற்பட அதற்கான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகு : எமது பண்டைய தகவல்கள்


யாப்பகுவ சிங்கம்


புனித வெள்ளரசு மரம்


யாழ்ப்பாணக் கோட்டை


சந்திரவட்டக்கல்


கன்னியா வெந்நீரூற்று


தலதா மாளிகை

யாழ் பாரதி வெளியீடு, அளவெட்டி தெற்கு, அளவெட்டி

## வேலையை இலகுவாக்கும் முறைகள்


திருகை


அம்மி குழவி


ஆட்டுக்கல்


சிகிரியா ஓவியங்கள்


யாழ் பொதுநூலகம்


உரல் உலக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்துச் சிவாலயங்கள் (2006 - 2007)

இலங்கையில் சிறப்புறும் சிவாலயங்களைப் பற்றிய வரலாற்றை தொகுத்து வெளியிட வேண்டும் என்ற எண்ணம் எனக்கு உதித்தது. இவ்வெண்ணத்திற்கு வித்துவிட்டவர், அருள்மொழியரசி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்களே. ஆலயங்களைத் தேடி, ஆக்க முயற்சியில் இறங்கினேன். சிவன் கோயிலின் அறங்காவலர்கள், உரிமையாளர்கள், சிவாச்சாரியார்கள் முதலியோரை அறிந்து கடித மூலம் தொடர்பு கொண்டேன். நேரில் சென்று வரலாறுகளைச் சேர்த்தேன். பலர் முன் வந்து தரவுகளைத் தந்துதவினர். இரவு பகலாக கஷ்டப்பட்டு, எண்பத்தெட்டு சிவாலயங்களின் வரலாற்றை அறிந்து, 352 பக்கத்தில் வித்துவான் வசந்தா வைத்தியநாதன் அவர்களைத் தொகுப்பாசிரியராக வைத்து, இந்நூலை ஆக்கி வெளியிட்டேன்.

**அருளாசிச் செய்தி :**
நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள், தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள்.

**வாழ்த்துச் செய்தி :**

1. சுவாமி ஆத்மகனானந்தஜி (இராமகிருஷ்ணமிஷன் தலைவர் )
2. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி (தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை)
3. திருமதி சாந்தி நாவுக்கரசன் (பணிப்பாளர், இந்து சமய கலாசார திணைக்களம்)

**மதிப்புரை:**
க. தங்கேஸ்வரி பா. உ. மட்டக்களப்பு.

**அணிந்துரை :**
வாகீச கலாநிதி. கனகசபாபதி நாகேஸ்வரன் (சப்பிரகமுவ பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர்)

**வாழ்த்துரை :**
இலக்கிய கலாநிதி வி. சிவகாமி, பேராசிரியர் சமஸ்கிருதத்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

## அமுத மொழிகள்

**சோம்பலும் சோர்வும் கொண்டு நூறு ஆண்டு வாழ்வதைவிட ஒரு நாளேனும் பெருமுயற்சியோடு வாழ்தல் மேலானது.**

**வாழ்க்கைச் சிந்தனையிடத்திலும், சிந்தனையை வாழ்க்கையிடத்திலும் செலுத்திக் கொண்டே இருக்கவேண்டும்.**

**முட்டாளிடம் பேசாமல் இரு; முன்னேற்றம் தானே வரும்.**

– புத்தர்–

*வீரகேசரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார் விபத்து

2008 இல் திருமண வாழ்வின் அறுபது ஆண்டுகளை இன்பமாகக் கொண்டாடி மகிழ்ந்திருக்கும் வேளையில், அடுத்தமாதம் விபத்தொன்றில் சிக்கினேன். கார் விபத்து. கொழும்பு வெள்ளவத்தை காலி வீதி W. A. சில்வா மாவத்தை சந்தியில், மஞ்சள் கடவையால் வீதியைக் கடந்து போகும்போது, 30 அடி தூரமளவில் கார் ஒன்று மிக வேகமாக வந்து, பிறேக் பிடித்ததும் அது உடன் நிற்காமல் வந்து, என்னை மோதியது. எழும்ப முடியவில்லை. 4, 5 பேர் என்னை தூக்கி அதே காரில் ஏற்றிக் கொண்டு சமீபமாகவுள்ள றோயல் வைத்தியசாலையில் சேர்த்தனர். செல்லும்போது அக்காருக்குள் இருந்த பெண் கூறியது எனக்குக் கேட்டது. ''அவசரப்பட்டுவிட்டீர்கள்'' என்ற வார்த்தை இன்றும் மறக்கவில்லை. வாகனம் ஓடுபவர்கள் பொறுமையாக ஓடினால், இத்தகைய நிலை ஏற்படுமா? வைத்தியசாலையில் சேர்த்ததும் என் காதிலிருந்து இரத்தம் வரத்தொடங்கியது. மருந்து கட்டிவிட்டு, களுபோவில ஆஸ்பத்திரிக்கு என்னை அனுப்பிவிட்டு, வீட்டாருக்கும் அறிவித்தல் கொடுத்தார்கள். அங்கு போனவுடன் காது வெளிப்புறம் வெடிப்பு இருந்தது. தையல் போட்டார்கள். காலை படம் எடுத்துப் பார்த்து எலும்பு முறியவில்லை. ஆனால் எலும்பில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது எனச் சொல்லி பசை போட்ட துணியால் சுற்றப்பட்டு, (இடது கால்) மூன்று நாள் அங்கு இருந்தேன். பொலீஸார் ஆஸ்பத்திரியில் என்னிடம் முறைப்பாடு எடுத்தனர். கார்ச்சாரதியும், மனைவியும் வீட்டிற்கு வந்து வழக்கு தொடராமல் விடுவதென்றால், என்னிடமிருந்து கடிதம் வாங்கி வரவேண்டுமெனச் சொல்லிக் கடிதம் கேட்டனர். பண உதவி செய்யவும் ஆயத்தமாக இருந்தார்கள். மருமகன் குமரன் எட்டுப்பிள்ளைகளும், மருமக்களும் எட்டுக்கு மேற்பட்ட கார் வாகனம் வைத்திருக்கிறார்கள். இது தற்செயலாக நடந்தது. உதவி பெறாமல் கடிதம் கொடுத்து விடும்படி என்னிடம் கூறினார்கள். அதன்படி கடிதம் கொடுத்துவிட்டேன். நாற்பது நாட்களுக்குப் பின்னும் மூன்று மாதம் வரை நடக்க முடியாமல் இருந்தேன். கொஞ்சம் கொஞ்சமாக காலை நீட்டியும் மடக்கியும் அப்பியாசம் செய்தும் ஓரளவு சுகமாக இருக்கிறேன். யோகாப்பியாசம் செய்து வருகிறேன். எலும்பு முறிவு ஏற்படாததிற்கு அதுவும் ஒரு காரணம் என எண்ணுகிறேன்.

# வயிற்றில் திடீரென வலி, சத்திர சிகிச்சை

2008 ஆம் ஆண்டு இன்னுமொரு சம்பவம் என் வாழ்வில் நடந்தது. ஒரு நாள் வயிற்றில் திடீரென ஒரு வலி ஏற்பட்டது. என்னை வெள்ளவத்தையிலுள்ள டெல்மன் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்றனர். அங்கு நிற்பாட்டி விட்டார்கள். அன்றிரவு மட்டும் சரியான வலி, டாக்டர் கணேசரத்தினம் என்னை கொள்ளுப்பிட்டியிலுள்ள டேர்டன்ஸ் ஆஸ்பத்திரியில் (Durdans Hospital) ஸ்கான் பண்ணி வரும்படி கூறினார். அதற்குமுன் 2 லீற்றர் தண்ணீர் குடிக்கும்படியும் கூறினார். வயிற்றுக்குடலில் முறுக்கு ஏற்பட்டதாகக் கூறி, மாலை 5 மணிக்கு எனக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டுவிட்டது. மயக்க முடிந்த நிலையில் எழுந்த நான் மகள் வினிதாவிடம் டாக்டர் வரவில்லையா? என்று கேட்டேன். அப்பொழுதுதான் மகள், டாக்டர். இந்திரகுமாரின் உதவியுடன், டாக்டர். கணேசரத்தினம் சத்திரசிகிச்சை செய்து முடித்துவிட்டுப் போய்விட்டார் என்றாள். மகன் விஜி வெளிநாட்டிலிருந்து வந்து அருகிலிருந்து கவனித்தார். மனைவியும், மகள் வினி, மருமகன் குமரன் ஆகியோர் ஆஸ்பத்திரிக்கு (டெல்மன்) வந்து என்னைப் பார்த்து, Dr. மாரையும் சந்தித்துத் தேவையானதைச் செய்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாவது ஆண்டாகக் கதிர்காம தல யாத்திரை

05.12.2015 அன்று காலை 5.45 மணிக்கு கடைசி மகள் வினிதா, குமரன். பேரப்பிள்ளைகள் சகிதம் கதிர்காம யாத்திரைக்குப் புறப்பட்டோம். பம்பலப்பிட்டி வஜிராப் பிள்ளையார் கோயிலில் தேங்காய் உடைத்துப் பிள்ளையாரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு புறப்பட்டோம். கொட்டாவ என்ற அதிவேகப் பாதையாலேயே சென்றோம். கட்டணம் செலுத்தப்பட்டது. எட்டு மணியளவில் மாத்தறையை அடைந்தோம். காலை 8.15 இற்கு தெய்வேந்திரமுனை (தென்னிலங்கை முடிவு) சென்றோம். ஆயிரக்கணக்கான ஆழ்கடல் மீன்பிடிக்கும் வள்ளங்கள் நிற்பாட்டப்பட்டுள்ளன. காலநிலை காரணமாக அவை கடலுக்குச் செல்லவில்லை. மழை வெள்ளம் வீதிக்கு மேல் ஓடிக்கொண்டிருந்தது. அதற்கு மேலால் வாகனங்கள் போவதும், வருவதுமாக இருந்தன. நாங்களும் வெள்ளத்திற்கு மேலால் போய்க்கொண்டிருந்தோம். பிள்ளையார் செல்வக்கதிர்காமம் வீதியில் அமைந்துள்ள சவ்வாரி விடுதியில் (Hotel) இரு அறைகள் எடுத்துத் தங்கினோம். குமரனின் சகோதரி மீனாவும் குடும்பத்தாருடன் திருகோணமலையில் இருந்து வந்து தங்கியிருந்தனர். எல்லோருமாக மாலை செல்லக்கதிர்காமம் சென்றோம். மாணிக்க கங்கை வேகமாக உயரமாகப் பாய்ந்துகொண்டிருந்தது. பிள்ளைகள் கரையிலிருந்து முருகனுக்கு முடி தானம் (முடியிறக்கம்) செய்தனர். ஆற்றுக்கு மேலே போடப்பட்டிருந்த பாலத்தினால் போய் பிள்ளையாரை வணங்கினோம். பூஜையும் கண்டோம். பிரசாதம் பெற்றுக் கொண்டு, கதிர்காம முருகனின் சந்நிதிக்கு வந்தோம். மனைவி கற்பூரச்சட்டி எடுத்தார். மிகவும் வசதியான அறையில் இரவு தங்கினோம். 6.12.2015 அன்று காலை 7.45க்கு கதிரமலைக்குப் புறப்பட்டோம். தற்போது இயலாதவர்களுக்கென மலைக்கு செல்வதற்கென மாற்றுவழியாக ஜீப்பில் போகும் வசதியைச் செய்துள்ளனர். அதன் மூலம் நானும், துணைவியும் சென்றோம். மற்றவர்கள் படியால் ஏறி கதிரமலையை வந்தடைந்தனர். சிவன் கோயிலுக்கும் சென்றோம். அங்கு சிவன், பிள்ளையார். சக்தி அம்மன், முருகன் அடங்கிய திரைச்சீலை போடப்பட்டிருந்தது. பூஜை, தீபாராதனைகள் துணியால் வாய் கட்டப்பட்டு செய்யப்படுவதே. எல்லோருக்கும் விபூதியால் பொட்டு வைத்து, பிரசாதமாக சர்க்கரைப்பிரசாதமாகத் தந்தனர். வள்ளி தெய்வயானையுடன் ஆறுமுகன் உருவச்சிலை மிக அலங்காரமாகக் காணப்பட்டது. வயிரவர் சூலம், வேல் வெளியில் வைக்கப்பட்டிருந்தது. பிரசாதம் வழங்கியதும், அன்னதானமும் செய்தனர். போனமாதிரி கீழே எல்லோரும் வந்து இறங்கினோம். நோயற்ற வாழ்வையும், பொருளையும் அடியேன் செய்யவேண்டியதையும் தரும்படி கதிர்காமக்கந்தனிடம் வேண்டினோம். மீண்டும் கொழும்புக்குத் திரும்பினோம். கொட்டும் மழையில் மழை வெள்ளம் பாயப் புறப்பட்டோம்.

## பெரியோரைப் பற்றிக் கொள்

பலமற்ற கொடியானது உயர்ந்த மரத்தைச் சுற்றிக் கொண்டு வானம் வரை உயர்கிறது. மரத்தைப் பற்றிக் கொள்ளவில்லை என்றால் மண்ணில் படர்ந்து காலினால் மிதிபடுகின்றது. கல்லைத் தண்ணீரில் போட்டால் மூழ்கிவிடுகிறது. அதே கல்லை கட்டையால் செய்யப்பட்ட படகின் மேல் வைத்தால் மிதந்து செல்கிறது. அதைப்போல் நம்மைவிட அறிவிலும், ஆற்றலிலும் பெரியோர்களைப் பற்றிக் கொண்டால் நாமும் உயர்வடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெய்வேந்திரமுனை (தென் இலங்கை முடிவு)



செல்லக்கதிர்காமம் சவ்வாரி விடுதியில் (Hotel) அழகான ஆண் மயில்



வரும் போது கண்ட உயிரற்ற மான் கூட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலம் ஆக்கிரமிப்பு

கடன் பட்டோம், கடன் கொடுத்தோம், உறவுகளை மதித்தோம், அவ்வாறே ஊழியம் செய்பவர்களையும் மதித்தோம். ஆனால், பலன் ஏமாற்றப்பட்டேன். தகுதியறிந்து உதவி செய்தல் வேண்டும். காரைநகரில் உள்ளவர் லோகநாதன் (சலவைத் தொழிலாளி) 1990க்கு முன் யுத்தகாலம் தனது ஊரில் இருக்கமுடியாமல் எங்களிடத்தில் உதவி கேட்டார். சில வருடங்களாக எங்களுக்கு சலவைத் தொழில் செய்து வந்தமையால், எங்கள் பொறுப்பில் இருந்த கட்டி முடிக்கப்படாத வீட்டை அவர் இருப்பதற்கு உதவினோம். அவர் அந்த வீட்டையும் வாங்கிக் கொண்டு, பக்கத்தில் உள்ள எங்கள் காணிக்கிடையில், நில அளவையாளரால் போடப்பட்ட மதிலில் உள்ள எல்லைக்கல்லையும் எடுத்து, எங்க நிலத்தையும் சிறிது, சிறிதாக ஆக்கிரமிக்கத் தொடங்கினார். குசினியின் ஒரு பகுதியையும் மதிலினையும் சற்று அகட்டியுள்ளார்கள். நிலத்தின்கீழ்க் குழாயினைத் தாட்டு, தங்கள் பகுதி அசுத்த நீரை எமது காணிக்குள் விட்டுள்ளார். இவ்வாறாகப் பல அடாவடித்தனங்களை செய்து வருகிறார். வயது முதிர்ந்த காலத்தில் இப்பிரச்சினையால் கொழும்பிலிருந்து அடிக்கடி யாழ்ப்பாணம் போகவேண்டிய நிலையேறப்பட்டுள்ளது.

# வாழ்வின் நினைவுகள் 1950க்கு முன்

யாழ்ப்பாணம் பெரியகடை ஆஸ்பத்திரி வீதியில் இருந்து தொடங்கும் கஸ்தூரியார் வீதி. கிழக்குப்பக்கத்தில் பிரதான பஸ் சாலையாகவும் பின்பக்கம் வண்டிகள் நிறுத்தப்படும் வீதிக்கு மேற்குப்புறத்தில் 10 கடைகள் வரிசையாக இருந்தது. றாக்கைகள் வைக்கப்பட்டு ஒரே விதமான அழகான போத்தல்கள் வைக்கப்பட்டு, இனிப்பு வகைகள், சொக்கிளேற்று இன்னும் கண் கவரும் பொருட்கள் வைத்து அழகாக இருக்கும். அந்தக் கடைகளில், பிரதானமாக சர்பத் தயாரித்து கொடுக்கப்படும், மதுரமித்திரன், இராஜா கூல்பார் (Rajah coolbar) இந்த இரண்டும் விசேடமானவை. ஒரு பெரிய கிளாசில் தருவார்கள். முதல் 15 சதமாய் இருந்தது. பின் 25 சதமாகக் கூட்டிவிட்டார்கள். இராஜா கூல் (Bar) பாரில்தான் பெரிய கடை போகும் நேரத்தில் சர்பத் வாங்கிக் குடிப்பேன் Rajah cool Bar ஆஸ்பத்திரி வீதியில் சுபாஸ் கடை, கொட்டல் இருந்தது. யுத்தகாலத்தில் நிற்பாட்டி இப்போ திறந்திருக்கிறார்கள். வை. சி. சி. கு, (V.S.S.K சுருட்டுக்கு பேர் போனவர்கள். தேனீர் சைவ சாப்பாட்டுக்கடை, மலாய கபே S. V. முருகேசு கடை பலசரக்கு மொத்த விற்பனையாளர் கடை கொழும்பிலும் உண்டு. சிற்றி பேக்கரி முதல் முதலாக (சிங்கள ஆட்கள்) வந்ததென அறிகிறேன். முதல் வந்த மருந்தகம் றோயல் பார்மசி (Royal Pharmacy) திரு. திருமதி. துரைரத்தினம் நடத்தினார்கள். முதல் இருந்த தியேட்டர்கள் றீகல் தியேட்டர், வின்சன் தியேட்டர், வெலிங்டன் தியேட்டர், ராணி தியேட்டர் பின். சி. தியாகராசா S.T.R. Films அவர்களின் தியேட்டர்கள் முன், அரிசி, மேலும் சில பொருட்கள் வாங்குவதற்காக கூப்பன் புத்தகம் தருவார்கள். அந்தக்கிழமைக்குரிய பகுதியை வெட்டி எடுத்துக் கொண்டு அரிசி தருவார்கள். அதே போல அதில் துணியும் வாங்கலாம்.

1989 ஆம் ஆண்டு என நினைவு ஸ்ரீசபாரத்தின சுவாமிகள் இருந்து மறைந்த பின், நூற்றுக்கணக்கான புத்தகங்களும், சஞ்சிகைகளும் சேகரித்து வைத்திருந்தேன். இதை வைத்துக் கொண்டு நூல் நிலையம் ஒன்று திறந்து பின் பெருப்பிக்கலாம் என்ற நோக்கத்தில் யாழ் அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் கௌரவ சபாபதிப்பிள்ளை அவர்களைக் கொண்டு (திருவாசகம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் குரு பூசை தினம்) 25 ஜனவரியில் நூல் நிலையம் திறந்தேன். அதற்கு விசேட விருந்தினராக உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் வந்து சிறப்பித்தார். கௌரவ. வ. கானமயில்நாதன் அவர்கள். பின் யுத்தகாலம், குண்டு வீச்சு நாங்களும் இடம்பெயர்ந்து கொழும்பிற்கு வந்து விட்டோம். இருந்த புத்தகங்களும் தொலைந்து விட்டன.

யாழ்ப்பாணம் புதிய மாக்கற் கட்டுவதற்காக இருந்த சர்பத் கடைகளை அகற்றி விட்டார்கள். பஸ் நிலையமும் கிழக்குப் பக்கமாக அமைக்கப்பட்டுள்ளது. தூர இடங்களுக்குப் போகும் பஸ்கள் யாழ் கோட்டைக்கு அண்மையில் இருந்து புறப்படும். இந்த பஸ்கள் எல்லாம் மிக உயரமானதாகவும் வடிவமைப்பு, அழகானதாகவும் உள்ளது. A/C போடப்பட்டிருக்கும். படம் காட்டப்படும். பொதிகள் வைக்க சீற்றுக்கு கீழ் விசாலமான இடம் உண்டு. யாழ். கொழும்பு போவதற்கு வானுக்கு கொடுக்கும் பணத்திற்கு மேலாக இன்னும் ஒரு பங்கு கூடுதலாக கொடுக்கவேண்டும்.

## திருவாசகப்புத்தகம் அன்பளிப்பு

1999 உயர்திரு. சி. நேசேந்திரன் அவர்கள் தன் தாயின் நினைவாக மக்கள் பயனடைய திருவாசகப்புத்தகத்தை பதிப்புச் செய்துள்ளார். இப்பதிப்பு, பொருள் உணர்ந்து கொள்ளக்கூடியதாக சிறந்ததாக அமைந்துள்ளது. திருவாசகம் சபாரத்தின சுவாமிகள், குருபூசை, திருவாசக முற்றோதல் நடைபெறுவதை அறிந்து, அந்த நிகழ்வுகளில் அனைவரும் திருவாசகம் படிப்பதற்கும் எமக்கு ஐம்பது நூலும், இரண்டாம் முறையும் பத்து புத்தகங்களையும் அன்பளிப்பாகத் தந்துள்ளார். இதை திருவாசக விழா, முற்றோதலில் பங்கு பற்றுவோருக்கு புத்தகம் இருக்கும் வரை கொடுத்துள்ளேன். திரு. சி. நேசேந்திரன் அவர்களுக்கு எமது நன்றியுடன் இப்புத்தகத்தை வைத்திருந்து படிப்போரின் பேரிலும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி சொன்னதால் தங்களை அன்னியப்படுத்தவில்லை.

உயர்திரு. வே. திரு நீலகண்டன் அவர்கள், லக்ஷ்மி அச்சகம், உரிமை ஸ்ரீ திருவாசகம் அவர்கள், தொண்டர் சபை, உபதலைவர், வைரவிழா, மானுடவாழ்வின் மகத்துவம், மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். முதல் பதிப்பு ஈழத்துச் சிவாலயங்கள், பதிப்பு உரிமை கலாபூஷணம் தம்பு துரைராசா; ஸ்ரீ சபாரத்தின சுவாமி தொண்டர் சபை செயலாளர் இப்புத்தகங்களை அச்சுப்பதிவு செய்து புத்தகமாகத்தந்தவர். அடுத்து திருக்கேதீஸ்வர தரிசனம். இந்த நூலை தொகுத்து 90 பக்கங்களை தனது கையால் காலை 9 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை 9 மணித்தியாலத்தில் எழுதித் தந்தவர் நூலாசிரியர் மகாவித்துவான் கலாநிதி. கனகசபாபதி நாகேஸ்வரன் MA, Ph.d. இந்நூலைத் தனது செலவில் நூலாக்கியவர், திரு. வே. திருநீலகண்டன் அவர்கள் எனது வாழ்வின் நினைவுகள் நூலுக்கும் செய்து வரும் திருப்பணிகளுக்கும், செய்ய விருக்கும் நற்பணிகளுக்கும் உதவி ஒத்தாசை செய்தவர்கள், செய்ய இருப்பவர்களுக்கும், அன்புடை நெஞ்சத்தவர் அனைவரையும் நன்றி சொல்லி அன்னியப்படுத்தாமல், ஆயிரம் பிறைகண்டு மணிவிழா, வைரவிழாவையும் கண்டவன் 92 ஆவது வயதில் எனது மனைவியுடன் வாழ்த்தி வணங்குகிறேன். மகிழ்ச்சியடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய யாத்திரை



27.04.2008 இல் எமது அறுபதாவது மணவாழ்க்கை ஷஷ்டியப்த பூர்த்தி ஆண்டில், எண்பதுக்கு மேற்பட்ட தலங்களையும் சுற்றுலா மையங்களையும் பார்த்துவரக் கிடைத்தது. இறைவனின் திருவருட் பேறாகும். பெங்களூரில் பகவான் சாயி பாபா தரிசனமும் கிடைத்தது. அவர் மேடைக்கு வந்து, பஜனை முடிவில் தனது கையை உயர்த்தி அசைத்து ஆசீர்வதித்ததைப் பெரும்பேறாகக் கருதி, மகள், மருமகனுடன் மகிழ்ச்சியடைந்தோம்.



## றம்பொடை ஆஞ்சநேயர் ஆலயம்

இரண்டாம் முறையாக றம்பொடை ஆஞ்சநேயர் ஆலயம். சுவாமியின் அதியுயர் 18 அடி உயரமுள்ள தனது வாலை பின்புறம் உயர்த்திக்கொண்டு நிற்கும் ஆஞ்சநேயரின் அழகான தோற்றத்தை நெஞ்சிலிருத்தி, வணங்கிப் புறப்படுகின்றோம்.

அன்று மாலை நுவரெலியா வந்து ஹொட்டலில் தங்கினோம். இரவு அதிக குளிர். எனக்குத் தாங்க முடிய வில்லை.

அடுத்த நாள். இல. 82 லேடி மக்கலம்ஸ் டிரைவ், நுவரெலியா வந்தோம்.



காயத்திரி சித்தர் ஸ்ரீ முருகேசுமாமஹரிஷி, ஸ்ரீ லங்காதீஸ்வரப்பெருமான் அன்னை ஸ்ரீ காயத்திரி தேவியின் பரிபூரண அருட்கடாட்சத்தைப் பெற்றுப் புறப்படுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்ஜோதி
# ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் J.P.
# அன்பு அறம் பண்போடு வாழ்பவர்

இல்லற வாழ்வில் அறுபது ஆண்டு ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவ விழாக்காணும் துரைராசா இரத்தினேஸ்வரி தம்பதி தமது வாழ்வில் எல்லாவிதமான சிறப்புக்களையும், பரிபூரணமாகப் பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்கின்றனர், என்பதனை எண்ணும்போது மனத்திற்கு மகிழ்ச்சியைத்தருகிறது. திருவாளர் துரைராசா அவர்கள் தமது காலத்தில் சிவநெறித்தொண்டுகள் பலவற்றைச் செய்து வருவதோடு, தற்கால சந்ததியினருக்கும், எதிர்காலத் சந்ததியினருக்கும் பயன்படும் வகையில் பல அரிய வரலாறுகள் கொண்ட "ஈழத்து சிவாலயங்கள்" என்னும் அரிய பொக்கிஷத்தை வெளியிட்டுள்ளார்கள். அறுபது ஆண்டுத் திருமணவாழ்வு என்பது, எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய பாக்கியம் இல்லை. அதனையும் பூரணமாகப் பெற்ற தம்பதி திரு. துரைராசா இரத்தினேஸ்வரி தம்பதியர் இன்னும் பல்லாண்டு நோய் நொடியற்று வாழ, எல்லாம் வல்ல இறைவன் நல்லருள் பாலிக்கவேண்டும் எனப் பிரார்த்தித்து எமது பூரண அருளாசிகளை வழங்குவதில் மன நிறைவு கொள்கிறேன்.

சுபம்.

மங்களமுண்டாகட்டும்

**என்றும் அன்புடன் ஸ்ரீ ஐயப்பதாசக் குருக்கள்**

**சர்வதேச இந்துமத குருபீடம்**

**NA 920**

**பட்டமளிப்பு பாராட்டுப் பத்திரம்**

**இலங்கை இந்துமத குருபீடாதிபதி**

**சிவாகம ஞானி கலாநிதி அருள்ஜோதி**

**ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின்**

**10 ஆவது ஆண்டு ஞாபகார்த்த**

**ஆன்மீகப் பெருவிழாவில்**

**திருவாளர் தம்பு துரைராசா அவர்களின்**

**சமய சமூக கலைப்பணிகளைப் பாராட்டி**

**பொன்னாடை போர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவநெறிக் கலாநிதி"
எனும் சிறப்புப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டபோது
வழங்கப்பட்ட பாராட்டுப்பத்திரம்
அன்னாரின் ஆன்மீகப் பணிகள் சிறப்புற
எமது பரிபூரண அருளாசிகளை வழங்குகிறோம்.

சுபம்

08.08.2008

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்

இன்று கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் "ஈழத்துச்சிவாலயங்கள்" நூலும் வெளியிடப்பட்டது. கௌரவ டி. எம். சுவாமிநாதன் அவர்கள் பிரதமவிருந்தினராக வந்து உரையாற்றி, த. துரைராசா அவர்களின் சேவையைப் பாராட்டி அவருக்கு அன்பளிப்பாக ரூபா 10000/= கொடுத்தார். (தற்போது பாராளுமன்ற உறுப்பினராகவும், புனர்வாழ்வு புனரமைப்பு இந்து கலாசார அமைச்சு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சராகவும் 11.11.2015 ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்றுள்ளார்.)

## நல்வாழ்வுக்குரிய 10 நெறிகள்

1. காலையில் எழுந்தவுடன் கடவுளை நினைத்துப் பிரார்த்தனை செய்க.
2. எல்லோருக்கும் இனியவராக, நல்லவராக இருக்க முயலுக.
3. மனத்தாலும் பிறருக்கு தீங்கு நினையாதே.
4. பிறர் பசியைப் போக்க முடிந்தளவு உதவுக.
5. உணவு உண்ணுமுன் மற்றவர்க்கோ, பறவைகளுக்கோ பிறவற்றுக்கோ சிறிது உணவளித்து விட்டுச் சாப்பிடுக.
6. இறைவனுடைய திருப்பெயரை உச்சரித்தவாறே உறங்குக.
7. தீயவைகளை எண்ணாமலும், பேசாமலும், கேட்காமலும், பாராமலும், இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.
8. பெரியோர்களை வணங்கி, அவர் கூறும் அறிவுரைகளை கேட்கவேண்டும்.
9. அடுத்தவர்களை அன்பாக நேசிக்கவும்.
10. உறங்கு முன் அன்றாட நன்மை தீமைகளை எண்ணிப் பார்த்து, தீமைகளை குறைக்க முயற்சிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துவான் வசந்தா வைத்தியநாதன் அவர்களின் வாழ்த்து

திரு. தம்பு துரைராசா அவர்கள் அனைத்து நற்பணிகளையும் முழுமூச்சுடன் முன்னெடுப்பவர். தேனீயின் முயற்சியும், எறும்பின் சுறுசுறுப்பும் இவரிடம் தோற்றுவிடும். காட்சிக்கு எளியவர் கருதுவதில் வல்லவர் எடுத்த காரியத்தை இனிதே முடிக்கும் திண்மை மிக்கவர்.

"மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினர்"

என்ற பாடல் திரு. தம்பு துரைராசாவை எண்ணியே எழுந்ததோ என்னவோ, "அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும்!" என்ற திருக்குறளின் இலக்கியம் என்றும் கூறலாம். இத்தகைய நல்ல பல குணங்களின் உறைவிடமான திரு. துரைராசா இரத்தினேஸ்வரி தம்பதி இல்லற வாழ்வில் அறுபது ஆண்டு காணும் இந்நாள் பொன்னாள். மனையறத்தை மங்கலமாக்கும் மனையாளுடன் பெற்றோர் கருத்தறிந்து நடக்கும் நன்மக்களுடன் சுற்றமும் நட்பும் சூழ பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு வாழ்ந்து சிறக்குமாறு அம்பிகையின் மலர்தாள் பணிந்து வாழ்த்துகின்றேன்.

நலமே தழைக்க அன்புடன்

**வசந்தா வைத்தியநாதன்**

**துருப்பிடித்த இரும்பு காந்தத்தின் கவர்ச்சிக்கு உட்படுவதில்லை. துரு நீங்கப்பெற்றதும் அது காந்தத்தால் இழுக்கப்படுகிறது. விருப்பு, வெறுப்பு என்னும் துருப்பிடித்த உள்ளத்தில் பக்தி பெருக்கெடுப்பதில்லை. சுத்த மனதின் கண் பக்தி விரைவில் தோன்றுகிறது.**

*– ஸ்ரீ இராமகிருஷ்ணர் –*

**எப்பொழுது ஒருவன் விஷயங்களில் பற்றற்றுக் கருமத்தில் கருத்து வைக்காது எண்ணங்களை விட்டொழிக்கிறானோ அப்பொழுதுதான் அவன் யோகாரூடன் ஆகின்றான்.**

*பகவத்கீதை தியானயோகம்*

*அத் – 8 –4*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோரணவாயில் என்ற தலைப்பில் வித்துவான் வசந்தா வைத்தியநாதன் எழுதியது.

அன்புடையீர் வணக்கம்!

மங்கலத்தோரண வாயிலின் முகப்பில் நின்று, திருக்கேதீச்சரம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமி தொண்டர் சபையினர், உங்கள் அனைவரையும் அகமும், முகமும் மலர வரவேற்பதில் பெருமகிழ்வு அடைகின்றோம். இதோ, இங்கே கண்கவர் மணமண்டபத்தில் அமர்ந்திருக்கும் ஸ்ரீமான் துரைராசா இரத்தினேஸ்வரி தம்பதியர் இதயத்தால் மட்டுமல்ல, பணியாலும் இணைந்தவர்கள். தெய்வீக அருள்பெற்றவர்கள். அறுபது ஆண்டுகள் இல்லறமாகிய கோவிலைப் புனிதப்படுத்தியவர்கள். தெய்வத்திருமுறையாம் திருவாசகத்தில் தோய்ந்த நெஞ்சினர். நல்ல பல நூல்களை வெளியிட்ட சிறப்புக்குரியவர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, திருவாசக சுவாமிகள் என்று அழைக்கப்படும் ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளின் திருவடிகளில் அன்பு பூண்டு, அவரது பரிபூரண ஆசிக்குப் பாத்திரமாகியவர்கள்.

யோகமும், போகமும் ஒத்து இணைந்திருக்கும் இவ்வற்புதத் தம்பதியினர் சகல பேறுகளையும் பெற்று, என்றும் பதினாறாக வாழ, எல்லாம் வல்ல ஸ்ரீ அபிராமி சமேத ஸ்ரீ அமிர்த நடேசப் பெருமான் திருவருள் பாலிக்க, அன்புடை நெஞ்சத்தவர் அனைவரும் வாழ்த்துவோம். வணங்குவோம்.

1. தவத்திரு கணேசானந்த மகாதேவ சுவாமிகள்
   மகாதேவ ஆச்சிரமம் – ஜெயந்திநகர், கிளிநொச்சி.
   "திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர்"
2. வேதாகம சோதிட பூஷணம் – சி. சிதம்பரநாதக்குருக்கள், மட்டுவில், சாவகச்சேரி.
3. இரத்தின வள்ளல் – ஈச்சமோட்டை, ஞானவைரவர் ஆலயம், பிரதமகுரு சிவஸ்ரீ தி. பாலசுப்பிரமணியக்குருக்கள் வழங்கியது.
4. கொழும்பு திருக்கணித ஜோதிட நிலைய அதிபர். ஜோதிடமணி பிரம்மஸ்ரீ. சி. ஜெகதீஸ்வர சர்மா வழங்கும் பெருமைப்படும் நாள்.

இல்லற வாழ்வில் மணிவிழாக்காணும் இணைப்பிரியாத தம்பதி துரைராசா இரத்தினேஸ்வரி தம்பதியின் வாழ்நாட்களைக் கண்ணுற்றுப் பெருமைப்படாமல் இருக்க முடியாது. ஒவ்வொருவரும் தமது வாழ்நாளில் மணிவிழாக்காண்பதே அரிதாக இருக்கும் இன்றைய காலகட்டத்தில் இல்லற வாழ்வில் மணிவிழா என்பது கிடைத்தற்கரிய பேறாகும்.

**"விளையாட்டுப் பழமும் விளையாட்டு யானையும், வாஸ்தவமான பழத்தையும், யானையும் நினைப்பூட்டுவதுபோல ஆராதிக்கப்படும் விக்கிரகங்கள் நித்தியனும் அரூபியுமான ஈஸ்வரனை நினைப்பூட்டுகின்றன"**

*– ஸ்ரீ இராமகிருஷ்ணர் –*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பழைய கதிரேசன் கோயில்
# பிரதமகுரு சங்கர் ஐயா சண்முகரத்தினக் குருக்கள் வழங்கும் வாழ்த்து

வாழ்க்கை என்பது ஒருவருக்கொருவர் கருத்தொருமித்து, மனதிலே அன்பை வளர்த்துக் கொள்வதற்கும், இளம் வயதிலே இன்பமாக இருப்பதற்கும், வாழ்க்கையிலே தியாகத்தை வளர்த்துக்கொள்வதற்கும் மாத்திரம் அல்லாமல், வாழ்நாள் முழுவதும் மறுபிறவியிலும் இன்பமாக வாழ்வதற்குத்தான் இல்வாழ்க்கை. தங்கத்தம்பதியராம் துரைராசா இரத்தினேஸ்வரி அவர்களுக்கு மேலும் இறையருளும், திருவருளும் உண்டாவதாகுக.

ஜோதிட வருடங்களது பெயர்கள் கூட 60 என மட்டுமே தரப்பட்டுள்ளது. 60 முடிய மீண்டும் முதலில் இருந்து ஆரம்பித்தல். எனவே, இந்த அறுபதாவது ஆண்டுப்பூர்த்தி இத்தம்பதிக்கு மீண்டும் புதியதொரு வாழ்க்கையை ஆரம்பிக்கிறது. எனவே, எல்லோரும் சேர்ந்து அவர்கள் நீடுழி வாழ வாழ்த்துவோமாக.

அன்புடன்,
**ஆயர்பாடி இராமகிருஷ்ணன்**

# இல்லற வாழ்வின் இன்பமான நாட்களும், வாழ்த்துக்களும்

2008 ஆம் ஆண்டு எமது திருமண விழாவின் அறுபதாண்டு பூர்த்தி விழா கொண்டாடப்பட்டது. ஸ்ரீ கதிரேசன் கோவில் (பம்பலப்பிட்டி) சங்கர் ஐயா சண்முகரத்தினக்குருக்கள், முறைப்படி தம்பதிகளை குளிப்பாட்டி, புத்தாடை அணிவித்து ஓமம் வளர்த்து கண்கவர் மண்டபத்தில் இருத்தி, முறைப்படி மணமக்களை ஆசீர்வதித்தனர். ஸ்ரீமான் துரைராசாவிற்கு, திருப்பணித்தவமணி சி. தியாகராசா தலைப்பாவை அணிவித்தார். கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் உத்தரியத்தை அணிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவான வாழ்வு வாழும்
# தம்பு துரைராசா இரத்தினேஸ்வரி தம்பதியினர்க்கு:

தம்பதியாய் நீங்கள் இத்தரணியிலே அவதரித்தீர்கள். தங்களுக்காய் வாழாது மக்களுக்காய் வாழ்ந்தீர்கள். தம் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அவர்களுடன் மருமக்கள் சுற்றத்தார், உற்றார், உறவினருடன் இவ்வுலகில் இனிய இல்லற வாழ்வை வாழ்ந்து காட்டினீர்கள். வருங்காலச் சந்ததியினருக்கோர் எடுத்துக்காட்டாய் வளமுடன், மகிழ்வுடன் வாழும் தங்களை வாழ்க, வாழ்க என வாயார வாழ்த்துகிறோம். போற்றுகின்றோம். புகழ்கின்றோம்.

தொண்ணூறு என்பது தள்ளாத வயது. ஆனால் உறங்காத வயதுடையவர் இவ்வுத்தமர் துரைராசா ஓயாது கணப்பொழுதும் எம் சைவம் ஓங்க – மெழுகுதிரியாய் நின்று செயற்பட்ட செயல்வீரன். சலியாத உளம் கொண்ட இப்பெருமகனுக்கு துணையாய் நின்றவள், முறைப்பெண் இரத்தினேஸ்வரியை பதினான்கு வயதினிலே பத்தினியாய் கரம்பிடித்தான். பருவவயதிலேயே இரு நான்கு மக்களைப் பெற்றெடுத்தார். பார்போற்றும் தாயாய், பக்குவமாய் உணவளிப்பாள். மனம் நோகாள். சினம் கொள்ளாள். களைப்படையாள். சிரித்த முகத்துடன் சிவத்த பொட்டு நெற்றியில் ஒளிக்கச் சிறப்பான அழகு தேவதையாய் எண்பதிலும் மிளிர்கின்றாள். இவரை உடன் பெற்ற பலன் தான் தம்பு துரைராசா உயர்வதற்கு திடமாய் வாழ, இவள் இன்முகமும் இனிய ஆகாரமும் என்றும் கிடைத்திட இவ் இளம் தம்பதியினர் இன்று போல் என்றும் வாழ இறைவன் அருள் வேண்டி வாழ்த்துகிறோம்.

**சதானந்தன் தம்பதி**

நீ எல்லையற்றவன், மரணமற்றவன், பிறப்பற்றவன் எல்லையற்ற ஆத்மா ஆதலால் நீ அடிமையாக இருப்பது உனக்கு பொருந்தாது. எழுந்திரு! விழித்துக்கொள்! எழுந்து நின்று போராடு. தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும். அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

எழுந்திருங்கள், விழித்துக் கொள்ளுங்கள், இனியும் தூங்க வேண்டாம். எல்லாத் தேவைகளையும், எல்லாத் துன்பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளேயும் இருக்கிறது.

*– சுவாமி விவேகானந்தர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

- கலாநிதி வி. சிவசாமி -

திருக்கேதீச்சரம், திருவாசகம், ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகளின் தொண்டர்சபைச் செயலாளராக அவரின் சமய ஆன்மீக இலட்சியங்களை முன்னெடுத்து வருபவரும், பிரபல சமய சமூக சேவையாளருமான திரு. தம்பு துரைராசா அவர்களின் பெருமுயற்சியினால், இலங்கையிலுள்ள 88 சிவாலயங்கள் பற்றிய வரலாறு, பிரபல தமிழ் சைவ வித்தகி, வசந்தா வைத்தியநாதன் அவர்களை தொகுப்பாசிரியராகக் கொண்டு வெளிவருவது நன்கு பாராட்டிற்குரியது. இலங்கையிலுள்ள சிவாலயங்கள் பற்றிய ஒரு பெரிய முதன்துறையாக குறிப்பாகத் தமிழிலே வருவது நன்கு குறிப்பிடற்பாலது. ஒரு நிறுவனமோ அல்லது ஆராய்ச்சி அறிஞர் குழுவோ செய்யவேண்டிய நல்ல திருப்பணியைத் திரு. த. துரைராசா தனியாகவே செய்துள்ளமை என்றும் சைவ உலகிலே நினைவு கூரற்பாலதே. திருவாசகம் தவத்திரு சபாரத்தின சுவாமிகளின் திருவருட்கடாட்சம் பெற்ற இச்சைவப்பெரியார் திருவாசகத்திலே மிக்க ஈடுபாடு கொண்டவராக, இத்திருநூல் கூறும் சமய ஆன்மீக இலட்சியங்களை மனம், வாக்கு, காயம் ஆகியவற்றிலே பின்பற்றுபவர். தமது இல்லத்திற்கே திருவாசகம் திரு. த. துரைராசா என அழைப்பது மிகப்பொருத்தமானதே. திருவாசகம் அளித்துள்ள உறுதியான ஆன்மீக பலத்தினால் எண்பது வயது தாண்டிய பின்னரும் தெய்வீக இளவல் போல சமய, சமூகப் பணிகளை இவர் தொடர்ந்து செய்து வருகிறார். இவருடைய இப்பணிகளுக்கு இவரின் அன்புக்குரிய இல்லாளும், பிள்ளைகளும் உறுதுணையாக உள்ளனர். இந்து சமய வேதங்கள் மனிதனின் வாழ்நாள் நூற்றாண்டுகள் எனக்கூறும் இப்பெரியார், மேலும் பல ஆண்டுகள் உடல், உள்ளம் பாதிக்காது செல்வச்சிறப்புடன் வாழ்ந்து, பல சமய சமூகப் பணிகளைத் தொடர்ந்து செய்ய, எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப்பெருமான் இவருக்கு நன்கு திருவருள் பாலிப்பாராக.

எல்லோரும் இன்புற்றிருக்கவே.
ஸர்வே ஜநாஹ ஸுகிநோ பவந்து

திருவாசகம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகளின் பிறந்தநாள் 28 பங்குனியில் தனது திருவாசக இல்லத்தில் திருவாசகம் முற்றோதல் செய்து அமுது வழங்குவார்.

### அமுத மொழிகள்

**தன்னைத்தானே வெற்றி கொண்டவனுக்குத்தான் சந்தோஷம் கிட்டும்.**

**முயற்சி செய்துகொண்டேயிருந்தால் கடைசியில் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.**

**கோபம் அன்பை அழிக்கிறது. செருக்கு அடக்கத்தை அழிக்கிறது.**

*– மகாவீரர்–*

*வீரகேசரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



மனிதன் பிறக்கின்றான், வாழ்கின்றான், மறைகின்றான், வாழும் காலத்தில் அவன் ஆற்றிய பணிகள், பயன்பாடுகள் எவை சமூகத்துக்குச் சென்றடைந்தன, எதனைச் சாதித்தான், எதைச் சமூகத்துக்கு விட்டுச் சென்றான். அவற்றின் பதிவு என்ன? அடுத்த சந்ததியினருக்குச் சொல்லும் செய்தியென்ன? என்றவகையில் எப்படி வாழ்ந்தேன் என்பதை வாழும் காலத்திலேயே ஒரு பதிவாக சமூகத்திற்குப் பயன்படும் விதமாகத் தனது வாழ்க்கை வரலாற்றைப் பதிவு செய்கின்றார். கலாபூஷணம் தம்பு துரைராசா அவர்கள்.

தனது 92 ஆவது வயதில் 29 வயது மதிக்கத்தக்க துடிப்புடன் சிறப்பாகச் சமயப்பணி, சமூகப்பணி என்ற சிந்தையுடன் உழைத்துக்கொண்டிருக்கும் உத்தம தொண்டனாக எல்லோரையும் அரவணைத்து, அன்பு பாராட்டி ஆன்மீகச் சிந்தனையை நெஞ்சில் இருத்தி, சபாரத்தின சுவாமிகளை மனதில் சிந்தித்து, வந்தித்து அவர் பெயர் நிலைபெற மடம் அமைத்து, அங்கே குருபூசை, சமய நிகழ்வுகள் நடைபெற ஒழுங்கு செய்து, யாத்திரிகர் வந்து, தங்கி மகிழ்ந்து செல்லத்தக்கதான சூழலில் மாதோட்டத்தில் சிவனின் சிந்தனையுடன் பாலாவியின் கரை தாண்டி அமைந்து இருப்பதுவும் சிறப்பம்சமாகும்.

இத்தனை பணிகளையும் சிறப்பாக செயல்படுத்தும், கலாபூஷணம். தம்பு துரைராசா அவர்கள் பாராட்டப்படவேண்டியவரே. சமய சமூகப்பணியாற்றுபவர்கள் வாழ்வில் மன நிறைவைக் காண்பவர்கள். மன நிறைவு அவர்களை வாழ்விக்கும், தொண்டு செய்யத்தூண்டும். தூய்மையைத் துலங்க வைக்கும். துயர் துடைக்கும். பலம் சேர்க்கும் பக்குவப்படுத்தும். பணி தொடர உத்வேகம் தரும். சிறப்புக்கள் சேரும். சிறப்பாக வாழ்வார்கள். இவர் பணி தொடர வாழ்த்தி வணங்குகின்றேன்.

வணக்கம்.

வளர்க தொண்டர் பணி

இப்படிக்கு,

இறைபணியில்

**மு. கதிர்காமநாதன்.**

*அகில இலங்கை இந்துமாமன்ற பொதுச் செயலாளர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி மதுவரி ஆணையாளர்

# திரு. சி. புவேந்திரராசா அவர்கள் வழங்கிய வாழ்த்துரை

*"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று."*

என்னும் வள்ளுவர் வாக்கிற்கமைய புகழோடு தோன்றி, சுமார் 37 ஆண்டுகள் இலங்கை மதுவரித் திணைக்களத்தில் பல பதவிகளை வகித்த திரு. தம்பு துரைராசா அவர்களின் 80 ஆவது அகவை குறித்த இந்நாளில், அவருடன் நெருங்கிப் பழகிய உத்தியோகத்தர் என்ற முறையில் ஒரு சில நினைவுகளைப் பகிர்ந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

1944 ஆம் ஆண்டு, மதுவரிக் காவலராக இத்திணைக்களத்தில் தனது வாழ்க்கையை ஆரம்பித்த திரு. துரைராசா, தனது திறனையும், வல்லமையையும் வெளிப்படுத்தி 1956 ஆம் ஆண்டு "மதுவரிக் கோப்பரல்" என்னும் பதவியுயர்வைப் பெற்றார். இலங்கைத்தீவின் நாலா திசைகளிலும் உள்ள பல மதுவரி நிலையங்களிலும், வடிசாலைகளிலும், குதங்களிலும் சேவையாற்றி 1978 ஆம் ஆண்டு "மதுவரி சார்ஜன்ட்" என்னும் பதவியுயர்வைப் பெற்றார். இவரது சேவைக்காலத்தில், திணைக்களத்தினால் சிறந்த வேலை, நல்லொழுக்கம் ஆகியவற்றுக்காக வழங்கிக் கௌரவிக்கப்படும் 40 நல்விருதுகளைப் (Commendations) பெற்றுள்ளார். அத்தோடு திணைக்களத்தினால் அதிசிறந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் மிக அரிய விருதான மூன்று தங்கப்பட்டிகளையும், அதற்கென வழங்கப்படும் கௌரவக்கொடுப்பனவையும் பெற்றுள்ளார். இத்திணைக்களத்தில் மதுபாவனை, புகைத்தல் போன்ற தீய பழங்கங்கள் அற்று இருந்த ஒரு சில உத்தியோகத்தருள் திரு. துரைராசா அவர்களும் ஒருவர் என்று கூறின் அது மிகையில்லை.

இவரது சேவைக்காலத்தில் இவரிடம் தொழில் பயின்ற பல இளைய தலைமுறை உத்தியோகத்தர்கள், இன்னும் இவரது நற்பெயரைப் போற்றித் திறம்பட சேவையாற்றுகின்றனர். இல் வாழ்வில் 50 ஆண்டுகளைக் கடந்து, திரு. துரைராசா அவர்கள் "மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன் நன்கலம் நன் மக்கட் பேறு" என இசைந்த மனையாளுடன், பிள்ளைச் செல்வங்கள் எண்மரைப் பெற்று. எழுவர் பிற தேசங்களில் பல துறைகளில் முன்னேறி நல்வாழ்க்கை நடாத்தவும், கடைசி மகள் தன் துணைவருடன் இந்நாட்டிலேயே நீதித்துறையில் சிறந்த சேவையாற்றி நல்வாழ்க்கை நடாத்துகின்றனர்.

ஆலயத் தொண்டுகளிலும், சமூக சேவைகளிலும் தீவிர ஈடுபாடுடைய திரு. துரைராசா இளைப்பாறிய பின், மிக ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றார். இச்சீரிய வாழ்வில் 80 ஆவது அகவை எட்டும் இவ்வேளையில், அவரது தொண்டுகள் மென்மேலும் தொடர எல்லாம் வல்ல எம்பெருமான் அவருக்கு நற்சுகத்தையும், நீண்ட ஆயுளையும், வளங்களையும் வழங்க வேண்டும் என வாழ்த்தி அமைகின்றேன்.

**சி. புவேந்திரராசா**
*(உதவி மது ஆணையாளர்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவான ஆன்மீகப் பணியாற்றும்
# கலாபூஷணம் திரு. துரைராஜா அவர்களுக்கு அகவை 90....

(ஐ.தி.சம்பந்தன் - இலண்டன்)

தூய உள்ளமும், தெளிவான சிந்தனையும், புனிதமாக ஆத்மீகப் பணியாற்றிவரும் திரு. துரைராஜா அவர்கள் இவ்வாண்டு அகவை 90 ஐ எய்தியுள்ளார்.

குடும்பச் சிறப்புடனும், பிள்ளைச் செல்வத்துடனும் சிறப்பாக வாழ்ந்து வரும் திரு. துரைராசா அவர்கள் தனது அரச பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின், ஆத்மீகப் பணியில் தனது முழுநேரத்தையும் செலவு செய்து வருகிறார். சைவத்தமிழ் உலகம் போற்றக்கூடிய சாதனையாளர். ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகள் திருக்கேதீஸ்வரத்தில் 40 ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றி வந்த திருப்பணிகள் அளப்பரியன. அவரைக்குருவாக நேசித்து அவர் வழிசென்று ஆத்மீகப்பணியாற்ற சிந்தனைகொண்ட கலாபூஷணம் திரு. துரைராஜா அவர்களும், பக்தர்களும் சேர்ந்து "ஸ்ரீசபாரத்தினம் தொண்டர் சபை" யை நிறுவி அவர் பெயரால் திருக்கேதீஸ்வரத்தில் கலாச்சார நிலையத்தை அமைத்து சாதனை படைத்தவர். திரு. துரைராஜா அவர்கள். அவருக்கு "திருப்பணித்தவமணி" திரு. தியாகராசா (எஸ். டி. ஆர்) அவர்கள் துணை நிற்கிறார்.

வயது முதிர்ந்த நிலையிலும் எறும்புபோல் சுறுசுறுப்பாகச் செயற்பட்டு ரூபா ஒரு கோடி வரை செலவில் அமைக்கப்பட்ட ஸ்ரீசபாரத்தினம் கலாச்சார நிலையம் கடந்த இரு ஆண்டுகளாக திருக்கேதீஸ்வரம் செல்லும் அடியார்கள் தங்குவதற்கும், உணவு அருந்துவதற்கும் வசதியான ஒரு நிலையமாக விளங்குகிறது.

ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகளின் 23 ஆவது ஆண்டுக் குருபூசையும், திருவாசக விழாவும் 09.02.2011 இல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றபோது திரு. தியாகராசா அவர்கள் என்னையும் அழைத்திருந்தார். அவ்விழாவில் தான் திரு. துரைராசா அவர்களின் அடக்கமான, அமைதியான, ஆடம்பரமற்ற ஆத்மீகப் பணியை அறிந்துகொண்டேன். அக்கூட்டத்தில் சில வார்த்தைகள் கூறும்போது இந்தக் கலாச்சார மண்டபத்திற்கு புலம்பெயர் தமிழர்களின் ஆதரவைப் பெற்றுத் தரலாம் என்று கூறினேன். நான் இலண்டன் செல்வதற்கு முன்னதாக எனது வாக்குறுதியை நிறைவேற்றுமாறு நீண்ட கடிதம் எழுதி அந்த நிதி சேர்க்கும் பணியைத் தீவிரப்படுத்தினார். மேலும் அக்கடிதத்தில் "அடியேனுக்கு வயது 87. கைநடுக்கம் இருக்கிறது. இந்த வேலைகள் செய்வதற்கு இறைவன் ஓரளவு சுகத்துடன் வைத்திருக்கிறார்" என்பது அவர் தெய்வீக நம்பிக்கையுடன் இத்திருப்பணியை நிறைவேற்றியுள்ளார். எடுத்த கருமத்தை எவ்வாறேனும் சாதிப்பேன் என மன உறுதியுடன் செயற்பட்டு வெற்றி கண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது 88 வயதிலும் இலண்டன் வந்து, கலாசார மண்டபத்திற்கு நிதி சேகரிப்பதற்கு ஒரு இளைஞர் போல் ஓடித்திரிந்த காட்சி என் மனதை உருக்கிவிட்டது. இவர் தனது 90 ஆவது வயதை அடையுமுன் திருக்கேதீஸ்வரத்தில் "கலாச்சார மண்டபத்தை" அமைத்து 27.01.2013 இல் கோலாகலமாகத் திறப்புவிழா நடத்தி வெற்றி கண்டவர். மண்டபத்தை அமைத்துவிட்டால் மட்டும் போதாது, அதன் நிருவாகத்தையும் திறம்பட நடத்துவதில் ஒரு செயல்வீரனாக விளங்குகிறார். 2014 இல் திருக்கேதீஸ்வரத்தில் நடைபெற்ற மகாசிவராத்திரி விழாவிற்கு இலண்டனிலிருந்து சென்றிருந்தேன்.

மக்கள் கூட்டம் சமுத்திரம் போல் திரண்டிருந்தது. எப்படி இங்கு தங்கி விழாவைக் கண்டு கழிக்கப்போகிறேன் என்று சிந்தித்துக் கொண்டு, கலாச்சார மண்டபத்தை நாடிச் சென்றேன். என்னைக் கண்டதும் அவரும், மனைவியாரும் அன்போடு அழைத்து ஒரு தனியறையைத் தந்து என்னைத் தங்கவைத்ததோடு, எல்லா உதவிகளையும் செய்தார்கள்.

அங்கு இருவரும் தொண்டர்களாக இருந்து ஆற்றிய பணிகளை நேரில் பார்த்தேன். அடியார்களை அன்பாக அழைத்து உணவு, தேனீர் பானம் வழங்கி உபசரிப்பதைப் பார்த்தேன். மனிதருக்கு மட்டுமின்றி அங்கு நடமாடும் மிருகங்கள் நீர் அருந்துவதற்கு கலாசார மண்டபத்திற்கு முன்னால் ஒரு நீர்த்தடாகத்தை அமைத்து வைத்துள்ள ஒரு காருண்யம் மிக்கவர்.

மற்றுமொரு நற்பணியாற்றியுள்ளார். சைவத்தமிழ்ப் பக்தனான திரு. தம்பு துரைராசா அவர்களின் பெரும் முயற்சியினால், பதிப்பாசிரியராக "ஈழத்துச் சிவாலயங்கள்" என்னும் நூல் 2006 இல் வெளியிடப்பட்டது. இந்நூல் அவரது குருவாக நேசித்து தொண்டாற்றி, வந்த ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபையினால் வெளியிடப்பட்டது. இதுவும் இவரது மற்றுமொரு சாதனையாகும்.

வயது முதிர்ந்த நிலையிலும் இவ்வாறான தெய்வீகப் பணிகளைச் செய்வதற்கு சக்தியாகவும், துணையாகவும் இருப்பவர், இவரது அருமை மனைவி திருமதி இரத்தினேஸ்வரி அவர்கள் அவருக்கு பலமாக விளங்குபவர்.

இவர்கள் பெற்றெடுத்த பிள்ளைகளும் அவரது திருப்பணிக்கு முழு ஆதரவாகவிருப்பதும் திரு. துரைராசாவின் சாதனைக்குக் காரணம். இலண்டனில் வாழும் அவரது மகன் விஜே என்பவர் ஈழத்தில் அல்லல்படும் சிறுவர்களின் நல்வாழ்வுக்காக அறக்கட்டளை ஒன்றை நடத்தி பணியாற்றி வருகின்றார்.

குடும்பச் செழிப்பும் இவரது தெய்வீகப் பணிகளுக்கும், சாதனைகளுக்கும் உறுதுணையாகும்.

தனது வாழ்நாளில் ஒரு இலட்சியத்தை நிறைவேற்றிய பெருமகனாரின் 90 ஆவது பிறந்த நாளுக்கு சைவப் பெருமக்கள் வாழ்த்துக்களைச் சொரியட்டும். அவரது பிறந்த நாள் விழா செப்ரெம்பர் 16 ஆம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. மேலும் நூற்றாண்டு காண திரு. துரைராசா அவர்களுக்கு திருக்கேதீச்சரத்தான் திருவருள்பாலிப்பாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

கலாபூஷணம் துரைராசா அவர்களின் "வாழ்வின் நினைவுகள்" நூலுக்கு இந்த வாழ்த்துரையை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"வாழ்வது ஒருமுறை வாழ்த்தவேணும் தலைமுறை"

திருவாளர் கலாபூஷணம் தம்பு துரைராசா அவர்கள், நல்லை ஆதீன முன்றலில் நல்லைக்கந்தன் ஆலயத் திருவிழாவின்போது, ஒரு கடை வைத்திருந்தார். அதில் இடியப்ப உரல், மரத்தில் செய்த யானைக்குட்டிகள் இன்னும் பல பொருட்களுடன் நல்லெண்ணெயும் வைத்திருந்தார். அவரிடம் ஒரு போத்தல் நல்லெண்ணெய் வாங்கினோம். கலாபூஷணம் தம்பு துரைராசா அவர்கள் பல ஆன்மீகத் தொண்டுகள் புரிந்து, பல ஆன்மீக நூல்களையும் வெளியிட்டுத் திருக்கேதீஸ்வரத்தில், சபாரத்தின சுவாமிகள் இந்து கலை, கலாச்சார மண்டபத்தையும் நிறுவிப்பெருமைமிகு ஆன்மீகத் தொண்டராக விளங்குவார் என, அன்று நாம் கற்பனை பண்ணி இருக்க முடியாது.

ஆனால் எனது பணியானது திருவாசகம் திரு. சபாரத்தினம் சுவாமிகள் தொடர்பு, பின்னர் இணைந்தும் தனியாயும் பல தொண்டுகளைச் செய்ய இறைவன் திருவருள் கைகூடிற்று.

நான் நல்லூர்க் கோவிலுக்குப் போகும் போதெல்லாம் ஆதீனத்திற்கும் போவது வழக்கம். ஒரு நாள் சபாரத்தினம் சுவாமி, மில்க்வைற் திரு. கனகராசாவுக்குச் சோறு குழைத்துக் கொடுத்ததைக் கண்டேன். போகும்போதெல்லாம் சுவாமிகளை வணங்குவது வழக்கம். ஒரு நாள் திவ்விய ஜீவன சங்கத்தில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடன் நிற்பதைக் கண்டு, நானும் சேர்ந்து ஒரு போட்டோ எடுத்துக் கொண்டோம்.

1976 ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வர ஆலயக் கும்பாபிஷேகத்தின்போது நண்பர் ஒருவருடன் சென்று, ஒரு கொட்டிலில் படுத்திருந்த சுவாமிகளைக் கண்டு தரிசித்தோம். 83 ஆம் ஆண்டுக் கலவரத்தின் பின், கொழும்பிலிருந்து திருக்கேதீஸ்வரத்துக்கு யாரும் வரமுடியாத சூழ்நிலை. யாழ்ப்பாணத்திலிருந்து தலைவர் ஞானப்பிரகாசம் (கல்லூரி அதிபர்) ஏழாலைக் கந்தசாமி (உதவி அரசாங்க அதிபர்) ஆறுமுகமும் இன்னும் சிலரும் பூநகரி ஊடாகக் கோவிலுக்கும் வருவோம். மூன்று, நான்கு நாட்கள் அங்கு தங்கியிருந்து சில வேலைகளைக் கவனிப்போம். ஒரு நாள் காலை சுவாமியின் கொட்டில் பக்கம் போனேன். சுவாமி கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்தார். நான் சுவாமி என்று கூப்பிட்டேன். யாரடா பொடி என்றார். நான் நிற்காமலேயே வந்து தலைவர், ஏனையோர்களுடன் கதைத்து விட்டுக் கதிர்காம மடத்தில் படுத்துவிட்டேன். சுவாமி என்னைத் தேடிக்கொண்டு வந்து யாரடா பொடி, அவன் பின்னால் ஓடச் சொல்லுது என்று விசாரித்தபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. T. R. ஆகத்தான் இருக்கவேண்டுமென்று, தம்பி நீ என்னைக் கூப்பிட்டாய், உனக்குப் பின்னாலே என்னை ஓடச் சொல்லுது, என்னையும் என் மடத்தையும் பாரமெடு என்றார். ஆம், பார்ப்போம் என்று சமாளித்து விட்டேன்.

இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டு இருந்தபோது, ஒரு தமிழ்ப்பத்திரிகை வெளிவர வேண்டும் என்று கேட்டதன் பேரில், ஈழநாடு பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. ஒரு தைப்பொங்கல் தினத்தன்று பத்திரிகையில் சபாரத்தினம் சுவாமிகள் கொழும்புத்துறையில் திரு. தம்பு துரைராசா வீட்டில் கடுமையான சுகவீனம் உற்று இருக்கிறார் என்பதை அறிந்து கொண்டேன். நானும் எனது மனைவியும் அங்கு சென்று சுவாமியைப் பார்த்தோம். என்னைக்கண்டதும் தம்பி வந்து விட்டாயா? என்று கூறி, விபூதி தந்து எம்மை ஆசீர்வதித்தார்.

அன்றுதான் திரு. தம்பு துரைராசா குடும்பத்தினருடன் எமது குடும்பத்தொடர்பு ஆரம்பித்தது. இரண்டு நாட்களின் பின்பு போய் பார்த்தோம். அவர் படுக்கையாகவே இருந்தார். தியாகராசா வந்து விட்டாயா? எனது கையைப்பிடி, கையைப்பிடி என்று எனது கைகளை இறுக்கிப்பிடித்து, நீதான் எனக்குக்கடைசியாகக் கிடைத்த அன்பன். உன்னோடுதான் இருப்பேன், உனது குலத்தில்தான் பிறப்பேன். ஆன்மீகப்பணி செய். எனக்குச் சமாதி வைக்காதே என்று கூறி வீபூதியும் தந்தார். மறுநாள் சுவாமி சமாதி அடைந்தார் என்ற செய்தி அறிந்து, கொழும்புத்துறைக்குப் போய் எல்லோரும் சேர்ந்து தேவார, திருவாசக பாராயணத்துடன் துண்டி மயானத்தில் சந்தனக்கட்டைகளை அடுக்கித் தகனம் செய்தோம்.

மூன்று நாட்களின் பின், திரு. தம்பு துரைராசா வீட்டில் சுவாமியின் அன்பர்கள், வவுனியா அரசாங்க அதிபர் திரு. சிவஞானம் எல்லோரும் சேர்ந்து திரு. தம்பு துரைராசா அவர்களின் வேண்டுதலுக்கமைய சுவாமிகளின் பெயரால் திருவாசகத் தொண்டு செய்யவேண்டும் என்ற அவரின் கருத்துக்கு அமைய, ஒரு சபையை அமைத்துக் கொண்டோம். ஏகமனதாக என்னைத் தலைவராகத் தெரிவு செய்தார்கள். அன்று முதல் இன்று வரை தம்பு துரைராசா குடும்பத்துடன் இணைந்து சுவாமிகளின் பெயரால் திருவாசக விழா நடத்துவதும், குருபூசைகளை நடத்துவதும் இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. தம்பு துரைராசா பல சொற்பொழிவாளர்களைக் கொண்டு வருடந்தோறும் பல சொற்பொழிவுகளை ஆற்றுவித்தும், மகேசுர பூசைகளை நடத்தியும் பலரையும் அரவணைத்துச் சிறப்பாக நடாத்தி வருகிறார். நாங்கள் திருக்கேதீஸ்வரத்தில் சுவாமி பெயரில் ஒரு மடம் கட்ட வேண்டும் என்று விரும்பினால் விடா முயற்சி எடுத்தோம். தம்பு துரைராசா அவர்கள் அதிதீவிர குருபக்தியும், ஆன்மீக எழுச்சியும், விடாமுயற்சியும், செயல்திறனும், கொண்டு அழகான ஒரு மண்டபத்தைக் கட்டிமுடித்துள்ளார். அதற்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கும் அவரின் குடும்பத்தினரின் பாங்கும், சிறப்பாக, அவரின் துணைவியாரின் உதவியும், ஒத்தாசையும் அவருக்கு வலக்கைபோல் நின்று உதவின.

மக்களின் நலன்கருதி சிறப்பாக வருடாவருடம் பல தொகுப்பு நூல்களை வெளியிட்டுள்ளார். இவற்றுள் "ஈழத்துச் சிவாலயங்கள்" என்ற பெருநூல் சிகரமாய் அமைகிறது. இவரது ஆன்மீகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டினைப் பாராட்டி, இந்து கலாசாரத் திணைக்களம் "கலாபூஷணம்" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளது. சிறந்த நேர்மையும், மன உறுதியும், அன்பாகப் பழகும் தன்மையும் உடையவர். ஆதலால் பலராலும் இவர் பெரிதும் விரும்பப்படுகிறார். தொண்ணூற்று இரண்டு அகவையை அடைந்தபோதும் தனது யோகப்பயிற்சியினால், இளைஞரைப் போன்று கடமைகளைப் பூரிப்புடன் செவ்வனே ஆற்றி வருகின்றார். மாதந்தோறும் தனிமையாகவும், துணைவியாருடனும் திருக்கேதீஸ்வரம் சென்று, திருக்கேதீஸ்வரப் பெருமானையும் தரிசிப்பதுடன், திருவாசக சபாரத்தின சுவாமிகள் கலாச்சார மண்டபத்தையும் நிர்வாகித்து வருகின்றார்.

இவருடைய துணைவியார், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என்றும் சீரும் சிறப்புமாக வாழ திருக்கேதீஸ்வரப்பெருமானையும், கௌரி அம்பாளையும், பாதாரவிந்தங்களைத் தொழுது வணங்குகின்றேன். அவரின் தொண்டுகள் மேலும் சிறக்க இறைவன் அருள் பாலிப்பாராக.

அன்புடன்,

'திருப்பணித்தவமணி'

**எஸ். தியாகராஜா (S.T.R)**

*சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபைத்தலைவர்*

*ஈழத்திருநெறித் தமிழ் மன்றத்தலைவர்,*

*திருக்கேதீஸ்வர அறங்காவலர் சபை உறுப்பினர்.*

*உறுப்பினர், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை*

## சிந்தனைக்கு...

*அருள் என்னும் வடிவம் உள்ள ஆண்டவனை அன்பாகவே காணலாம்.*

*இல்லறத்தில் இருந்து இதயம் அடக்கிய வல்லவன்தான் மகாயோகியாவான்.*

*ஆசைகளை விடாமல் எவனொருவன் பற்றுகிறானோ அவனை விட்டுத் துன்பங்கள் நீங்க மறுக்கின்றன.*

*மறையாத ஆறுதல் அளிக்கக்கூடியது ஒவ்வொருவர் மனத்துக்குள்ளேயும் ஒளிந்திருக்கும் உள்ளொளியே.*

*பிறருக்காக வாழும்போதுதான் நாம் வாழ்க்கையின் நிறைவை நுகர்கிறோம்: நம் உயர்வை உணர்கிறோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒழுங்கான வாழ்வியலுக்கு ஒரு வரைவிலக்கணம்"

# அன்பின் அப்பா, அம்மா!

# அன்பின் மாமா, மாமி!

இப்பூவுலகில் முற்றும் துறந்தவனை மட்டும்தான் மகாமேதையாகவும், மகானாகவும் மதிக்கின்றனர். ஆனால் துறவும் அறம் தான், இல்வாழ்வும் அறம் தான். துறவறத்தைத் தேர்ந்தெடுப்பது சிலர் மட்டும் என்பதால் விரைவில் அவர்கள் பிரபலங்களாகி விடுகின்றனர். ஆனால் இல்லறத்தில் நல்லறம் செய்யும் பலர் அடையாளமின்றியே வாழ்ந்து சென்று விடுகின்றனர். நீங்களும் அவ்வரிசையில் வெற்றி பெற்றவர்கள்தான்.

**ஒரு குடும்பம் வெற்றியடைவதென்பது கணவன் மனைவியின் விட்டுக் கொடுப்பின் அளவில்தான் இருக்கிறது. நீங்கள் 60 ஆண்டுக்காலத் திருமண வாழ்வின் வெற்றியெய்திய இரகசியமும் அதுதான். கறையற்ற உங்கள் காதலின் வலிமை தான் காலத்தை வென்றதன் சூட்சுமம்.**

பலர் தம் முதுமையைத் தாமே வரைந்து கொள்கின்றனர். திருமணம் ஆனவுடன். பிள்ளைகள் பெற்றவுடன் பேரப்பிள்ளைகள் கண்டவுடனென்று ஒவ்வொரு கட்டத்துடன் தாம் வயதாகி விட்டதாகவும், இனி வாழ்க்கை முடிந்து விட்டதாகவும் எண்ணுகின்றனர். வியாதியில் வாடும் பெரும்பாலானோர் இவ்வாறு தம்மைத் தாழ்த்திக் கொண்டவர்கள் தான். நீங்கள் இவைகளைத் தாண்டி இளமையை இன்றும் அனுபவித்துக் கொண்டு இருக்கிறீர்கள்.

ஒரு சுயநலவாதியாலேதான் சாதனைகள் செய்ய முடியுமென்றும் ஒரு கருத்துண்டு. முதலில் அவன் நான் என்பான். என் குடும்பம், என் ஊர், என் நாடு, என் உலகம் என்று அவனின் சுயநலம் பரந்து விரியும் போது பலன் பெறுபவர் வட்டமும் கூடிக் கொண்டே செல்கிறது. இப்படி **இன்று உங்களின் வட்டமும் பெருகிப் பலன் வியாபித்துக் கொண்டே இருக்கின்றது.**

நிச்சயமில்லா வாழ்வில் கூட நாம் எத்தனை விடயங்களை நாளைக்காய் ஒதுக்குகிறோம். **நிஜமான நிகழ்காலத்தின் பலனைப் பயன்படுத்திக் கொள்வதிலும் நீங்கள் ஒரு நல்ல உதாரணம் என்பதுடன் நேர்த்தியான, நேரப்படியான, ஒழுங்கான ஓர் வாழ்வியலிற்கும் நீங்கள் ஒரு வரைவிலக்கணம்.**

எமது பிள்ளைகளுக்காய் வெறும் தாத்தா, பாட்டியாக மட்டும் அடையாளமிடாமல், உங்களின் வாழ்க்கை என்ற பெரிய சாதனையையும், மேலும் பல சம்பவங்களையும் நிச்சயம் நீங்கள் உருவாக்கியுள்ளீர்கள் என்பதுடன், சீரிய வாழ்வைப் புத்தகங்களிலும், புராணங்களிலும் மட்டும் காட்டாமல் விரல் சூட்டிக்காட்ட எமக்கு உங்களையும் தந்துள்ளீர்கள்.

இன்றெல்லாம் அறுபது வயது தாண்டி, ஆரோக்கியமாய் வாழ்வதே அருமை. அறுபது வருடம் திருமண வாழ்வென்பது ஒரு சாதனை. எமக்காகவும், எம் பிள்ளைகளுக்காகவும் **இன்னும் நீங்கள் பல வருடம் வாழ்ந்து களிக்கவும் இன்று போலென்றும் இளமையாயிருக்கவும் இறைவன் அருள் செய்யட்டும்.**

**பிள்ளைகள், மருமக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீசபாரத்தின சுவாமிகளும், திருவாசக மடமும் :

திருக்கேதீஸ்வரம் திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் 1940 வரையில் திருக்கேதீஸ்வரத்தில் தங்கினார். சன நடமாட்டம் இல்லாத காலம். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொன் விழா சிறப்பு மலரிலே (2005 பாகம் II) இந்து ஒளி எனும் வெளியீட்டில், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் மரபுவழி அறங்காவலரும், முன்னாள் தலைவருமான "திருமுருகாமணி" ஆறுமுகம் தியாகராசா அவர்கள், திருவாசகம் சி. சபாரத்தின சுவாமிகள் (1904 – 1988) எனும் தலைப்பில் எழுதிய சில கருத்துக்கள் திருக்கேதீச்சரம் என்றால், அடியார் மனதில் அடுத்துத் தோன்றுவது திருவாசக மடம். திருவாசகம் என்றால் மனதில் தோன்றும் உருவம், சபாரத்தின சுவாமிகள். யாழ்ப்பாணம் அல்வாய் சின்னத்தம்பி என்பவருக்கும், யாழ் பாண்டியன் தாழ்வு சின்னத்தங்கத்திற்கும் 28.03.1904 இல் சற்புத்திரனாகப் பிறந்தார். இளம் வயதில் இருந்தே யோகர் சுவாமிகளின் அருட்பார்வைக்கு ஆளாகிய சுவாமிகள் பக்குவப்பட்டதோர் பண்புள்ள ஆசிரியராகப் பணிபுரிந்தார். யோகர் சுவாமிகளைப்போலவே செய்த தொழிலைக் கைவிட்டுவிட்டு, திருத்தல யாத்திரையைக் கைக்கொண்டார். சிதம்பரம் முதலான பல பதிகளைத் தரிசனம் செய்த பின்னர் திருக்கேதீச்சரத்தில் நிரந்தரமாக நிலைகொண்டார். திருவாசக மடம் ஒன்றை அமைத்து, அடியார்க்கு பசிப்பிணி தீர்த்து, பக்குவமான உபதேசங்களைச் செய்து, பல அடியார்களைப் பக்குவப்படுத்தித் தொண்டு நெறியில் வழிப்படுத்தினார்.

திருக்கேதீஸ்வரத்தில் உள்ள மடங்கள் எல்லாம், திரு நிறை அருள்மடங்களாக மாறிச் சேவை செய்வதற்கு ஒரு தூண்டாமணி விளக்காய்த் திகழ்ந்தவர் இவரென்பதில் ஐயமில்லை, சேர். கந்தையா வைத்தியநாதன் ஐயாவுக்குத் திருப்பணிக்கு உதவியவர் சுவாமிகள் என்று, அவர்தம் அடித்தொண்டனாகிய சி. சரவணமுத்து சுவாமிகள் கூறியுள்ளார். 20 நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் செயற்கரிய பல செய்து இறையடி சேர்ந்தார். சுவாமிகள் பற்றி பலர் எழுதியும், சொற்பொழிவாற்றியும் உள்ளனர்.

சுன்னாகம் சிவ சண்முகவடிவேல், முன்னாள் அரச அதிபர் செ. சிவஞானம், பெரும்புலவர் சதாசிவம்பிள்ளை, கவி. வித்துவான் ஆறுமுகம் பன்மொழிப்புலவர் க. சி. குலரத்தினம் கவிஞர் கரவைக்கிழார். திருப்பணித்தவமணி எஸ். தியாகராசா (S.T.R சபைத்தலைவர்), முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர், இன்னாள் வட மாகாணசபை முதலமைச்சர் மாண்புமிகு சி. வி. விக்னேஸ்வரன், கலாநிதி. கனகசபாபதி நாகேஸ்வரன், கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் முன்னாள் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தஜி, இந்துசமய விவகார அமைச்சின் உதவிச் செயலாளர் ப. க. பரமலிங்கம், ஆயர்பாடி இராமகிருஷ்ணன் (சோதிட ஆய்வாளர்), அருள்மொழி அரசி வித்துவான் வசந்தா வைத்தியநாதன், திரு. செ. ஞானசேகரம், பேராசிரியர் கலாநிதி வ. மகேஸ்வரன், ஆழ்கடலான் முருக வே. பரமநாதன், கலாநிதி அருட்கவி. சீ. விநாசித்தம்பி, வயலின் வே. சிவஞானம் (இசைக்கச்சேரி), புலவர் சிவானந்தன், திரு. க. சிவராமலிங்கம், தமிழருவி த. சிவகுமாரன், கம்பவாரிதி இ. ஜெயராஜ், முன்னாள் இந்து கலாசார திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன், பவானி முகுந்தன் ஆகியோர், 2013ல் இருபத்தைந்தாவது (கால்நூற்றாண்டு கால) குரு பூஜையும், திருவாசக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவும், கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் **S. T. R.** அவர்களின் தலைமையில் நடைபெற்ற போது சொற்பொழிவாற்றியோர்களாவர்.

சிறப்பு நிகழ்ச்சியாக இசையரங்கு (பாட்டு) கலாவித்தகர் திருமதி அமுதா இரகுநாதன், வயலின் இசை ஞானசாகரம் சுப்பிரமணியக் குருக்களின் இசைக் கச்சேரியும் இடம் பெற்றது. இதன்போது, தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆச்சிரமத்தின் தலைவர் மோகனதாஸ் சுவாமிகளுக்கு "அமுதவாரி" என்ற பட்டம், சுவாமி தத்திரதேவா அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வுகள் இனிதே நடைபெறக் காரணகர்த்தாவாக இருந்து செயற்பட்டவர் சபைச் செயலாளர், கலாபூஷணம் தம்பு துரைராசா அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

2013 இல் திருக்கேதீச்சரத்தில், திருக்கேதீஸ்வரம், திருவாசகம் சபாரத்தினம் இந்து கலாசார மண்டபத்தை 74 இலட்சம் ரூபாய் சேர்ந்து கட்டி முடித்துள்ளார். கலாபூஷணம் துரைராசா. இங்கே திருவாசக சுவாமிகள் குருபூஜை, திருவடி அபிஷேகம் திருவாசக விழா, சமய சொற்பொழிவுகள், அன்னதானம், தங்குமிட வசதி, யாவும் இதில் நடைபெற்று வருகின்றன. இதனை S. T. R. தியாகராஜா நாடா வெட்டி திறந்து வைத்தார். மண்டபம் ஏழு அறைகளைக் கொண்டது. இணைந்த குளியலறைகள் உள்ளன. பின்னால் 3 மலசலக்கூடம் உள்ளது. ஒரு தனிக்குளியலறை, ஒரு பொதிகள் அறை 20 x 57 விசாலமான மண்டபம் விழாக்கள் நடாத்தவென மேடையும் அமைக்கப்பட்டுள்ளது. பாதுகாவலருக்கு தனி அறை. சாமி அறையும் தனியாகவுள்ளது. வெளிவாசலில் (Gate க்குப் பக்கத்தில்) கால்நடைகள் (பசுக்கள்) தாகம் தீர்ப்பதற்காக நீர்த்தொட்டி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. வாசலில் இரு நந்திச் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

மண்டபத்திற்குள் நால்வர்; இராமகிருஷ்ணர், சாரதாதேவி, விவேகானந்தர், தெய்வப்புலவர் திருவள்ளுவர், கம்பன். பாரதியார், ஆறுமுக நாவலர், சீரடிசாயி, ரமணமகரிஷி, புத்தபகவான், ஸ்ரீ முருகேசு சுவாமிகள், சிவயோக சுவாமிகள், திருவாசகம் சபாரத்தின சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், கடையிற் சுவாமிகள், சுவாமி விபுலானந்தர். சுவாமி கெங்காதாரனந்தர், மயில்வாகன் சுவாமி, சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இன்னும் பல அருளாளர்களின் முப்பத்தாறு படங்கள் மண்டபத்தில் கட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மண்டபத்தின் முக்கிய வேண்டுகோள் மாமிச உணவுகள், மதுபானம், புகைத்தல் இடம்பெறக்கூடாது என்பதாகும். பல பிரமுகர்களும், விருந்தினர்களும் எமது கலாசார மண்டபத்திற்கு வந்து சென்றனர். சிவகுமார் நமசிவாயம், திருமதி அபிராமி கைலாயபிள்ளை, அகில இலங்கை இந்துமாமன்ற கௌரவ தலைவர் சட்டத்தரணி கந்தையா நீலகண்டன், உபதலைவர் சி. தனபாலா, துணைப்பொருளாளர் வே. கந்தசாமி, பொதுச்செயலாளர் கதிர்காமநாதன் யாவரும் வந்து சென்றனர்.

தற்போதைய ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபையின் தலைவர். திருப்பணித் தவமணி எஸ். தியாகராசா (S.T.R) அவர்களும், செயலாளர் கலாபூஷணம் தம்பு துரைராசா அவர்களும், இக்கலாசார மண்டபத்தில் உரித்தாளர்களாக ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தற்போதைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரித்தாளர் திரு. சி. தியாகராஜா (S.T.R) அவர்களின் மனைவியும், இலங்கையில் வதியும், பிள்ளைகள், மருமக்கள் ஆகியோர் இக்கலாசார மண்டபத்தின் வழிவழி வம்சாவழியினர் உரித்தாளர்களாக இருப்பர். அதே போன்று தற்போதைய செயலாளர் கலாபூஷணம் த. துரைராசா அவர்களின் மனைவியும் , அவர்களின் இலங்கையில் வதியும் பிள்ளைகள், மருமக்கள் வழிவழி வம்சாவழியினர் உரித்தாளர்களாக இருப்பர். இதன் பிரகாரம் திருக்கேதீச்சரம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் கலாசார மண்டபம் பரிபாலனம் செய்யப்படும்.

2004 இல் திருக்கேதீச்சரம், திருவாசகம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபை செயலாளர் திரு. தம்பு துரைராசா அவர்களின் எண்பதாவது அகவை குறித்த ஜனனவிழா மலருக்குப் பலர் அருளாசிச் செய்தி, வாழ்த்துச் செய்தி ஆசியுரை, வாழ்த்துப்பா பல கிடைத்தன. தொண்டுசீர் பரவுவார் நீடுழி வாழ்க. எண்பது வயது இளைஞர், ஆன்மீகச் செல்வர் பண்பு நிறை பணியாளர் என வாழ்த்தியிருந்தனர்.

வெளியீடு:<br>திருவாசகம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள்<br>நூற்றாண்டு விழா சபை,<br>மலர் ஆசிரியர் – வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் M. A.<br>முதுநிலை விரிவுரையாளர்,<br>சப்ரகமுவ பல்கலைக்கழகம்.<br>28.03. 2004

# பொன் மொழிகள்

- நாம் செல்லும் மார்க்கம் நல்லதாக இருந்தால், நம்முடைய இலக்கும் தானாகவே நல்லதாகிவிடும்.
- கல்வியில் சிறந்தவன் என்று பெயர் வாங்குவதை விட, ஒழுக்கத்தில் என்ற பெயர் வாங்கவேண்டும்.
- உயர்ந்த எண்ணங்களை உடையோர், ஒரு நாளும் தனித்தவராகார்.
- மனிதனுடைய முழுத்திறமைகளின் வெளிப்பாடே உண்மையான கல்வி ஆகும்.
- வெற்றி என்பது இலட்சியத்தின் பாதையை படிப்படியாக தெரிந்து கொள்வதாகும்.
- பிறர் தவறு கண்டு தன் தவறை திருத்திக்கொள்பவன் அறிவாளி.
- செயலில் கெட்டவனை விட, மனதில் கெட்டவனே மிகவும் கெட்டவன்.
- அஹிம்சை மனித குலத்துக்கு கிடைத்த மாபெரும் சக்தி.
- சிக்கல் எது என்று சிந்தித்தாலே பாதி சிக்கல் தீரும்.
- நம்பிக்கையுடையவன் எதையும் எளிதில் முடிக்கக்கூடியவன்.
- மன்னிக்கும் குணம், ஆற்றல் வாய்ந்தவருக்கான ஓர் அடையாளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சரம் - திருவாசகம் மடம்

- பேராசிரியர் வி. சிவசாமி -

கோவிலருகிலே வெவ்வேறு திசைகளிலே பல மடங்கள் – திருஞானசம்பந்தர் மடம், சுந்தரர் மடம், நாட்டுக்கோட்டை நகரத்தார் மடம், அம்மா மடம், பசு மடம், திருவாசக மடம், கௌரீசர் மடம், நாவலர் பெருமான் மடம் முதலியன நிறுவப்பட்டுள்ளன. இவற்றுள் திருவாசக மடத்தினை திருக்கேதீச்சரம், திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் 1952 இலே நிறுவிப் பல ஆண்டுகளாக அதனை நன்கு நடத்தி வந்தார். திருவாசகத்திலே மிக்க ஈடுபாடுள்ளவராக அதனை முதன்மைப்படுத்திச் சொல்லிலும், செயலிலும் திருவாசக நெறியினை வாழ்ந்து காட்டியதோடு, அதனை மற்றவர்களுக்கும் எடுத்துக்கூறிப் பலரைத் திருவாசகத்திலீடுபடச் செய்தவர். குறிப்பாக, மார்கழி மாதத்திலே, திருவெம்பாவைக் காலத்திலே, திருவாசக விழாவை ஏற்படுத்தி வந்தார். சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் செய்து வந்த திருப்பணிகளுக்கு மிகவும் உதவி செய்தார். அவர்களின் ஏற்பாட்டில் கௌரீசர் பாடசாலையும் நெசவுசாலையையும் கட்டி முடித்தார். திருக்கேதீச்சரம் வரும் அடியார்களுக்கு, அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். தாம் அங்கு, ஒரு குடிசையிலே வாழ்ந்து கொண்டு, பல சேவைகள் செய்து வந்தார். அவருக்குப்பின் சி. சரவணமுத்து சுவாமிகள் திருவாசக மடத்தைத் தொடர்ந்து கவனித்து வந்தார். சபாரத்தினம் சுவாமிகள் இறைவன் திருவடி சேர்ந்த பின், அவரின் இலட்சியங்களை முன்னெடுப்பதற்காக அவரின் பெயரில் உருவாக்கப்பட்ட தொண்டர் சபை குறிப்பிடற்பாலது. திரு. எஸ். தியாகராஜா (எஸ். ரி. ஆர்) தலைவராகவும், திரு. த. துரைராசா செயலாளராகவும் இச்சபையிலே பணிபுரிந்து வருகின்றனர்.

*நன்றி: ஈழத்துச்சிவாலயங்கள்*


"கலாபூஷணம்" தம்பு துரைராசா

செயலாளர். ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபை - 2009

ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் இந்து கலாசார மண்டபம்

யாத்திரிகர் தங்க குளியலறையுடன் சேர்ந்த அறைகளும், மங்கள நிகழ்வுகள் நடாத்த உகந்த மண்டபமும் அமைந்துள்ளது.

கௌரி அம்மன் வீதி,
திருக்கேதீஸ்வரம்,
மன்னார்.
தொலைபேசி: 0237900002

த. துரைராஜா,
இல.31A, ஜானகி லேன்,
கொழும்பு – 04.
தொலைபேசி: 0114852232




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினையாப்பிரகாரமாக திருமதி சிவநாதனிடமிருந்து கிடைத்த அன்பளிப்பு ரூபா 5 இலட்சம்

ஒருமுறை கட்டடப்பொருத்துனர், மேசன், கூலிகளுக்கு சம்பளம் கொடுக்கப் பணம் இல்லை. உடன் பணம் தேவை என தொலைபேசியில் சொன்னார். இறைவனை வேண்டிக்கொண்டு, முன் 5 இலட்ச ரூபா தந்து உதவிய, போட்டோ சாயி உரிமையாளர் திரு. சபேசன் அவர்களிடம் போய் உதவும்படி கேட்டேன். அவர் சகோதரி திருமதி சிவநாதன் உடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விபரம் சொன்னார். அவ என்னை கூட்டி வரும்படி சொன்னா. என்னை மோ சைக்கிளில் ஏற்றிக்கொண்டு அவவிடம் ஒப்படைத்தார். முதல் மாடியில் இருக்கச் சொல்லி மடத்தைப்பற்றி பல கேள்விகளையும் கேட்டுக்கொண்டு, தானும் தருவதாகச் சொல்லி எனது போன் இலக்கத்தைக் கேட்டுக் குறித்துக் கொண்டார். எப்ப தருவார். எவ்வளவு தருவார் என எனக்குச் சொல்லவில்லை. தானும் பணம் தருவதாகச் சொன்னதால் தர சில நாட்களோ, மாதமோ செல்லக்கூடும் என மனதில் நினைத்துக் கொண்டு திருக்கேதீஸ்வரம் கட்டடப்பொருத்தினருக்கு எப்படி பணம் அனுப்புவது என இறைவனை வேண்டிக் கொண்டிருந்தேன். அடுத்தநாள் எங்கள் சபை வங்கிக்கணக்கில், ரூபா 5 இலட்சம் போடப்பட்டுள்ளதென திருமதி சிவநாதன் போனில் சொன்னா. பெருமகிழ்ச்சியடைந்து வங்கியில் பணம் பெற்று கட்டடப்பொருத்தினருக்கு தேவையான பணத்தை அவர் வங்கிக்கணக்கில் வைப்பிலிட்டு விட்டேன்.

ஸ்ரீ இரஞ்சன் (இலண்டன்) இடமிருந்து அன்பளிப்பு ரூபா 1,50,000. ஸ்ரீ ரஞ்சன் (இலண்டன்) 2014 இல் திருக்கேதீச்சரம் மண்டபத்தில் சில நாட்கள் குடும்பத்துடன் தங்கினார். அவர் சபாரத்தின சுவாமி பற்றி முன்பே அறிந்திருந்தவர் அவரிடம் மண்டபத்தின் உள்பக்க மேல் சீற் போடவேண்டுமென சொன்னேன். போய் அனுப்புவதாகச் சொல்லி, ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா அனுப்பி சீற் போடப்பட்டது.

74 இலட்ச ரூபாச் செலவில் திருக்கேதீஸ்வரம் இந்து கலாசார மண்டபம் திருவாசகம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் பெயரில் கட்டப்பட்டுள்ளது.

எப்படிப் பணம் கிடைத்தது? பணம் கிடைக்காவிட்டால் இடையில் கட்டடவேலையை நிற்பாட்டி விடுவீர்களோ என சிலர் முன்பே கேட்டிருந்தனர்.

பதிலாக குறிப்பிடுகின்றேன்.

| | |
|---|---|
| எங்கள் சபையில் வங்கிக்கணக்கில் இருந்து வட்டியுடன் | |
| 9 இலட்சம் கிடைத்தது | 900,000.00 |
| 5 பேர் 5 இலட்சம் படி | 2500,000.00 |
| இந்து திணைக்களம் | 500,000.00 |
| தலைவர் சி. தியாகராசா S. T. R. (மேல்சீற், முன் மதில்) செலவாக | 500,000.00 |
| | 4,400,000.00 |
| மிகுதியை மன்னார் பிரதேச சபை, இலண்டன், கனடா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, இலங்கை அன்பர்களிடமும் எங்கள் குடும்பத்தினரும் உதவினார்கள் | 3,000,000.00 |
| | 7,400,000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கு விபரம் திருக்கேதீஸ்வர தரிசனம் நூலில் இடம்பெற்றுள்ளது. பணம் கிடைக்காவிட்டால், என்ன செய்வீர்கள்? பதிலாக சபையின் தலைவர் "திருப்பணித்தலைவர் சி. தியாகராசா. S. T. R. மடம் கட்டி முடிப்பார்" என அவரைக் கேட்காமலே நம்பிக்கையில் சொல்லிவிட்டேன். பணம் கிடைத்துக்கொண்டிருந்தால் அவரிடம் பணம் ஒருநாளாவது கேட்கவில்லை. ஆனாலும் S.T.R. ஐயா "நான் என்ன செய்யவேணும்" என்று கேட்டுக் கொள்வார். கட்டட வேலையைத் தொடர்ந்து செய்யுங்கள் பணம் வரும் எனச் சொல்லுவார். நான் வணங்கும் தெய்வங்களை நெஞ்சார இரவும் பகலும் வேண்டிக் கொள்ளுவேன்.

கனடா இரதி, லோகநாதன், அவுஸ்திரேலியா பிரான்ஸ் பிள்ளைகள் திருமதி இராணி அவர்களும், திரு. கார்த்திகேயன் அவர்களும், இலண்டன் ஐ. கி. சம்பந்தன் அவர்களும் வெளிநாட்டிலிருந்தும் பணம் சேர்த்துத்தந்தவர்கள். முன் விறாந்தை, சீற்றும் போடப்பட்டது. இன்னும் முடிவு பெறாத வேலைகளும் செய்யப்பட்டது. 1987 இல் திருவாசகம் சுவாமிகள் எங்கள் வீட்டிற்கு வந்தார். யாழ். கல்வியங்காடு திவ்விய ஜீவன சங்கத்தில் சாமி முன்னிலையில் விழா ஒன்று நடாத்தும் நூல் ஒன்றும் வெளியிட்டு வைத்தோம். அன்றும் திருவாசகத்தை முன்னிலைப்படுத்திச் சுவாமிகள் உரையாற்றினார். இன்னும் சிலர் உரையாற்றினார்கள். இந்தக்காலத்தில் யுத்தம், குண்டு வீச்சுக்களும் நடைபெற்றதையும் பொருட்படுத்தாது, கோண்டாவில், திரு. சரவணமுத்து, ஊரெழு திருவடிவேலு, ஆழ்கடலான் பரமநாதன், திரு. தியாகராசா (S. T. R.) இரா. மகேந்திரசிங்கம், மகாதேவா சுவாமிகள், திரு. முருகுப்பிள்ளை. திரு. கிருபாகரன், சட்டத்தரணி கனகரத்தினம் என இன்னும் பலர் வந்திருந்தனர். எல்லோரும் சுவாமிகளிடம் ஆசிபெற்றனர். அன்னதான நிகழ்வும் இடம்பெற்றது.

திருவாசகம் சுவாமிகளிடம் ஒருமுறை ஒரு தாளையும், பேனையையும் வைத்துக்கொண்டு "உங்களின் அன்பர்களின் பெயர்களையும் சொல்லுங்கோ" எனக் கேட்டேன். உதைக் கொண்டு போ" (தாளையும் பேனையையும்) என்று சொல்லி, உனக்கு எல்லாம் தெரியவரும் என்றார். 1988 ஜனவரி முற்பகுதியில் சுவாமி உடல் தளர்ந்து, சிறிது சுகயீனமுற்றிருந்தார். "ஈழநாடு" பத்திரிகை வெளிவராமல் நிற்பாட்டி இருந்து, இந்தமாதம் வெளிவருவதாக அறிந்து, சுவாமிகள் சுகயீனமுற்றிருப்பதாக ஈழநாடு பத்திரிகைக்குச் செய்தியாகக் கொடுத்தேன். பலர் ஓடோடி வந்து பார்த்தனர். S. T. R. ஐயா வந்து பார்த்தார். அவருக்கு வாக்குகளும் கொடுத்தார். எனக்குப் பல அன்பர்கள் உள்ளனர். நீதான் கடைசியாகக் கிடைத்த அன்பன். என்னையும், மடத்தையும் பாரமெடு, எனக்கு சமாதி வைக்கவேண்டாம். எனக்கு பிறப்பு இருக்கிறது. இன்னும் சொல்லி அனுப்பினார். அவர் வேண்டுகோளின் படி திரு. தியாகராசா ஐயா அவர்கள் சபையை அமைத்துத் தலைவர் பதவியை ஏற்று, வேண்டிய எல்லாத் திருப்பணிகளையும் செய்து வருகின்றார். தை 25 ஆம் திகதி காலை திரு. பரமநாதன் வந்து பார்த்தார். சுவாமிகளைத் தனது குருவாக, தான் வெளியிட்ட புத்தகங்களில் போடப்பட்டு புத்தகங்களை வெளியிட்டவர். தற்போது கனடாவில் குடும்பத்தோடு வசிக்கிறார். சுவாமிகள் அவரிடம் இவ்வளவு காலமும் நான் உனக்கு திருநீற்றைப் பூசினேன். இன்று நீ எனக்கு உடம்பு முழுவதும் திருநீற்றைப் பூசு என்றதும், அவர் சொன்னபடி திருநீற்றைப் பூசினார். அந்த திருநீறு அழிய முன் மாலை 3 மணியளவில் பலரும் திருவாசகம் பாடிக்கொண்டும் "ஓம் சிவாய நம" என்ற மந்திரத்தை உச்சரித்துக்கொண்டிருந்தபோது, உடலம் விட்டார். அந்தக்காலம் மாலை 6 மணி தொடக்கம் அடுத்த நாள் காலை 6 மணி வரை ஊரடங்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம் 26 ஆம் திகதி 6 மணிக்கு சைக்கிளில் புறப்பட்டு கிட்ட உள்ளவர்களுக்கும், ஊரெழுவில் இருக்கும் திரு. பரமநாதன் அவர்களுக்கும் சொல்லி வந்தேன். வீட்டில் திரு. உமாபதி கந்தசாமி ஐயா தலைமையில் மரணச்சடங்குகள் சுவாமிகளுக்கு செய்ய வேண்டிய முறைப்படி அபிஷேகம் செய்யப்பட்டு, அதற்குரிய வாகனத்தில் துண்டி மயானத்திற்கு ஊர்வலமாகச் சென்று, சிவயோக சுவாமிகள் தகனம் செய்த இடத்திற்கு அருகாமையில், சுவாமியின் திருவுடம்பு சந்தனக்கட்டைகள் அடுக்கப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டு, கற்பூரத்தீயில் சங்கமித்தது.

## திரு. க. கிருபாகரன் அவர்களால்

சுவாமிகளின் புனித அஸ்தி அடங்கிய நினைவாலயம் மறவன்புலோவில் அமைக்கப்பட்டுள்ளது. ஆஸ்தியின் ஒரு பகுதி பாலாவியிலும் இராமேஸ்வரத்திலும் கரைக்கப்பட்டது. தொடர்ந்து சுவாமிகள் மறைவு தினம், பிறந்த தினங்களில், சுண்டிக்குளி விதானையார் வீதியிலும் , ஈச்சமோட்டை வயிரவர் கோயிலிலும் பூசை, பிரார்த்தனை, சொற்பொழிவுகள், திருவாசகம் முற்றோதல் என்பன நடைபெற்று வந்தன. மறவன்புலவு சமாதி நிலையத்திலும் பூஜை, பிரார்த்தனை நடைபெற்று வந்தன. 1992 இல் நாம் குடும்பத்துடன் கொழும்பு வந்து, சுவாமி பெயரில் சபையைப் பதிவு செய்து, வருடாந்த குருபூசை கொ/சரஸ்வதி மண்டபத்திலும், பிறந்தநாளான 28 பங்குனியில் பம்பலப்பிட்டி திருவாசக இல்லத்தில் திருவாசகம் முற்றோதல், சமய உரைகளும் நடைபெற்று வருகிறது. 2013 இல் சுவாமிகள் பெயரில் இந்து கலாசார மண்டபம் நிறுவப்பட்டு, சகல சமய நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றது.

---

திருக்கேதீஸ்வரம் சபாரத்தின சுவாமிகள் இந்து கலாச்சார மண்டபம் யாத்திரிகர்கள் தங்க, குளியலறைகளுடன் சேர்ந்த அறைகளும், மங்கள நிகழ்வுகள் நடாத்த மேடையுடன் மண்டபமும் அமைந்துள்ளது.

தொடர்பு
**த. துரைராசா**
31 A, ஜானகி லேன், கொழும்பு 04. Tel : 0114852232

## பொன் மொழிகள்

1. உனக்கு உதவி செய்தவரை மறக்காதே.
2. உன்னை விரும்புபவரை வெறுக்காதே.
3. உன்னை நம்பியவரை ஏமாற்றாதே.

*- அன்னை தெரசா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதிட ஆய்வாளர், ஆயர்பாடி இராமகிருஷ்ணன், திருவாசக சுவாமிகளின் சிவபதக்கோள்நிலை குறித்து பக்தி மலரில் (ப. -15) எழுதிய கருத்துக்கள்

சுவாமிகள் தமது அவதார கருமம் இனிதே நிறைவேற்றப்பட்டதை உணர்ந்து, இந்த உலகத்தை விட்டுச் சிவன்தாள் அடைந்தமையும் ஒரு முக்கியமான நாளாகவே கொள்ளப்படுகிறது. 1988.01.25 தைமாதம் பூர்வ பக்க ஸப்தமி அவர் இவ்வுலக வாழ்வை நீத்துள்ளார். இது சாதாரண ஸப்தமி அல்ல. ரத ஸப்தமி என்று சிறப்பித்துக் கூறப்படுகின்ற பாரதத்து பீஷ்மாச்சாரியார் இவ்வுலகை விட்டுப் பரமபதம் அடைந்த தினமாகும். கிரகங்கள் எம்மை ஆட்டுவிக்கின்றன. ஆனால், ஞானிகள் கிரகங்களைக் கட்டித் தமது எண்ணப்படி நடக்க வைக்கிறார்கள். எப்படி பீஷ்மர் உத்தராயண காலம் வரும்வரை அம்புப்படுக்கையில் இருந்து, தைமாதம் உத்தராயணம் வந்ததும், பூர்வ பக்கம் ஸப்தமித் திதியை தேர்ந்தெடுத்து யாக்கையை விட்டாரோ, அதேபோல் எமது சுவாமிகளும் அதே தினத்தில் தனது ஊனுடம்பைக் களைந்தமை, எமக்கு ஒரு புறம் ஆச்சரியமாகவும், மறுபுறம் பயபக்தியாகவும் காணப்படுகிறது. (பக்திமலர் 2004.01.15) அன்னை கிருஷ்ணாபாய் அவர்களும் சமாதியடைந்த சப்தமி தினத்திலேயாகும். ஆனந்தசாகரா திரு. ஏ. சீவரத்தினம் (பக். 116)

# மண்டபத்தில் 30.05. 2015 ஆன்மீகப் பெருவிழா

"திருப்பணித்தவமணி" சி. தியாகராசா (S. T. R) தலைமையில் ஆன்மீகப் பெருவிழா நடைபெற்றது. பிரதம விருந்தினர் மாண்புமிகு அமைச்சர் டி. எம். சுவாமிநாதன். பா. உ. அவர்கள் (புனர்வாழ்வு, புனரமைப்பு, இந்து கலாச்சார அமைச்சர்)

கௌரவ அதிதி, கௌரவ ஆ. நடராஜன் அவர்கள் (இந்தியத் துணைத் தூதுவர்)

சிறப்பு அதிதி, கௌரவ. ஏ. உமாமகேஸ்வரன் அவர்கள் (பணிப்பாளர், இந்து கலாசாரத் திணைக்களம்)

## மனம் அடங்க

மனமானது ஓடித்திரிவதால் பல துன்பங்கள் ஏற்படுகின்றன. அதனை அடக்குவதனாலேயே சுகம் உண்டாகிறது. கோயில் வழிபாடு, பூசை, யோகம் முதலிய எல்லா வகையான செயல்களும் மனதை ஒரு வழிப்படுத்தவே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புச் சொற்பொழிவாளர்கள்

கௌரவ S. தில்லை நடராசா அவர்கள் (கௌரவ செயலாளர் ஆறுமுகநாவலர் சபை, கொழும்பு.)

திருமதி பவானி முகுந்தன் அவர்கள், இந்து கலாசார திணைக்களம்.

பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன் அவர்கள். (யாழ். பல்கலைக்கழகம்)

"தமிழருவி" த. சிவகுமாரன் அவர்கள் (கௌரவ செயலாளர், தமிழ்ச்சங்கம், வவுனியா)

கலாபூஷணம் மாத்தளை வடிவேலன்.

பேராசிரியர். கலாநிதி க. நாகேஸ்வரன் (சப்பிரகமுவ பல்கலைக்கழகம்)

---

திரு. வே. பொ. மாணிக்கவாசகர் அவர்கள் அனைவரும் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் சபையின் சார்பாக, நினைவுச் சின்னம் வழங்கி, கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வு தேவாரத்துடன் நிறைவு பெற்று, அன்னதானமும் நடைபெற்றது.

உங்கள் அல்லது உங்கள் அன்பிற்குரிய மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள், பெற்றோர், பிறந்த நாள், திருமண நாள், பொன்விழா, வயிர விழா எதுவானாலும், இந்த மடத்தில் தரமான (சைவம்) அன்னதானம் செய்ய விரும்பினால் தொடர்பு கொள்ளலாம்.

**த. துரைராசா**
31A ஜானகி லேன், கொழும்பு – 04, ஸ்ரீலங்கா.
Tel : 011 4852232

## நன்றி மறக்காதீர்கள்

- சத்தியம் என்னும் தாய், ஞானம் என்னும் தந்தை, தர்மம் என்னும் சகோதரன், கருணை என்னும் நண்பன், சாந்தி என்னும் மனைவி, பொறுமை என்னும் புதல்வன் இவர்களே நமக்கு உற்ற உறவினர்கள் ஆவார்கள்.
- முதலை வாய்பட்ட மணியை எடுத்திடலாம். அலைபாயும் கடலையும் தாண்டிடலாம். நச்சுப் பாம்பையும் மாலையாகக் கழுத்தில் அணிந்திடலாம். ஆனால் மூடனைத் திருத்த யாராலும் முடியாது.
- தீப்பந்தத்தை கீழ்நோக்கிப் பிடித்தாலும் அதன் சுவாலை மேல்நோக்கி எழுதுவதுபோல், உயர்ந்த குணம் கொண்டவர்கள் தாழ்ந்த நிலையை அடைந்தாலும் அவர்கள் உயர்ந்த எண்ணங்களையே கொண்டிருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**திருவாசகம் சபாரத்தினம் சுவாமிகள்**
**இந்து கலாசார மண்டபம் திருக்கேதீஸ்வரம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீஸ்வரத்தில் அமைந்துள்ள
# திருவாசகம் சபாரத்தினம் சுவாமிகள் இந்து கலாசார மண்டபம்

திருக்கேதீஸ்வரத்திலுள்ள திருவாசக மடம் 1952 ஆம் ஆண்டில் ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகளால் நிறுவப்பட்டது. 1990 ஆம் ஆண்டாக இருக்கலாம். இந்த யுத்த காலத்தில் இந்த மடம் அழிக்கப்பட்டது. இவர் இதனைப் பல ஆண்டுகள் நடத்தி வந்துள்ளார். சுவாமிகள் திருவாசகத்தில் மிக்க ஈடுபாடுள்ளவராக அதனை முதன்மைப்படுத்தி சொல்லிலும், செயலிலும் திருவாசகநெறியினை வாழ்ந்து காட்டியதோடு, மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறிப் பலரைத் திருவாசகத்தில் ஈடுபடச் செய்தவர். குறிப்பாக, மார்கழி மாதத்திலே திருவெம்பாவைக் காலத்தில் திருவாசக விழாவை ஏற்பாடு செய்து நடத்தி வந்தவர். சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் செய்து வந்த திருப்பணிகளுக்கு மிகவும் உதவி செய்தார். அவர்களின் ஏற்பாட்டில் கௌரீசர் பாடசாலையையும், நெசவாலையையும் கட்டி முடித்தார். திருக்கேதீஸ்வரம் வரும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். தாம் அங்கு ஒரு குடிசையிலே வாழ்ந்து கொண்டு பல சேவைகள் செய்து வந்தார். அவருக்குப் பின் சி. சரவணமுத்து சுவாமிகள் திருவாசக மடத்தைத் தொடர்ந்து கவனித்து வந்தார். சபாரத்தினம் சுவாமிகள் இறைவன் திருவடி சேர்ந்த பின், அவரின் இலட்சியங்களை முன்னெடுப்பதற்காக, அவரது பெயரில் தொண்டர் சபை உருவாக்கப்பட்டது குறிப்பிடற்பாலது. திரு. எஸ். தியாகராஜா (எஸ். ரி. ஆர்.) தலைவராகவும், திரு. த. துரைராஜா செயலாளராகவும் இந்த தொண்டர் சபையில் பணிபுரிந்து வருகின்றனர்.

தொண்டர் சபையின் ஏற்பாட்டில் திருக்கேதீஸ்வர புண்ணிய பூமியில் சைவத்தமிழ் இந்து மக்களின் பண்பாட்டு நலன் கருதி புதிய இந்து கலாசார மண்டபமொன்று அமைக்கப்பட்டு, 2013 தை மாதத்தில் திரு. சி. தியாகராஜா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தொண்டர் சபையின் அனுமதிப்படி செயலாளர் கலாபூஷணம் தம்பு துரைராஜா அவர்கள் இலங்கையிலும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும் வசிக்கும் சைவத்தமிழ் அன்பர்களிடமிருந்து 7,200,000 ரூபா வரையில் பணம் சேர்த்து மண்டபத்தை அமைப்பதற்கு பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்.

*(தகவல்–ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபை)*

*இந்து ஒளியில் வெளியிடப்பட்டது.*

*நம்மிடமுள்ள தெய்வீக இயல்பை தொடங்குவதுதான், நீ சமய வாழ்க்கை வாழ ஆரம்பிப்பதற்கான முதல் படி.*

*ஆன்மீக இலட்சியத்தைப் புறக்கணித்து விட்டு மேலை நாட்டு நாகரிகத்தின் பின்னால் நீ செல்வாயானால் அதன் விளைவாக மூன்றே தலை முறைகளில் உனது இனம் அழிந்து போய்விடும்.*

*– சுவாமி விவேகானந்தர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் குருபூஜையும், திருவாசக விழாவும்

*குருப் பிரம்மா குரூர் விஷ்ணு குருத்தேவோ மகேஷ்வரஹா*
*குருசாஷ்த் பரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ*

தலைவர் அவர்களே, சிறப்பு விருந்தினர்களே, அன்புடைச் சகோதர சகோதரிகளே!

சில உடல் உபாதைகள் காரணமாக ஓரிரு மாதங்கள் ஒதுங்கி இருத்தல் உடலுக்கும், மனதுக்கும் ஓய்வு கொடுக்கும் என்று எண்ணியிருந்தேன். ஆனால், திடீரென்று சில நாட்களுக்கு முன்னர்தான் எப்பவோ தரப்பட்ட அன்பு அழைப்பானது ஞாபகத்திற்கு வந்தது S. T. R அவர்களும் திரு. துரைராஜா அவர்களும் என்னைப் பல வாரங்களுக்கு முன், நான் தென்னிந்தியா செல்ல முன் சந்தித்து இந்த அழைப்பை விடுத்திருந்தார்கள். அப்பொழுது 2010 ஆம் ஆண்டுக்கான புதிய நாட்குறிப்பு கிடைத்திருக்கவில்லை. இதனால் 23 ஆந்திகதிய கூட்டத்தைப் பற்றி நான் எங்கும் குறிப்பிட்டு வைக்கவில்லை. உண்மையில் மறந்து விட்டேன்.

ஏதோ காத்திரப்பிரகாரமாக மூன்று நாட்களுக்கு முன்னர்தான் கூட்டம் பற்றிய நினைப்பு வந்தது. உடனே "ஈர்த்தென்னையாட்கொண்ட எந்தை பெருமானே" என்ற சிவபுராண வரிகள் தான் எனக்கு நினைவிற்கு வந்தன. குதிரை வாங்கப் போன மாணிக்கவாசகரை வலியத் தன்பால் வருவித்து இறைவன் ஆட்கொண்டமையால், அடிகளார் "ஈர்த்தென்னை" என்றார். இம்மாதம் 29 ஆந் திகதி கம்பன் விழா தொடங்கும் வரையில் எனக்கு எந்தப் பொதுக்கூட்டங்களும் இல்லை என்று நினைத்திருந்த என்னை இறைவன் ஈர்த்திழுத்து ஸ்ரீ சபாரத்தின சுவாமிகளின் குரு பூஜை பற்றியும், திருவாசக விழா பற்றியும் எனக்கு எப்படியோ தெரிவித்து விட்டான்.

இந்துக்களாகிய எமக்கு இருக்கும் மிகப்பெரிய சேமிப்புத் திரவியம் எமது பக்தி இலக்கியமாகும். உலகில் வேறெந்த மதத்தினருக்கும் இல்லாத அளவு பக்திப்பரவசமூட்டும் பாடல்கள் தமிழிலும், பிற இந்திய மொழிகளிலும் எம்வசம் இருக்கின்றன. காலத்துக்குக் காலம் இப்பாடல்கள் அழிந்து போய் அவற்றின் தொகை குறைந்து கொண்டு வந்திருந்தாலும் கைக்குக் கிடைத்திருக்கும் பாடல்களின் தரம் மிகச் சிறந்ததே. அதைத் தெரிந்து கொண்டால்தான் திருக்கேதீஸ்வரம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் தமது வாழ்க்கையின் நங்கூரமாகத் திருவாசகத்தை வைத்துப் போற்றி வந்தார். திருவாசகப் பாடல்களைக் கேட்டுக்கேட்டு நெஞ்சுருகிக் கண்ணீர் பெருக்கினார். அப்பாடல்களில் மெய்மறந்து கலந்திருந்து, அற்புதமான அதிசிறந்த கருத்துக்களை அவை பற்றி அடியவர்களுக்கு அறிமுகம் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் சிந்துவது என்பது ஆத்மீகத்தில் ஒரு முக்கியமான கட்டம். பக்தி மார்க்கத்தின் ஆணிவேர் கண்ணீர் சிந்துதல்தான் என்றால் அது மிகையாகாது. மற்றைய மார்க்கங்களை எடுத்துக் கொண்டோமானால் கண்ணீர் சிந்துவது அங்கு அதிகம் காணப்படுவதில்லை. ஞான மார்க்கத்தில் திளைத்தவன் இறைவனை அறியப் பாடுபடுகின்றான். அவனின் மூளைக்குத்தான் அதிக வேலை. கர்ம மார்க்கத்தில் திளைப்பவன் கடமையில் அமிழ்ந்து விடுகிறான். அவனின் உடலுக்குத்தான் அதிகவேலை. தியான மார்க்கத்தில் திளைக்கும் ஒருவன் மூளையையும், உடலையுந் தனியே விட்டு விட்டு, விழிப்புணர்ச்சியில் இருக்கப் பாடுபடுகின்றான். இவர்கள் யாவரிலும் ஆணவமானதுதான் என்ற சிந்தனையானது அகந்தையானது ஒட்டிப் பிடித்துக்கொண்டேயிருக்கும். என்னால் இறைவனை ஞானத்தால் அறியமுடியும். அடைய முடியும் என்று எண்ணுகிறான். ஞான மார்க்கத்தில் திளைப்பவன் மற்றையோருக்கு நான் சேவை செய்து, என் கடமைகளைச் செவ்வனே செய்வதால் என்னால் இறைவனை அடைய முடியும் என்கின்றான் கர்மயோகி. நான் விழிப்புணர்ச்சியில் இருந்து நானே ப்ரம்மன் என்பதை உணர்வேன் என்கின்றான் தியான மார்க்கத்தில் ஈடுபடுபவன். இவர்கள் யாவரும் ''நான்'' என்ற மாயையில் அகப்பட்டுக் கொண்டிருப்பவர். ஆனால் பக்தி மார்க்கத்தில் திளைப்பவர் எதைக் கூறுகின்றார்?

"யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனை வந்துறுமாறே."

''நான்'' என்றும் எனதென்றும் இதுவரை காலமும் அரற்றி வந்ததெல்லாம் பொய் என்கின்றார் பக்தராகிய மாணிக்கவாசகப்பெருமான். இவ்வாறு சிந்திக்க வைத்த என் நெஞ்சம் கூட வஞ்சமுடையதே. ஆகவே, அதுவும் பொய் என்கின்றார். இறைவன் மீது நான் பற்றுடையேன் என்று கூறும்போது அந்த ''நானே'' பொய்யானபோது என் அன்பு எப்படி உண்மையாக இருக்கமுடியும்? ஆகவே அந்த அன்பும் பொய் என்கிறார். ஒரேயொரு மார்க்கம் இருப்பதை மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தில் திருச்சதக 90 ஆவது பாடலிலே வலிந்துரைக்கின்றார். என்ன அது? அதுதான்; ''ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே'' என்று கூறும் அந்த உபாயம். அழுதல் ஒன்றுதான் இறைவனை அடைய வழி என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார். மேற்படி திருவாசகத்தில் மனித வாழ்க்கையின் மூன்று முக்கிய தன்மைகளை எமக்கு உணர்த்துகின்றார் மாணிக்கவாசகர்.

1. முதலில் வாழ்வே மாயம் என்பது பற்றி,
2. அடுத்து எமது மனம் இறைபொருளை நோக்கும் விதம் பற்றி,
3. ஈற்றில் இறைபொருளின் தன்மைபற்றி

அதாவது வாழ்வில் ''நான்'', ''நான்'' என்று அலைந்து திரிந்ததில் அந்த ''நான்'' என்ற கூறுக்கு எதுவுமே ஆற்ற முடியாதிருப்பதை உணர்ந்து அந்த ''நான்''என்பது ஒரு பிரமை என்பதை முதலில் உணர்த்துகின்றார். ''நானே பொய்'' என்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



23.01.2010 பம்பலப்பிட்டி சரஸ்வதிமண்டபத்தில் நடைபெற்ற திருவாசகம் ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகளின் குருபூசை, திருவாசக விழாவிலும் சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்ட மாண்புமிகு சி.வி.விக்னேஸ்வரன் உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் சபையின் செயலாளர் "கலாபூஷணம் தம்புதுரைராசா சபையின் முன்னேற்றத்திற்காகச் செய்துவரும் சேவைகளைப்பாராட்டிப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

அதேநேரம் மாயம் நானென்றால் எது உண்மை என்ற கேள்விக்கு சகல பலமும் பொருந்திய இறைபொருளே உண்மை என்றுரைக்கின்றார். அவரின் மனம் அனுபவத்தால் அறிந்து கொண்டிருப்பதை எமக்குணர்த்துகின்றார். தேனே, அமுதே, கருப்பஞ்சாறே இவை போன்று இனிமை பயக்கும் இறை பொருளே என்று இறைவனை இனியவற்றுடன் ஒப்பிடுகின்றார். இறைபொருள் ஒன்றுதான் உண்மையும் இனிமையுமானது. அவன் இன்றி 'நான்' என்ற இந்த அலகு அசையாது. அவனின்றி அணுவும் அசையாது என்பதை உணர்ந்த மாணிக்கவாசகர் 'தான்' பொய் என்றாகிவிட்டதன் பின் எச்சமாக எது உள்ளதோ அது அந்த இறைபொருளுடன் சென்று கலக்க வேண்டும் என்கின்றார். 'அடியேன் உனை வந்துறுமாறே' என்கின்றார். அது எவ்வாறு சாத்தியமாகும் என்ற கேள்விக்குத்தான் 'ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே' என்று பதிலிறுக்கிறார். இங்கு இறைவனை நோக்கும் விதத்தை எமக்குணர்த்துகிறார்.

அழுவது எதற்காக என்றால் நான் இதுகாறும் செய்த பாபச் செயல்களை எண்ணி அழுகின்றேன். அவற்றைச் செய்ததால் ஏற்பட்டிருக்கும் மனக்கிலேசத்தால், வெட்கத்தால் அழுகின்றேன். அதற்கு மன்னிப்புக் கேட்டு அழுகின்றேன். என்னை உன்னுடன் சேர்த்துக்கொள் என்று அழுகின்றேன். இவ்வாறு அழுதல் என்பது எமது பாபவினைகளை, பாபச் சுமைகளை. பாபங்கள் பற்றிய எமது எண்ணங்களைக் கழுவிச் சுத்தம் செய்யப் பயன்படுகிறது. மனதைத் தூய்மைப்படுத்துவது கண்ணீர். மெய்ப்பொருளுடன் எம்மை ஒன்ற வைப்பது கண்ணீர். 'நான் என்ற அகந்தையைக் கரையச் செய்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர். இதனால்தான் பக்தி மார்க்கமே இன்றைய காலகட்டத்திற்கு அதிசிறந்த ஆன்மீக வழி என்று பெரியோர்கள் கூறிச் சென்றுள்ளார்கள்.

அந்த வழி எமக்குணர்த்துவது தேவார திருவாசகங்கள், எமது பக்தி இலக்கியங்கள். அவற்றுள் தலைசிறந்தது திருவாசகம். "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது நூற்றுக்கு நூறு உண்மை. பொருள் உணர்ந்து உணர்ச்சி பொங்க உரியவாறு பாடும் திருவாசகம் கண்ணீர் பொழியச் செய்யும்.

அப்பேர்ப்பட்ட திருவாசகத்தையே ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் தமது வாழ்வின் நங்கூரமாகவும் கலங்கரை விளக்காகவும் ஏற்றுக் கொண்டார். திருவாசகத்தை ஓதி ஓதி உள்ளொளி பெற்றவர் சுவாமிகள். அவர் பக்தர்களின் உடற்பசியையும், மனப்பசியையும் தீர்க்க முறையே அன்னதானமும், திருவாசக வித்தியாதானமும் செய்து வந்தார். பலகாலம் திருக்கேதீஸ்வரத்தான் நிழலில் வசித்து வந்த அவர் கடைசி நாட்களில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தார். 1988 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆந் திகதி இவ்வுலக வாழ்வை அவர் நீத்ததால் தை மாத பூர்வ பக்க சப்தமி திதியில் அவரின் குருபூஜை வந்துள்ளது. நேற்றுத்தான் ஸப்தமி.

சுவாமிகளின் குருபூஜையும், திருவாசக விழாவும் சேர்த்து நடாத்தப்படுவது சாலச்சிறந்ததே. திருவாசகத்தின் பயன்பெற்ற திரு. அவதாரர் சுவாமிகள் அவர்கள். ஆகவே இரண்டையும் ஒருமித்து நடத்துவது சிறந்ததே.

இன்று மேலும் இரண்டு மகிழ்வூட்டும் நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஏறக்குறைய 20 வருட காலமாக ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகளது தொண்டர் சபையின் கௌரவ தலைவராகக் கடமையாற்றி அதன்போது அரும்பெரும் ஆன்மீகத் தொண்டாற்றி வந்துள்ள எனது நண்பர் 'திருப்பணி தவமணி' S.T.R. அவர்களது (திரு. எஸ். தியாகராஜா அவர்களது) சமய சேவையினைப் பாராட்ட இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அதே தொண்டர் சபையின் கௌரவ செயலாளராக, அதே இரு தசாப்த காலமாக அரும்பணி புரிந்த 'கலாபூஷணம்' தம்பு துரைராசா அவர்களது சமயப்பணிகளைப் பாராட்டவும் இருக்கின்றார்கள். தன்னலமற்ற சிறந்த சேவைகளை இயற்றும் அன்பர்கள் எமது வணக்கத்திற்கும் பாராட்டுக்கும் உரியவர்கள். அவர்கள் மேன்மேலும் தமது சமயப் பணிகளை விரிவடையச் செய்து, தமிழுக்கும் சைவத்திற்கும் அருந்தொண்டு ஆற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவர்களுக்கு இறைவன் நீண்ட ஆயுளும் சுகவாழ்வும் அளிக்க வேண்டும் என்றும் பிரார்த்தித்து இந்தச் சிற்றுரையை இத்துடன் முடிக்கின்றேன்.

**"திருப்பணித் தவமணி" S. T. R. அவர்களின் தலைமையில், ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகளின் 22வது ஆண்டு குருபூஜையும் திருவாசக விழாவும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில், 23.01.2010 அன்று இடம்பெற்ற போது, கௌரவ விருந்தினர், உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர், வடமாகாண முதலமைச்சர் சத்திய வித்தகர் மாண்புமிகு க. வி. விக்னேஸ்வரன் அவர்களின் உரையிலிருந்து.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*S. Thiyagarajah STR*
PRESIDENT
D/3/1, Govt. Flats,
Colombo - 04.
Tel : 011 - 2582597

THIRUVASAGAM
**SRIMATH SABARATNAM SWAMIGAL**
**THONDAR SABAI**
Registered No.HA/4/MN/36 dated 1991.11.23

*T. Thurairajah*
SECRETARY
"Thiruvasagam"
31A, Janaki Lane, Bambalapitiya,
Colombo - 04.
Tel : 011 - 4852232

சி. தியாகராஜா STR
தலைவர்
D3/1, அரச தொடர் மாடி,
கொழும்பு - 04.

உ
சிவமயம்

த. துரைராசா
செயலாளர்
"திருவாசகம்"
31A, ஜானகி வீதி,
பம்பலப்பிட்டி,
கொழும்பு - 04.

திருவாசகம்

# ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபை



பூநகரி, தம்பிராய், சாத்தாப்பிட்டி வயிரவர் ஆலயம் 2015 யூலை மாதம் வருடாந்த பொங்கல் விழா. நானும் துணைவியாருடன் போயிருந்தேன். வடக்குப் பக்கமாகவுள்ள பிள்ளையார் கோயிலில் இருந்து பெரிய மண்பானைகள் 12 கொண்டு வரப்பட்டு குறிப்பிட்ட வயிரவர் கோயிலுக்கு வந்தோம். இரவு 11 மணியளவில் இரவு முழுவதும் பழவகைகள் படைக்கப்பட்டு 12 பானைகளுடன் சிறிய பானைகளிலும் பொங்கல் நடைபெற்றது, அதிகாலை 4.00 மணியளவில் பொங்கல், பழங்கள் படைக்கப் பெற்று எல்லா விக்கிரகங்களுக்கும் பூசை, தீபாராதனை நடைபெற்றது. சிலருக்கு சுவாமி கலையும் வந்து நல்வாக்குகளும் கொடுத்தார்கள்.

யுத்தகாலம் 2012 வரை கோயில் பூசை நடைபெறவில்லை. இராணுவம் இருந்தமையால் 2013, 2014, 2015 பொங்கல் விழா நடைபெற்றது.

கோயிலின் தற்போதைய நிலை, வயிரவர் ஆலயம் தம்பிராய் மேல் கூரை ஒடுகள் இல்லை. பக்க அடைப்புகளும் இல்லை. பக்கங்கள் தடிகள் போடப்பட்டு மரத்தூண்களுடன் காணப்படுகிறது. வயிரவ சூலங்களும், வேறு சில விக்கிரகங்களும் வெறும் தரையில் வைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியம் செய்து தர வேண்டிய வேலை, மூலஸ்தானத்துடன். முதலில் மண்டபமும் கிணறும், மலசல கூடமும் வருபவர்கள் தங்குவதற்கான ஒரு அறையுடன் மண்டபம். இங்கு காரிலோ வானிலோ போகமுடியாதுள்ளது 3 சில்லு ஆட்டோவும் கஸ்டப்பட்டு, சில இடங்களில் இறங்கித்தான் போக வேண்டும்.

## கிறவல் வீதியாவது தயாரித்துத் தரும்படி கேட்கிறோம்

ஆட்சி உரிமை பரிபாலனம், வம்சாவளியினர் யாழ்ப்பாணம் 1924க்கு முன் வ. சுப்பையா, பின் வ. தம்பு மறைவு வ. தம்பு மகன் துரைராசா 31 A ஜானகி வீதி. கொழும்பு 04 இருக்கிறார் பூநகரி, தம்பிராயில் 1) தம்பையா 2) குஞ்சுப்பிள்ளை 3) பிள்ளையினார் 4) செல்லையா 5) முருகேசு மறைவு வாரிசாக செல்லையா மகன் ஆறுமுகம் இருக்கிறார். சண்முகலிங்கம் (தவம்) பூசகர்.

## இவர்களுக்குச் சமர்ப்பணம்

கௌரவ அரச அதிபர் செயலாளர், பிரதேச சபைத்தலைவர் செயலாளர் மாண்பு மிகு அமைச்சர் டி. எம். சுவாமிநாதன், செயலாளர், அவர்கள் இந்துமதி, கலாசார அலுவல்கள் அமைச்சு கொழும்பு 03. கௌரவ முதலமைச்சர் வடமாகாணசபை சி. வி. விக்னேஸ்வரன், இந்திய துணைத்தூதுவர் கௌரவ ஆ. நடராஜன் யாழ்ப்பாணம், பணிப்பாளர் இந்து கலாசார திணைக்களம் கௌரவ ஏ. உமாமகேஸ்வரன், கணக்காளர் காண்டீபன் அவர்கள், தலைவர் அகில இலங்கை இந்து மாமன்றம் கௌரவ நீலகண்டன் அவர்கள், பிரதித்தலைவர். கௌரவ மா. தவயோகராசா, பொதுச்செயலாளர் கலாநிதி. மு. கதிர்காமநாதன் அவர்களுக்கும் மற்றும் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட கௌரவ உறுப்பினர்களுக்கும் நூல் அனுப்புவேன்.


தொடர்பு முகவரி :

**பி. சண்முகலிங்கம் (தவம்)**

தம்பிராய், பூநகரி.

தொலைபேசி : 0775002832

**கலாபூஷணம் த.துரைராசா**

31A ஜானகி லேன், கொழும்பு 04.

தொலைபேசி : 011 4852232.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷணம் 2009
# அரசு விருது விழா



முழுப்பெயர் : திரு.தம்பு துரைராஜா

பிறந்த திகதி : 16.09.1924

வயது : 84

விலாசம் : 31 ஏ ஜானகி லேன், கொழும்பு 4

மாவட்டம் : கொழும்பு

துறை : இலக்கியம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர். ஓர் சமூக சேவையாளர் ஆவார். இந்து சமய நூல்களை பதிப்புச் செய்து வெளியிடுதல். சமய சொற்பொழிவுகள் ஆற்றுவிப்பது, சமய விழாக்கள். திருமுறை முற்றோதல் செய்தல், சமய ஊர்வலங்கள் போன்ற நிகழ்வுகளை ஒழுங்கமைத்து சிறப்புற நடாத்தி வருகிறார். சமய நிறுவனங்களுக்கு வேண்டிய உதவிகளை தாம் செய்வதுடன் ஏனையவர்களையும் அத்தகைய சமய, சமூகப் பணிகளில் ஈடுபடுத்தியும் வருகின்றார். இவரது பணிகள் அனைத்தும் இந்து சமய, தமிழ் கலை கலாசாரத்தை மேம்படுத்தி வளர்க்கும் வண்ணமாக அமைந்துள்ளன. அந்த வகையில் இவரின் சமய, இலக்கிய நூற் தொகுப்புக்களான "மானிட வாழ்வின் மகத்துவம்" "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்." "ஈழத்துச் சிவாலயங்கள்" – 1&2 ஆகியன சிறந்தனவாக விளங்குகின்றன. பல சமய, சமூக நிறுவனங்களில் பொறுப்பான பதவிகளையும் வகித்து அரிய சேவைகளைச் செய்துள்ளதுடன் தளராமல் இன்றும் செய்து வருகிறார். கடந்த 60 வருடங்களுக்கும் மேலாக இத்தகைய உயர்ந்த சமூகப் பணிகளைச் செய்து வருகின்றார். இவரின் இப்பணிகளைப் பாராட்டி, சர்வதேச இந்துமத குருபீடம் இவருக்கு 'சிவநெறிக் கலாநிதி' என்ற பட்டமளித்து கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷண விருது

இலங்கை கலைத்துறையின் முன்னேற்றத்தின் பொருட்டு பங்காற்றிய மிகச் சிறந்த சேவைக்கான உபகாரமாக,

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும். கலாபூஷண விருது.

**கொழும்பு பம்பலப்பிட்டி திரு. தம்பு துரைராசா**

என்பவருக்கு 2009 திசெம்பர் மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற கலாபூஷண விருது வழங்கும் விழாவில் வழங்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

**ஈ. எம். அபேயரத்தின**
கலாசார அலுவல்கள் பணிப்பாளர்

**விமல் ரூபசிங்க செயலாளர்,**
கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சு

**ஜோன் த. சில்வா ஞாபகார்த்த மண்டபம்,**
**ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு 7.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷணம் திரு. த. துரைராசா அவர்கள் ஞானச்சுடர் மலருக்கு வழங்கிய கட்டுரை

# நந்திக்கொடி சைவக்கொடி

காலத்தால் வரையறை செய்யமுடியாத மிகத்தொன்மையான சமயம் சைவம். சைவத்தின் முழுமுதற்கடவுள் சிவபெருமான். அவனும்கால நியதிக்கு அப்பாற்பட்டவன். இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்று எழுதிக்காட்ட முடியாத தொல்லோன். முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதியோனான பெற்றியன். அவனைத் தாங்கி நிற்கும் வாகனம் அறத்தின் வடிவமான இடபம். அவன் உயர்த்தி நிற்கும் கொடி தருமதேவதையான ஏற்றுயர் கொடி – நந்திக்கொடி.

எல்லாத் தெய்வங்களிற்கும் கொடிகள் உண்டு. வருணனுக்கு மகரக்கொடி, நான்முகனுக்கு அன்னக்கொடி, திருமாலுக்கு கருடக்கொடி, இந்திரனுக்கு ஐராவதக்கொடி, என்று இருந்தாலும், காலத்தால் மூத்த சிவனாரின் நந்திக் கொடியே ஏற்றமும், சிறப்பும் மிக்கதாகும்.

சைவத்தைப்போற்றி நின்ற பல்லவர்களின் இலச்சினை நந்தியாகும். பல்லவ அரசர்கள் நந்திக்கொடியைத் தங்களது வெற்றிக்கு ஆதாரமாகக் கொண்டனர். தங்களது நாணயத்தில் நந்தியின் திருவுருவத்தைப் பொறித்து மகிழ்ந்தனர். பல்லவ அரசர்களின் பெயர்களிற்கூட முதலாம், இரண்டாம். மூன்றாம் நந்திவர்மன் எனப் போற்றப்பட்டார்கள். மூன்றாம் நந்திவர்மனே "தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் "தமிழ் நந்தி" என்று புகழப்பட்டவன். அவனது வாழ்வின் நிறைவே "நந்திக்கலம்பகம்."

திருநந்திதேவர் சிவபெருமானின் மெய்யடியவர். தீட்சை அருளப்பெற்றவர். திருக்கைலாயத்தின் தலைமைக் காவலன். சிவன் கோவில்களிலே நந்தியெம்பெருமானின் உத்தரவைப் பெற்றே உள்ளே செல்லவேண்டும். பிரதோஷ காலங்களில் நந்தி தேவருக்கே சிறப்பு. அவரது கொம்புகளுக்கு இடையேதான் சிவபெருமானை தரிசனம் செய்யவேண்டும். நந்திதேவர் வேறு – சிவன் வேறு அல்லர். நந்தியே சிவபெருமான் ஆவர்.

அரசியலிலும் ஆன்மீகத்திலும் மிக உயர்ந்த நிலையிலுள்ள "நந்திக்கொடியே சைவக்கொடி" என்று உலக மக்களின் மனங்களிலே சிறந்த் கருத்தை வேரூண்டச் செய்து நந்திக்கொடியை சமய விழாக்களிலும், பாடசாலைகளிலும் ஏற்றவேண்டும் என்று பெரு முயற்சி செய்து, பெரும் பொருட் செலவில் நந்திக்கொடிகளை அச்சிட்டு இலவசமாக விநியோகித்து, நந்தி புகழ் பரப்பும் விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை – தனபாலா அவர்களின் புகழ் ஓங்க, வாழ்வு சிறக்க அவரை வாழ்த்துவது சைவப் பெருமக்களின் கடமையாகும்.

வாழ்க நந்தி நாமம்!

**கலாபூஷணம் திரு. த. துரைராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷணம் திரு. த. துரைராசா அவர்கள் பக்தி பாமாலை என்ற நூலுக்கு வழங்கிய முன்னுரை

"ஆக்கம் ஒன்று எழுத்து வடிவில் இருப்பதிலும் பார்க்க, இசை வடிவம் பெறும் பொழுது மனதுக்கு நிறைவுதரும்." இவ்வாக்கியத்தைக் கவிஞர் துரையர் அவர்கள் குறிப்பிட்டிருந்ததை ஒரு பத்திரிகையில் கண்ணுற்றேன். ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் பற்றிய முன் வெளிவந்த பாடல்களையும் இன்னும் திருப்பாடல்களையும் சேர்ந்து ஒரு நூல் வெளியிட விரும்பினேன்.

கலாபூஷணம் வை. க. சிற்றம்பலம் அவர்களிடம் கேட்டதற்கிணங்க அப்பெரியார் சபாரத்தின சுவாமிகள் பற்றிய திருப்பாடல்களை எழுதி அனுப்பினார்.

அத்துடன் அவர் மகன் ஆசிரியர் சிவஞானராசா அவர்களும் சில பாடல்களை அனுப்பினார்.

அருட்கவி. சி. வினாசித்தம்பி அவர்களும், பிள்ளைக்கவி வ. சிவராசசிங்கம் அவர்களும் பாடல்களை அனுப்பினார்கள்.

கையெழுத்திலுள்ள பாடல்களை அச்சேற்றுவதற்குப் பணத்திற்காக இறைவனையும், குருவையும் இரந்து வேண்டினேன். நினையாப்பிரகாரமாக கனடா அன்பர் ஒருவரைச் சந்தித்து பாடல்களையும் சுவாமி பற்றிய முன்னைய வெளியீடுகளையும் மகான்களின் படங்களையும் அவர்களின் திருவருட் செயல்களையும் கையெழுத்தில் உள்ளவற்றையும் காட்டினேன்.

"இவையெல்லாம் புத்தகமாக வெளிவர வேண்டும்" என்று அவரும் சொன்னார். "பணத்திற்காக இறைவனை வேண்டிக் கொண்டிருக்கிறேன்" என அவரிடம் சொன்னேன். "பணம் நான் தருகிறேன்" புத்தக வேலையைத் தொடங்குங்கள் என்றார் கனடா அன்பர்.

மேல் குறிப்பிட்டவர்களின் பாடல்களுடன் சுவாமிகள் பற்றிய முன் வெளி வந்த பாடல்களையும் சித்தர்கள், மகான்களின் படங்கள், திருவருட் செயல்கள் ஈழத்துச் சமாதிக் கோயில்கள் பைந்தமிழ் வளர்த்த கல்விமான்கள் சிலரின் படங்கள், சிறு குறிப்புக்களுடன் இந்நூல் வெளியாகிறது.

**திரு. த. துரைராசா,**
*தொகுப்பு, பதிப்பு ஆசிரியர்.*
*(பக்திப்பாமாலை 2005)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்ற நூலுக்கு இரா. நாகலிங்கம் அவர்கள் வழங்கிய குறிப்புரை

## மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

திருவாசகத் தொண்டர். திரு. துரைராசா அவர்களின் மற்றொரு வாழ்வியல் நூல் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" மிகப் பொருத்தமான தலைப்பு. தலைப்பைப் பார்த்தவுடன் தேவாரம் முழுவதும் நினைவுக்கு வருகிறது.

*"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்*
*எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை*
*கண்ணில் நல்ல துறம் கழுமல வளநகர்ப்*
*பெண்ணில் நல்லா ளொடும் பெருந்தகை இருந்ததே"*

இதன் கருத்தை இன்னும் சுருக்கி "ஒரு பொல்லாப்பும் இல்லை" என்ற மகாவாக்கியம் ஆக்கினார் யோகர் சுவாமிகள்.

ஆக, மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு எல்லா வழிகளும் இருக்கின்றன. அவை நமக்கு அருகிலேயே உள்ளன. இன்னும் சொல்லப் போனால் அவை நமக்குள்ளேயே இருக்கின்றன. அவற்றை உணர்ந்து, புரிந்து, வாழ்க்கை நடாத்தினால் "இன்பமே எந்நாளும் துன்பமில்லை."

இந்து தத்துவங்களைப் பற்றி, இந்து சமய அனுஷ்டானங்களைப் பற்றி ஆயிரம் ஆயிரம் நூல்கள் வெளிவந்துள்ளன. அவை ஆயிரம் ஆயிரம் பக்கங்களைக் கொண்டும் உள்ளன. இவ்வாறே ஏனைய சமய நூல்களும் வெளிவந்துள்ளன. இதை விடப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், மேதைகளும் எழுதும் நூல்கள் நாளும் பொழுதும் வெளிவந்து கொண்டேயிருக்கின்றன. ஆனால் இவை சாதாரண மக்களால் கிரகிக்க முடியாதவை. இவற்றுக்கு மத்தியில் அவ்வப்போது வெளிவரும் சில சிறுநூல்கள் மிகுந்த பயனைத் தருகின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபகதைகள் போல அவ்வாறான ஒரு நூல் தான் இந்த "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்." விதம் விதமான கார்கள் பயணத்துக்கென உருவாக்கப்பட்டாலும், துவிச்சக்கர வண்டி அன்று முதல் இன்றுவரை மனிதனுக்குப் பயன்படுவது போல இந்த நூல்களும் மனித வாழ்க்கைக்குப் பெரும்பயனைத் தருகின்றன.

இன்னும் சொல்லப்போனால் பெரிய நூல்களைப் படித்துக் கிரகிக்க முடியாத பல விடயங்களை, இச்சிறு நூல்கள் மிக இலகுவாக மனதில் பதித்து, இதயத்தில் நிலைநிறுத்தி விடுகின்றன. இதற்கு ஒரு நல்ல உதாரணம் தென்கச்சி சுவாமிநாதனின் "இன்று ஒரு தகவல்" வானொலி உரை நூல்.

இதே பாணியில் திரு. துரைராசாதான் கண்டு கேட்டுப் படித்துப் பயன்பெற்ற விடயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறார். அதன் வெளிப்பாடே இந்த நூல். ஏற்கனவே அவர் மானுட வாழ்வின் மகத்துவம் என்ற தலைப்பில் இதுபோன்ற ஒரு நூலை எழுதியுள்ளார். அதன் இரண்டாம் பாகமாகக் கூட இந்நூலைக் கொள்ளலாம்.

கண்ணதாசனின் "அர்த்தமுள்ள இந்து மதம்" நூல் வரிசையில் பத்து நூல்கள் வெளி வந்துள்ளன. இவை மக்களிடையே மிக வேகமாகப் பரவின. விற்பனையில் வெற்றிக்கொடி நாட்டின. அதற்குக் காரணம் அவற்றில் சொல்லப்பட்ட விடயங்கள் மிகச் சுருக்கமான முறையில் அமைந்திருந்ததுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே இந்நூலில் சொல்லப்படும் விடயங்களும் இரத்தினச் சுருக்கமாக அமைந்துள்ளன. தெள்ளிய ஆலின் சிறுபழத்தொருவிதை போல, இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ள விடயங்கள் (அ) சமயம் (ஆ) ஒழுக்கநெறி (இ) இல்லறம் (ஈ) மருத்துவம் (உ) ஆரோக்கியம் (ஊ) குழந்தை வளர்ப்பு (எ) மனையியல் (ஏ) பழக்க வழக்கம் (ஐ) மன அமைதி எனப் பல்வேறு பொருள்களில் அமைந்துள்ளன. இவை யாவும் வீரகேசரிப் பத்திரிகையிலிருந்து தொகுக்கப்பட்டுள்ளன.

பல மலர்களில் இருந்து மகரந்தத்தைச் சேகரித்துத் தேனாக நமக்குத் தரும் தேனீயைப் போல நூலாசிரியர் இப்பணியைச் செய்துள்ளார். தாமரையும், றோசாவும், சண்பகமும் நிறைந்திருக்கும் ஒரு மலர்த்தோட்டத்தில் பவளமல்லி தனித்துவம் பெற்றிருப்பதையே இந்நூல் நமக்கு நினைவூட்டுகிறது.

இந்நூலில் இடம்பெறும் 85 குறிப்புகளில் அநேகமானவை நாம் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல பழக்கவழக்கங்களை வலியுறுத்துகின்றன. பிறரோடு பழகும்போது இங்கிதமாய்ப் பழகவேண்டியதன் அவசியத்தை எடுத்துக்கூறுகின்றன. மனிதநேயம் மலர்வதற்கும், மன அமைதி பெறுவதற்கும் இவை மிகமிக அவசியமானவை என்பது அனுபவம் தரும் பாடம்.

